BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

Paper - 04 Issue - 81 02 Friday November 2007

விற்பனைக்கல்ல

- நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
- வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
- உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

**Forward Consultants**

1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052

## பொய்யில்லை பாரெணை
## பொங்கலுக்கு புதுவாழ்வு தானெணை



**VISION TRAVEL & TOURS**

உலகின் அனைத்து இடங்களுக்கும் மலிவான விலையில் பிராயண ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு.....

SHIPPING | TRAVEL & TOURS | AIRFREIGHT TO WORLDWIDE

Part of Serendip Lanka Travels

Tel : 020 8772 7991-2 Fax : 020 8772 7993

உங்கள் வீட்டை உடனடியாகவோ சடுதியாகவோ விற்க வேண்டுமா ?

TO SELL YOUR HOME IMMEDIATELY OR QUICKLY

CALL FREE 7 DAYS A WEEK 0800 008 6714

**HIP TEAM 1**

We arrange for our clients FREE & QUICK VALUATION-HIP-CONVEYANCING

**Colombo Special £ 250** + Taxes

Air fares & Ticketing

Please call us on

Tel: 020 8866 6006

020 8866 6011

IATA

Cheapest tickets Worldwide

**United Travel Ltd**

428, Rayners Lane, Pinner, Harrow, Middlesex, HA5 5DX

**ABBEY TRAINING. NET**

- OFF Licence/ Restaurant வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்குமான Personal Licence எடுத்து தருவோம்
- NCPLH CERTIFICATE COURSE
- Supervisor Course For OFF Licence and Restaurants (DPS)
- உங்கள் வியாபார ஸ்தாபனத்துக்கான புதிய off licence / restaurant premises licence எடுத்து தருகிறோம்
- LIFE IN THE UK - பிரித்தானிய பிரஜா உரிமைக்கான வகுப்புகள்
- எல்லா Course களையும் தகுதிவாய்ந்த விரிவுரையாளர்களுடன் நடத்துகிறோம்.

38 London Road, Tooting SW17 9HP

தொடர்புகொள்ள: Thavanessan

020 8640 9900 / 07956 913 164 / 07960 665 575

**RAJA& CO SOLICITORS**

10 Upper Tooting Road, Tooting Bec London SW17 7PG

Tel: 020 8772 4900 Fax: 020 8682 9425

We provide following Legal Services:

Conveyancing:-
Buying and Selling
Houses Flats & Business
Criminal Cases
Civil Litigation
Family
Immigration

We hold Legal Aid Franchise in Immigration & Crime

**LONDON ACCIDENT CLAIMS LIMITED**

70 Windmill Road, Croydon, CR0 2XP

Had an accident – Not your fault

Driver / Passenger – within last 3 years

- Personal Injury Compensation (eg. back, neck & Shoulder pain etc)
- Repair / Total Loss Value of your vehicle
- Loss of Earnings
- Hire Care for Mini Cab Drivers
- Replacement Car = Credit Hire (terms & Conditions apply)

Your Premium will not be affected

NO WIN - NO FEE

Tel:020 8665 7667 Fax: 020 8684 7177

Mob: 07950 953 514 Call Free: 0800 032 6798

**Mortgagelink**

The National Mortgage Network

எந்தவிதமான Deposit இல்லாமல் வீடு வாங்கவேண்டுமா?

இலண்டனிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் புதிதாக கட்டப்படும் வீடுகள் வாங்க விரும்பினால், 5% Deposit + Stamp Duty £2000 அளவில் வீடுகட்டுபவர்களிடமிருந்து பெற்றுக் கொடுப்போம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

Mob: 07930 626 585 | Tel: 020 8946 5566

Your home is at risk if you do not keep up repayments on a mortgage or other loans secure on it.

உங்கள் பொன்னான வாழ்வை என்றென்றும் உயர்த்திக் காட்டும் பொன் நகைகளின் மதிப்பை அபி தரும் கவர்ச்சியான நகைகளில் மட்டுமல்ல

**ABI DIAMOND**

சிறந்த தரத்திலும் விலையிலும் நீங்கள் பெற்றுக் கொள்ள எப்போதும் மறவாதீர்கள்!

Tel: 020 8423 0055

305 Northolt Road, South Harrow, HA2 8JA

Hall Decoration, Video & Photography, Cakes and Music.

Fresh மல்லிகைப் பூக்கள் மற்றும் மாலைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்.

**MK PARTY SERVICES**

Call: Vel Mob: 07944008249

Mob: 07738393289 Fax: +44 2087 1120 77

34 Cecil Road. Walthamstow, London E17 5JD.

www.mkpartyservice.com

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்



U C MAS in
WILLESDEN
4 to 12 Years Old Children
UCMAS
Mental Arithmetic
Since 1993
POSITIVE TUITION CENTRE
FEES DETAILS
Registration & Study Materials
£75.00
£240.00 Per Level
(3 Instalments @ £80)
Each Level Duration 3 Months ( 10 Levels)
CALL NILA: 0208 795 5838
POSITIVE
FRIENDLY
TUTOR
DEMO
10 Nov
7-8pm
MORAN HOUSE
449-451 HIGH ROAD
WILLESDEN
LONDON NW10 2JJ
Contact: NILA
nilaaa2001@gmail.com
Tel: 020 8795 5838
079 4792 1211
WILLESDEN GREEN
LIBRARY CENTRE
95 High Road Willesden Green
London NW10 2SF




LEWISHAM GOLD HOUSE
சமய முறைப்படி பொன்னுருக்கல் செய்வதற்கான
சகல வசதிகளும் செய்து தருவதோடு திருமணத்திற்குத்
தேவையான வைரத் தாலிக்கொடிகளும் அனுபவமுள்ள
நகைச் சிற்பிகளால் செய்து கொடுக்கப்படும்.
22ct தங்க வைர நகைகளை கலைநயமிக்க
வேலைப்பாட்டுடன் உங்கள் எண்ணம் போல் செய்து
கொள்வதோடு பழைய தங்கத்தில் புதிய
நகைகளையும் செய்து கொள்ளலாம்.
நம்பிக்கை! நாணயம்!! தரம்!! நிரந்தரம்!!
115, Marischal Road,
Lewisham, London, SE13 5LE
Tel: 020 8463 0608
Ameen: 07946 420 907
அனைவருக்கும் எமது
தீபாவளி நல்வாழ்த்துக்கள்




நாளைய நாகரீகத்தை
இன்றே தரும் நகை மாளிகை...
SARATHA JEWELLERS
Exclusive Jewellery Showroom
ALL THE LATEST DESIGNS
தங்க நகைச்சீட்டு
105 ILFORD LANE,
ILFORD, ESSEX,
IG1 2RJ
Tel: 020 8514 3072
அனைவருக்கும் எமது
தீபாவளி நல்வாழ்த்துக்கள்




Tasty...... World
BREAKFAST LUNCH DINNER
'You have tried the Rest; Now, you try the Best'
Our commitment is to deliver
'Quality and Tasty Food'
Specialists in Catering for Weddings and all other Occasions
ASIA- EVENINGS on Saturdays, starting on 3rd of November. Come with your friends and enjoy the food with 'The Live Music' ( Tamil, Malayalam & Hindi), all for £ 5.00, per person.
Call us on 020 8665 7111
(We open 6am to till late)
229 London Road, Croydon, Surrey. CR0 2RL




Accounts preparations
Annual Returns
Company formations
Monthly management accounts
Payroll
VAT/ Tax returns
Bookkeeping
We also attend VAT investigations at one off charge.
VAT Consultancy services for Opticians.
We have dealt with number of sole traders and Limited Companies.
Our charges are very reasonable.
No jobs too small for us.
Call: 07983 589993,
07946 875489, 0208 505 9571
GYPS Financial Services.
Accountants, VAT & Tax Investigators.
81 Grenville Gardens, Woodford Green, IG8 7AE
email: gyps-financialservices@hotmail.co.uk




ANGELS
+ Mortgages + Loans
+ Letting Management
+ Insurance + Building Insurance
Properties and Financial Services Ltd.
✓ வியாபார வங்கிக்கடன்
✓ விற்பனைக்கு 0.5% மட்டுமே அறவிடப்படும்
✓ வாடகை வீடுகள்
✓ காப்புறுதி
✓ மோட்கேஜ் (Mortgages)
100% Mortgage Specialist
அனைவருக்கும்
எமது தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
• 100% வீட்டு வங்கிக்கடன்கள் 5 நிமிடத்தில் ஏற்பாடு செய்யமுடியும்
• வருமான அத்தாட்சி அவசியமில்லை
• முற்பணம் (Deposit) அவசியமில்லை
• ஏற்கனவே உள்ள கடனுக்கு வட்டியை குறைக்க குறைந்த வட்டிக்கு கடனை மாற்றமுடியும்
• முத்திரை தீர்வு அவசியமில்லை
• உங்களின் நிதி சம்பந்தமான அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தகுந்த தீர்வு தரப்படும்
ANGELS
74 Lee High Road
Lewisham SE13 5PT
Tel: 020 8852 1683
Fax: 020 8852 1621
email: info@angelsproperties.co.uk
web: www.angelsproperties.co.uk




அனைவருக்கும் எமது
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
SRI SOOBANA JEWELLERS
எங்களிடம் அனைத்து ரக தங்க நகைகளையும்
உறுதியான வேலைப்பாட்டுடன் உங்கள்
எண்ணம் போல் பெற்றுக் கொள்ளலாம்.
உங்கள் அனைத்துத் தங்க நகைகளையும்
நம்பிக்கை உத்தரவாதத்துடன் நியாயமான
விலையில் பெற்றுக் கொள்ளுங்கள்.
அனைத்து வகையான சில்வர் டிசைன்களும்
விற்பனைக்கு உண்டு.
Tel: 020 8900 9009
123 Ealing Road, Wembley, Middlesex, HA0 4BP
Opening Hours: 7 days a week 9.30am - 7pm
www.srisoobana-jewellers.com




## யாருமில்லையா? மட்டைக்கிளப்பான் எங்கே?

சுவாரசியமான பலவிடயங்களை எழுதி வந்த மட்டைக்கிளப்பானின் அலசுவாரம் தொடர் இப்போது வெளிவருவதில்லை.

நீங்கள் அவர் நாட்டில் இல்லை என எழுதியிருக்கிறீர்கள். அவரை யாராவது கடத்திக் கொண்டு போயிட்டார்களோ தெரியவில்லை என்று கவலையாய் இருக்கிறது.

— திவா

## நீங்கள் சீரடி பாபாவை அவமதித்துள்ளீர்கள்.

மாயாஜாலக்காரரான சத்திய சாயி பாபாவை பழிக்க முற்பட்டு மிகப் பெரிய பகவான் சீரடி பாபாவை அவமதித்துள்ளார் சாயிபுத்திரன்.

மகாராஸ்டிர மாநிலத்தில் அவதரித்த சீரடி பாபா 1918 ம் ஆண்டு வரை இப்புவியில் . வாழ்ந்தார் என்பதும் சுபி எனும் அறநெறி மதத்தினை உருவாக்கியவர்களில் ஒருவர் என்பதும் கட்டுரையாளருக்கு தெரியுமா என்பது தெரியவில்லை.

அற்ப ரசனைக்காக மகான்களை அவமதிப்புச் செய்யவேண்டாம் எனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

— விநாயகமூர்த்தி

## கரி நாக்கு

கரி நாக்கால் சொன்னால் அது அப்படியே பலிக்கும் என்று சொல்லுவார்கள்.

ஒரு பேப்பர் ரின் கரி வசனமும் அப்படித்தான் இருக்கிறது. சென்ற வாரக் கரிவசனம் அதற்குள் பலித்து விட்டதே?

-- சிவக்குமார்

## கடமையைச் செய்வோம்

நீதி, நியாயம் என்று பேசுகின்ற நாடுகள் தமிழர் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தவர்களையும் தாயகத் தமிழ் உறவுகளுக்காக மனிதாபிமான உதவிகளைச் செய்பவர்களையும் பயங்கரவாதிகள் என்று பட்டமிட்டு தடுத்து வைத்திருக்கின்றன.

இவர்களுக்காக நாம் ஒன்றுபட்டுக் குரல் கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

மேத்தா அண்ணாவினுடைய கடிதத்தை வாசித்த போது நாம் எம் கடமையைச் செய்யத் தவறுகின்றோமோ என்ற கவலையும் ஏற்பட்டது.

— மனோ

## இரட்டை பின்னல் ஈஸ்வரி

கே. எஸ் பாலச்சந்திரனின் கடந்தது நடந்ததில் அடிக்கடி இரட்டை பின்னல் ஈஸ்வரியைப்பற்றி எழுதிறார். அது யார் எண்டு விளங்குதில்லை.

எனக்கும் ஒரு ஈஸ்வரியைத் தெரியும் அவவுக்கும் இரட்டைப்பின்னல்தான் அதுதான் யோசனையாயிருக்குது. எதுக்கும் இதைப்பற்றி அவரை விபரமாய் எழுதச் சொல்லுங்கோ!

— வசிகரன்

## என்ன நடந்தது?

அநுராதபுரத்தில் சிங்கள வான் படைக்கு விழுந்த அடிபற்றி ஒவ்வொருத்தர் ஒவ்வொரு விதமாகச் சொல்லுகினம். சிங்களப் பத்திரிகைகள் ஒன்றையும் ஆங்கிலப் பத்திரிகைகள் இன்னொன்றையும் சொல்லுகின்றன.

உங்களுக்காவது உண்மை தெரிந்தால் என்ன நடந்தது எண்டு விரிவாக ஒரு கட்டுரை போடுங்கள்.

— சின்னராசா

## கொச்சைப் படுத்தாதீர்கள்

சென்ற இதழில் சாய்புத்திரன் எழுதிய நிலவே பகவான் முகம் காட்டு என்ற ஆக்கத்தைப் பார்த்தேன். சாய்பாபாவின் அற்புதங்கள் நன்றாக இருந்தது. அவரை நானும் நம்புகிறேன். நம்புவது. நம்பாமல் விடுவது எல்லாம் அவரவர் விருப்பு.

கட்டுரையாளர் வெளிநாட்டிலிருக்கும் நாமெல்லாம் வன்னியில் இருக்கும் பெடியள் பெட்டையள் பற்றிப் பேச அருகதையற்றவர் என்று எழுதியிருந்தார்.கட்டுரைகளை எழுதங்கள். ஆனால் தயவு செய்து போராட்டத்தைக் கொச்சைப் படுத்தாதீர்கள். ஏனெனில் வாழ்கின்ற தெய்வங்களின் புனித ஆலயம் தான் தமிழீழம்.

— தி.முகிலன்

## நிலவில் தோன்றிய பகவான்

பகவான் சாயிபாபா அவர்கள் நிலவில் தோன்றியமை பெங்களூரில் தெரியாவிட்டாலும் பாரிசில் அந்த அற்புதக் காட்சியை எங்களால் தரிசிக்கக் கூடியதாய் இருந்தது.

பெங்களூரில் வசிப்பவர்களில் பெருமளவினர் பாவிகளாக இருக்கக் கூடும் அதனால் அவர்களால் பார்க்க முடியவில்லை.

பகவான் நிலவில் தோன்றியமை படமாக்கப்பட்டுள்ளது அதனை நான் இணைத்துள்ள இணையத்தள முகவரியில் பார்க்கலாம். http://www.truveo.com/Saibaba-on-the-moon-27102007/id/2721764575

— பாரிஸ் நந்தன்

## மேத்தா! நாங்கள் இருக்கிறோம்

உண்மையிலேயே ஒரு பேப்பர் ஒப்பற்ற பேப்பர் தான். இவ்வளவு காலமும் ஒரு பேப்பர் பத்தோடு பதினொன்றாக வருகின்ற இலவசப் பத்திரிகையென்று அக்கறையற்றிருந்தேன். ஆனால் சென்ற ஒரு பேப்பர் ரில் மேத்தா அவர்களின் கடிதத்தை வாசித்த பின் இதுவே முதல் தரமான பத்திரிகை என்று உணர்ந்தேன்.

வெளியில் இருக்கும் பொழுது மேத்தாவின் பணி எங்களால் பெரிதும் உணரப்பட்டிருந்தது. பிரான்ஸ் நாட்டிற்கு எங்கள் தேசிய விடுதலை இயக்கத்தின் பொறுப்பாளராக பல வருடங்கள் பணி புரிந்த திறனைப் பார்த்து நான் வியப்பதுண்டு. அகதி அந்தஸ்துக் கோரி நான் பிரான்சில் வாழ்ந்த வேளை மேத்தாவின் ஒவ்வொருசெயற்பாடும் கண்டுநான் மகிழ்வெய்தினேன். மென்மையான அணுகுமுறையைக் கொண்டவர். அதே சமயம் வெளிப்படையானவராகவும் கொண்ட லட்சியத்தை விட்டுக் கொடுக்காதவராகவும் நிர்வாகத் திறன் மிக்கவராகவும் அவர் விளங்கினார். இன்னுமொன்று எல்லோருக்கும் இனியவர் அவர்.

வெளியில் நின்று ஆயிரம் வேலை செய்யும் வல்லமை படைத்தவர். சிறையில் இருந்து நாட்களை வீணாகக் கழிப்பதென்பது வேதனைக்குரியது. ஆனாலும் சிறை தன்னைப் புடம் போடுவதாகக் கூறுவது மகிழ்ச்சிக்குரியது. நேதாஜி அவர்களையும் சிறையே செப்பனிட்டது. வீறு கொண்ட விடுதலைப் போராளியாக அவர் வெளிவந்தார். மேத்தாவிற்கும் இது நிகழும் எனத் திடமாக நம்பலாம்.

வெளியில் நிற்கிற நாங்கள் மேத்தாவின் விடுதலைக்காக என்ன செய்ய வேண்டுமென்று யாரும் எடுத்துக் கூறினால் நன்றாக இருக்கும்.

ஒரு பேப்பர் ரை இட்டு சின்னக் கவலை. ஒரு விடுதலைப் போராளியை அமைப்பின் பொறுப்பாளரை ஒரு கைதியின் கடிதம் என்று கைதியாகச் சித்தரித்தது கவலைக்குரியது. இக்கடிதத்தைப் பிரசுரிப்பதன் ஊடாக அந்தக் கவலையை போக்குவீர்கள் என நம்புகிறேன்.

—அரக்கன் (கனடா)

# லா சப்பலில் லைலா

போன தடைவை பாரிசிலை நடக்கப் போகிற மூண்டு மாகாநாடு பற்றி சொல்லிப் போட்டு போனனான். அவை வெவ்வேறை பேரிலை நடந்தாலும் உள்ளை நடக்கப் போறது புலியெதிர்ப்பும் ஈழவிடுதலை போராட்டத்தை கொச்சைபடுத்துதலும் தான் நடக்கப் போகுது எண்டும் சொல்லியிருந்தனான்.

நான் சொன்னமாதிரியே நடந்திட்டிது. அதுக்காக லைலா ஏதோ பெரிசா புலனாய்வு செய்து கண்டு பிடிச்சதாவோ அல்லது ஏதும் சாத்திரம் தெரியுமோ எண்டும் யோசிக்காதையுங்கோ

காரணம் இந்த நிகழ்வுகளை ஏற்பாடு செய்தவை பகிரங்கமாகவே இலங்கை அரசாங்கத்துக்கு காலங்காலமாய் கால் கழுவுற ஆக்கள். முயல் பிடிக்கிற நாயை மூஞ்சையிலை தெரியும் எண்டு சொல்லுறவை ஆனால் இவையின்ரை மூஞ்சையை பாக்கத் தேவையில்லை இவையின்ரை பேரை சொன்னாலே தெரியும் இவை என்ன பிடிப்பினம் எண்டு. அதுக்காக இவையை நான் நாயெண்டு சொல்ல வரேல்லை அது பாவம் வாயில்லா சீவன். இவையள் வாலில்லா சீவன்.

இதிலை எங்கயடா மைக் கிடைக்கும் ஏதாவது மேடை கிடைக்குமா எண்டு அலையிற சிலபேர் சமாதானப் பறைவைகள் எண்ட நிகழ்விலை இரண்டையுமே ஒண்டா கண்டவுடனை நீட்டி முழங்கி விட்டிட்டினம். பிறகு ஒ ஒரு பேப்பர் ரிலை அந்த மகாநாட்டின்ரை உள்நோக்கம் வெளியான பிறகு பலருக்கு விசயம் தெரிஞ்சு அந்த நிகழ்விலை மைக்மேலை மையல் கொண்டவையை 'என்ன நீங்களும் பேசினனீங்களாம்' எண்டு கேக்க சும்மா என்ன நடக்குதெண்டு பாக்கபோன இடத்திலை மைக்கை தந்து கதைக்க சொல்லிபோட்டாங்கள் எண்டு தலையை சொறிஞ்சிச்சினமாம். மைக்கை தொடுவானேன் கவலைப்படுவானேன்.

சரி அடுத்ததா 26வது பெண்டுகள் சந்திப்பிலை நம்மடை ராசேசு அக்கா அன்னியன் விக்ரம் ஸ்ரைலிலை தன்ரை சிலுப்பாவை சிலுப்பியபடி ஏதோ ஒரு தலைப்பை பிடிச்சு ஈழத்தமிழ்ப் பெண்கள் தற்கொலைப் படையிலை சேருகினம் எண்டு கவலைப்பட்டு கண்டனம் நிறைவேற்றி அதை எச்சில் இணைய தளங்களிற்கும் எழுதி அனுப்பி அந்த ஈரம் காயமுதலே செய்தி ஒண்டு.

தமிழ் பெண்கள் ஏன் உலகத்தில் உள்ள அனைத்து பெண்களுமே இறுமாந்து போகும் செய்தியொண்டு அநுராதபுர வான் படைத்தளத்துக்குள்ளை புகுந்த கரும்புலிகளிலை ஒரு பெண்கரும்புலி வீராங்கனை விமான எதிர்ப்பு துப்பாக்கியை கைப்பற்றி அங்கு நின்ற விமானங்களையும் விமானத் தள படைநிலைகளையும் தகர்த்து விட்டு வீரகாவியமானார் என்கிற செய்திதான்.

ராசேசு அக்கா அறை கதவை சாத்திபோட்டு ஒஒஒஒஒஒஒஒவெண்டு அழுதிருப்பார்.அடுத்ததா தலித்து மகாநாட்டிலை தாளித்து கொட்டிப் போட்டினம் என்னத்தை எண்டுதானே கேக்கிறீங்கள். முதல்லை இந்த மகாநாடு ஏதோ அனைத்து தலித்துகளுக்கும் விடுதலை வாங்கித் தரப் போறம் எண்ட மாதிரித்தான் விளம்பரங்கள் நடந்தது. அது மட்டுமில்லை உலகத்திலையே சனநாயகத்துக்காக பாடுபடுற ஒரேயொரு வானொலியான (எண்டு அதை நடத்திறவை சொல்லினம்) ரி.பி.சி யிலை நேரடியா ஒலிபரப்பும் செய்தவையாம்.

இதிலை எனக்கொரு சந்தேகம் அந்த வானொலியை கேக்கிற எல்லாருமே அந்த கூட்டத்திலை நிண்டவை பிறகு ஆர் கேக்கிறதுக்கு ஒலிபரப்பினவையெண்டு தெரியாது. ஏணெண்டால் நானும் கேக்கேல்லை. இது நடந்த மறுநாளே இதிலை கலந்து கொண்டவை தாங்கள் புலியெதிர்ப்புத் தான் செய்தனாங்கள் எண்டு பகிரங்கமாவே ஒத்து கொண்டது மட்டுமில்லை அவையளுக்குள்ளையே இணையம் ஊடாக புடுங்குப் பாடும் நடக்கிது.

சரி புடுங்குபாடு ஏன் நடக்குதெண்டால் இந்த கூட்டத்தை நடத்த சொல்லி இலங்கை புலனாய்வு பிரிவாலை ஒரு தொகை கை மாறினதாம். அதிலை தாங்களுக்கும் ஏதாவது கிடைக்கும் எண்டு அதை முழுமூச்சா நடத்தின மற்றவையும் எதிர் பாத்தவையாம். ஆனால் கூட்டம் முடிய தன்ரை கைக்காசிலைதான் மண்டபக் காசும் கட்டி சாப்பாடும் ஏற்பாடு செய்தது. முடிஞ்சா நீங்கள் கொஞ்சம் தாங்கோ எண்டு அதை நடத்தினவர் கையை விரிச்சிட்டாராம். அதாலை புலிக்கு பல்லு புடுங்க வெளிக்கிட்டவை இப்ப தாங்களே புடுங்கு படுகினம்.

அன்புடன் லைலா


MONEY IN MINUTES TO SRI LANKA




இலங்கைக்கான பணமாற்றுச் சேவை
நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.
HSBC · COMMERCIAL BANK · HNB · PEOPLE'S BANK · SEYLAN BANK LIMITED · SampathBank · BOC BANK OF CEYLON
Head Office : 125 - 127 Bramley Road, Oakwood, London N14 4UT
Transfer Hotline
020 8886 4488
www.cecfastcash.com

PAY AT
BARCLAYS
நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் பணத்தை பாதுகாப்புடனும் விரைவுடனும் அனுப்ப அருகில் உள்ள BARCLAYS இல் பணத்தை வைப்புச் செய்த பின் எம்மை அழையுங்கள்
A/C NAME : C.E.C.LTD
A/C NO : 70713945
SORT CODE : 20-36-47
BRANCH : HANOVER SQ.

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, NOVEMBER 02, 2007, ISSUE 81

## விட்டுச் சென்றுள்ள செய்திகள்

விடுதலைப் புலிகளினால் அநுராதபுரத்திலுள்ள சாலியபுர வான்படை முகாமில் நடாத்தப்பட்ட தாக்குதல் சம்பவமானது இலங்கைத் தீவின் அரசியல், இராணுவ நிலமைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளமை வெளிப்படையாகவே தெரிகிறது. இவை பற்றி பல்வேறு ஊடகங்களில் ஆய்வாளர்கள் விளக்கி வருகின்றனர்.

இராணுவ மற்றும் அரசியல் ரீதியான சாதக-பாதக விடயங்களை விடுத்து, இச்சம்பவமானது ஈழத்தமிழ் மக்களில் ஏற்படுத்தியிருக்கிற தாக்கத்தை பற்றி சிந்திக்க வேண்டிய கடப்பாடு எம்மக்கள் அனைவருக்கும் உண்டு. வழமை போலவே களத்தில் கிடைத்த வெற்றியையிட்டு, தமிழ் தேசிய உணர்வாளர்கள் மகிழ்வு கொள்வதும், எதிர்ப்பாளர்களோ மானிட நேயர்களாக மாறி, கொல்லப்பட்டவர்களையிட்டு நீலிக்கண்ணீர் வடிப்பதும், வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பதும் இப்போதும் நடந்தேறியிருக்கிறது.

சில மணி நேரத்தில் நடந்தேறிய இத்தாக்குதல் சம்பவமும் அதன் தொடர்ச்சியாக நடைபெற்ற சம்பவங்களும் உணர்த்துகிற சில செய்திகளை விளங்கிக் கொள்வோமேயானால் அதற்கேற்ப நாம் நடந்து கொள்ள முடியும்.

தமிழீழ எல்லையை தாண்டி ஒரு இராணுவ இலக்கு மீதான தாக்குதலை, சர்வதேச யுத்த விதிகள் எதனையும் மீறாமல் பொதுமக்களுக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் நடாத்தியதன் மூலம் தங்களை ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல ஒரு விடுதலை இயக்கம் என விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தியுள்ளார்கள். மாறாக கொல்லப்பட்டவர்களின் உடலங்களிலிருந்து உடைகளை களைந்து பொதுமக்களின் பார்வைக்கு விட்டதன் மூலம் தாங்கள் மனிதாபிமானம் சிறிதுமற்ற மிலேச்சர்கள் என்று சிறிலங்கா அரசு தன்னை அடையாளம் காட்டியிருக்கிறது. தாக்குதல் தொடர்பான சம்பவங்களை மாறி மாறி திரித்துக் கூறி வந்ததன் மூலம் சிறிலங்கா அரசின் பொய்ப்பிரச்சாரங்களும் அம்பலமாகியுள்ளன.

புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழ் மக்களை பொறுத்தவரை, இது வெறுமனே களிப்புக்குரிய விடயமில்லை என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். வீழும் போது சோர்வதும் எழும்போது ஆர்ப்பரித்ததும் போதும். இது ஒரு தேசிய இனத்தின் இருப்பிற்கான போராட்டம். இங்கு அவரவர் மனமகிழ்விற்காக காரியங்கள் நடப்பதில்லை.

பெண்களும் ஆண்களுமாய் இருபத்தியொரு இளையவர்கள் தமது உயிரினை விலையாகக் கொடுத்து தங்களது சக்திக்கு அப்பாற்பட்ட விடயங்களை சாதித்து விட்டு சென்றிருக்கிறார்கள். நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்பதே ஒவ்வொருவரும் தங்களைப் பார்த்து கேட்க வேண்டிய கேள்வியாக இருக்கும்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*இந்த பேப்பரிலிருந்து வழமைபோல் மாதத்தின் முதலாவது, மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் **ஒரு பேப்பர்** வெளிவரும் கடந்த சில வாரங்களாக ஏற்பட்ட தடங்கல்களுக்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு தொடருகிறோம்.*

*கனடாக்காரரற்றை ஆக்கங்களை காணேல்லை, முந்தி எழுதின ஆக்கள் எல்லாம் எங்கே போயிட்டினம் என்று வினவி உங்களில் சிலர் கடிதம் போட்டதாலை சொல்லிறம். அவையள் சுகமாய்த்தான் இருக்கினம் ஆனால் பாலச்சந்திரன் அண்ணையை தவிர மற்றாக்கள் எழுதிறதுக்கு கொஞ்சம் பஞ்சிப்படியினம். லாசப்பல் லைலாவும் சும்மா இருக்கேலாமல் பிரான்சிலை கிரிமினல் வேலையளைச் செய்திட்டு கனடாக்கு தப்பி போற எங்கடையாக்களை பற்றி எழுதி அவையளை கடுப்பேத்தி போட்டா. கூல் டவுண் பண்ணி அவையளை கூட்டிக் கொண்டு வரோணும்.*

*இப்ப பேப்பரிலை எழுத்துப் பிழை குறைவாக இருக்கிறதுக்கு காரணமாக இருக்கிற வையைப் பற்றிச் சொல்லோணும். தமிழ் விசைப்பலகையை லாவகமாகக் கையாளும் இந்தக் கரங்கள் ஜேர்மனி நாட்டில் வசிக்கும் இளையவர்களுடையவை. இவையள் தமிழ் படிச்சதே ஜேர்மனியலைதான் எண்டதையும் சொல்ல வேணும்.*

***ஒரு பேப்பர்** ரை கிழமைக்கு ஒரு முறை வெளியிடும்படி சிலரும் அதை ஒரு பவுணுக்கு (இரண்டு கனேடியன் டொலர் / ஒண்டரை ஈரோ / இரண்டரை சுவிஸ் பிராங்) எண்டாலும் வில்லுங்கோ எண்டு சிலரும் எங்களுக்கு ஓசியாய் அட்வைஸ் தருகிறார்கள். ஆருக்கு விட்டது ஆசை அதாலை நாங்களும் மல்லாந்து படுத்துக் கொண்டு யோசிக்கிறம். இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறியள் எண்டு தெரியப்படுத்துங்கோ!.*

*பேப்பர் விநியோகத்தை சீர்செய்யிறதுக்கு எல்லா வழியளையும் முயற்சி செய்து பாத்திட்டம் சரி வருதில்லை. பேப்பரை கடையளிலை வச்சிட்டு வந்து சில மணி நேரத்திலையே எங்களுக்கு அடிச்சு தம்பி இப்பத்தான் அந்த கடைக்கு போனனான் பேப்பர் முடிஞ்சிட்டுது எண்டு சொல்லினம். ஓசிப்பேப்பர் விநியோகிக்கிறது லேசுப்பட்ட காரியமில்லை. ஒண்டு செய்யுங்கோ எல்லோரும் சந்தா தாரராக சேர்ந்து விடுங்கோ.*

*இதுக்கிள்ளை அக்கா ஒராள் சொன்னா, 'தங்கைச்சி உங்கட பேப்பர் மற்ற பேப்பருகள் மாதிரி இல்லை அந்த மாதிரி அடிக்கிறியள். அப்பத்தை சுட்டு மற்ற பேப்பருகளிலை போட்டால் மை அப்பிப்போடுது. உங்கடை அப்பிடியில்லை அதாலை எப்பவும் கடைக்குப் போனால், ஏழெட்டு பேப்பர் எடுத்து வாறனான்'. இப்பிடி எத்தினை அக்காமார் அண்ணாமாரோ? பேசாமல் அச்சே அடிக்காமல் வெள்ளைப் பேப்பராய் குடுக்கிறதை பற்றியும் தீவிரமாய் யோசிக்கிறம்.*

*அடுத்த பேப்பர் நினைவு எழுச்சிநாள் சிறப்பிதழாக வெளிவரும்.*

*மீண்டும் சந்திப்போம்.*

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

EDITORIAL

# A Wonderful War

Last week the Tamil Tigers attacked one of the most important and largest Sri Lankan Air Force Bases. Within few hours less than two dozen Tamil fighters inflicted a heavy blow to the Sri Lankan war effort by destroying more than twenty military aircrafts.

No one expected this attack to stop the Sri Lankan Armed Forces murderous business in the Tamil Homeland immediately. But some expected seasoned politicians to take a hard look at the futility of a military solution to the political demands of the Tamils.

But oh no! Not in Sri Lanka.

Within hours a learned minister said that they will increase the intensity of the war. Within a day the Defence Secretary vowed to intensify the war. Two days later the President Mr Rajapakse promised to buy better military hardware and to continue the war with even greater vigour.

The Sri Lankan reaction reminds us the old story about the losing gambler, he cannot stop. He continues to play, in order to win his losses back. He continues to lose and continues to gamble, until he has lost everything: his house, his wife, his shirt.

The same thing happens in the biggest gamble of all: war. The leaders that start a war and get stuck in the mud are compelled to fight their way ever deeper into the mud. That is a part of the very essence of war: it is impossible to stop after a failure. Public opinion demands the promised victory. Incompetent generals need to cover up their failure. Military commentators and other armchair strategists demand a massive offensive.

## It is much easier to start a war than to finish one

Thus cynical politicians continue to ride the war wave. The Sri Lankan government is getting carried away by the floods that they themselves have let loose.

That is what is happening now.

War has its own rules. Unexpected things happen and dictate the next moves. And the next moves tend to be in one direction: escalation.

President Rajapakse, the father of this war, thought that he could simply eliminate the Tamil resistance by means of the air force and shelling. A few months of massive pounding, hundreds of tonnes of bombs on 'identified targets' and that would be it, a 'lion response' he must have told himself.

Well, that wasn't it, as it turned out. Tamil resistance continues to hold.

## Tamil resistance continues to hold

What next? One cannot stop. Public opinion is demanding more decisive moves. Political demagogues are shouting. Commentators are grumbling. The people in the south are crying out. The generals are feeling the heat.

Everybody is clamouring to storm forwards into the Tamil North especially the Vanni Heartland.

But this is not going to be possible as the Tamils will defend themselves at any price.

When it becomes clear that nothing is helping, that the Tamils go on fighting and the bombs continue to explode, including in the South, the political and military leadership will face bankruptcy.

President Rajapakse and his generals did not think about that when they decided in haste and light heartiness, without serious debate, without examining other options, without calculating the risks, to attack Mavil Aru. For a president who does not know what war is, it was an irresistible temptation: there was a clear provocation by the Tamils, international support was assured, what a wonderful opportunity!

Buddhist monks submitted an offer that could not be refused. A nice little war. Military plans were ready and well rehearsed. Certain victory. The more so, since on the other side there was no real enemy army, just a "bunch of terrorists".

## War has its own rules

How hotly the desire was burning in the hearts of Rajapakse and his generals, is attested by the fact that they started to bomb while the SLMM chief was trying to find a solution to this particular problem. The main thing was to rush in and gather the laurels and to show their primary colours to their core supporters.

They had no time to think seriously about the war aim. Now they resemble archers who shoot their arrows at a blank sheet and then draw the rings around the arrow. The aims change daily: to open a dam, to destroy LTTE positions around the dam, to drive the LTTE out of that area, to kill Tamil fighters, to re-establish the sovereignty of the Sinhalese government over all of Sri Lanka, to establish new Sinhala settlements, to deploy the army every where in the Northeast, to rehabilitate deterrence and so on.

The more this wonderful war continues, the clearer it becomes that these changing aims are not realistic.

The term "guerrilla" ("small war") was coined in Spain, during the occupation of the country by Napoleon. Irregular bands of Spanish fighters attacked the occupiers and beat them. The same happened to the Russians in Afghanistan, to the French in Algeria, to the British in Palestine and a dozen other colonies, to the Americans in Vietnam, and is now happening to them in Iraq.

## Tamils will defend themselves at any price

Even assuming that Rajapakse and Sarath Fonseka are greater commanders than Napoleon and his marshals, they will not succeed where others failed.

As it has been said before - it is much easier to start a war than to finish one. President Rajapakse's government believes that it controls the war, but in reality it is the war that controls them. They have mounted the tiger, and can not be sure of getting off without being torn to pieces.

# முக்கியமான ஒரு கேள்வி

ஆட்கள் காணாமல் போகும் சம்பவங்கள் தொடர்பான தகவல்களைக் கையாளுவதற்கு கொழும்பில் பொலிஸ் தகவல் நிலையம் ஒன்று கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. முதலில் இத்தகைய நிலையமொன்று இரகசிய பொலிஸ் தலைமையகத்தில் இருந்தபோதிலும், அங்கு சென்று முறைப்பாடுகளைத் தெரிவிப்பதில் எதிர்நோக்கப்பட்ட நெருக்கடிகள் குறித்து பொதுமக்கள் முறையிட்டதையடுத்து புதிய தகவல் நிலையம் பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேராவின் பணிப்பின் பேரில் பொலிஸ் நலன்புரி நிலைய கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

**ஆட்கடத்தல்கள் மற்றும் ஆட்கள் காணாமல் போகும் சம்பவங்கள் தொடர்பில் அரசாங்கத் தரப்பினால் தெரிவிக்கப்படுகின்ற விபரங்கள் உண்மையாகவே அந்த மனித உரிமை மீறல்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்கு பெரும் அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் தருபவையாக இருக்கின்றன.**

பொலிஸ் தகவல் நிலையத்தை திறந்துவைக்கும் வைபவத்தில் உரையாற்றிய இரகசிய பொலிஸ் பிரிவுத் தலைவர் பிரதி பொலிஸ் மா அதிபர் டி.டபிள்யூ.பிரதாபசிங்க பெருமளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்ற ஒரு நாடாக இலங்கையைக் காண்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு தருணத்தில் காணாமல் போனோர் தொடர்பான தகவல்களைக் கையாளுவதற்கான புதிய நிலையம் செயற்பட ஆரம்பித்திருக்கிறது என்றும், ஆட்கடத்தல்கள் மற்றும் ஆட்கள் காணாமல்போகும் சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகளைச் செய்வதற்கு எவருமே சுதந்திரமாக இந்த நிலையத்துக்கு வரலாம் என்றும் தெரிவித்திருக்கிறார். இந்த நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அந்த முறைப்பாடு குறித்து அறிவிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரதாபசிங்க அன்றைய தினம் தெரிவித்த இன்னொரு தகவலே எமது கவனத்தை பெரிதும் ஈர்த்திருக்கிறது. இனந்தெரியாத குழுக்களினால் கடத்தப்பட்டவர்கள் அல்லது காணாமல்போனதாகக் கூறப்பட்டவர்களில் அனேகமானவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதாக அவர் கூறியிருக்கிறார். இவ்வாறு முதற்தடவையாகக் கூறியவர் இவர் அல்ல இதற்கு முன்னரும் பல தடவைகள் அமைச்சர்களும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளும் ஏன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூட இவ்வாறு கூறியிருக்கிறார்கள். ஆட்கடத்தல்கள் மற்றும் ஆட்கள் காணாமல் போகும் சம்பவங்கள் தொடர்பில் அரசாங்கத் தரப்பினால் தெரிவிக்கப்படுகின்ற விபரங்கள் உண்மையாகவே அந்த மனித உரிமை மீறல்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்கு பெரும் அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் தருபவையாகவேயிருக்கின்றன.

**கொலை செய்யப்பட்ட சம்பவங்களில் பொலிஸாருக்கும் முப்படைகளைச் சேர்ந்தவர்களுக்கும் தொடர்பிருப்பதாக சந்தேகிக்கப்படுவதாக பொலிஸ்மா அதிபரும் அரசாங்கத்தின் பாதுகாப்பு விவகார பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் சில மாதங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தனர்.**

வடக்கு, கிழக்கிலும் தலைநகர் கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளிலும் கடத்தப்பட்டவர்களில் அல்லது காணாமல் போனவர்களில் பெரும்பாலானோர் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லையென சம்பந்தப்பட்ட குடும்பங்கள் சிவில் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்திருக்கின்றன. அரசாங்கத் தரப்பினர் தெரிவிக்கின்ற விபரங்களும் சிவில் கண்காணிப்புக் குழுவிடம் இருக்கின்ற விபரங்களும் முற்றிலும் முரண்பாடுடையவையாகவே இருக்கின்றன. காணாமல் போன தங்கள் அன்புக்குரியவர்கள் மீண்டு வரமாட்டார்களா என்று அந்தக் குடும்பங்கள் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கின்ற வேளையில் காணாமல் போனோர் விவகாரம் இப்போது பெரியதொரு நெருக்கடியல்ல என்ற தோரணையில் அரசாங்கத் தரப்பில் இருந்து அறிவிப்புகள் வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. கடத்தப்பட்டதாகவும் காணாமல் போனதாகவும் பெயர், விபரம் தெரிவிக்கப்பட்டவர்களில் கணிசமான எண்ணிக்கையினர் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டதாக தகவல் கிடைத்திருக்கின்றது என்று அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களே தெரிவித்திருந்ததை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

ஆட்களைக் கடத்திச் சென்று பெருந்தொகைப் பணம் கப்பமாகக் கோரப்பட்ட சம்பவங்களில், கடத்தப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்களில் பொலிஸாருக்கும் முப்படைகளைச் சேர்ந்தவர்களுக்கும் தொடர்பிருப்பதாக சந்தேகிக்கப்படுவதாக பொலிஸ்மா அதிபரும் அரசாங்கத்தின் பாதுகாப்பு விவகார பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் சில மாதங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தனர். சிலர் கைது செய்யப்பட்டதாகக் கூட அறிவிக்கப்பட்டது. கடத்தப்பட்டவர்களினதும் காணாமல் போனவர்களினதும் அனேகமானவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டதாகக் கூறுகின்ற அரசாங்கத் தரப்பினரிடமும் பாதுகாப்பு உயரதிகாரிகளிடமும் நாம் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறோம். இந்த படுமோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்களில் எத்தனை பேருக்கு எதிராக இதுவரை சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

*நன்றி - தினக்குரல்*

எங்கள் நிலத்தினில்

எங்கள் பலத்தினில்

தங்கி நிற்போம்

நாங்கள்.

Editorial, Eelam Nation

# Even animals respect their dead

While some species of intelligent animals are said to respect their dead, not necessarily their relatives, by some instinct unknown, civilized societies are often taught to honour the dead in their midst irrespective of race or religion. Even animals dead are given a decent burial. The culture of the respect for the dead is a sign of civilization.

The manner in which the remains of the twenty one dead men and women from the LTTE cadres who participated in the recent airbase raid in Anuradhapura were treated, was despicable to say the least. We are referring to how the dead men and women were stripped and their naked bodies piled into the back of a tractor trailer to be driven to a mortuary and consigned to a public display. Several journalists along with the public saw the remains on the way to the mortuary and the photographs were widely circulated on Web sites and published in one local newspaper on Wednesday.

It smacks of morbid sadism to say the least. While we are glad that the dead Sri Lankan air force officers were afforded a decent funeral, we deplore the appalling dishonour and the calculated disrespect shown to the Tamil militant men and women who lost their lives. Such action is manifestation of the working of diseased and depraved minds. If you are incapable of honouring the dead by no means dishonour them.

**Whoever commit human rights violations have to be condemned, but everyone should respect human values and acceptable norms"(BBC).**

It is on that very soil in Anuradhapura two thousand two hundred years ago that Dutu Gemunu after vanquishing his arch enemy the righteous Tamil king Elara, cremated him, built a monument and set up a pillar near this monument with the inscription that read as follows: "Let no man, prince or peasant, in future pass this way riding in palanquin or litter with beating of drums"(James P Rutnam, 1981). This gives an insight into the extent of the monumental decline of the Sinhala Buddhist civilisation over the past centuries. Not many days ago the Catholic Bishop of Anuradhapura Rev Fr. Nobert Andradi had to remind them that their action was not something which was acceptable especially in a city like Anuradhapura sacred to Buddhists and:" Whoever commit human rights violations have to be condemned, but everyone should respect human values and acceptable norms"(BBC).

Tamil militancy in Sri Lanka fighting for a separate state for the Tamils is the product of the absence of political, economic and social justice, the lack of rule of law combined with state terrorism and repression with acts committed against unarmed civilians.

**"The bottom line is, you can't lump all terrorists together. And I think we've got to do a much better job of clarifying what are the motivations, the raisons d'être of terrorists."**

The Tamil people in their desperation have been driven to opt to be confined to a smaller land mass within a separate state. Time and again have we stated that the best recruiting agents for Tamil militancy are the Sri Lankan security forces themselves.

These militants who had decided to lay down their lives were motivated to do so to avenge the wanton murders, rapes, torture, maiming and abductions of their near relatives and friends through Sri Lankan military atrocities and to turn their anguish and make the best of their desolation and desperation into contributing to the cause of Tamil liberation. They gave up their lives not to find a short cut to heaven as in a Jihard and enjoy the attendant perks therein.

This notion rationalizes Hilary Clinton's accurate assessment: "The bottom line is, you can't lump all terrorists together. And I think we've got to do a much better job of clarifying what are the motivations, the raisons d'être of terrorists." ....I mean, what the Tamil Tigers are fighting for in Sri Lanka, or the Basque separatists in Spain, or the insurgents in al-Anbar province may only be connected by tactics. They may not share all that much in terms of what is the philosophical or ideological underpinning."

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
லண்டன்
சேயோன் - அ.இரவி
மணி - அகிலன்
கனடா
தயா - பொன்.விவேகானந்தன்
பாரிஸ்
சிறி - வண்ணை
ஜேர்மனி
சபேசன் - சுதந்திரா
சுவிஸ்
ரேமன் - சந்துரு
பொறுப்பாசிரியர்
- கோபி -
விளம்பரம்
கௌரி - நிதி - சிந்து
அச்சு
குமார் (ஜெர்மனி)
வடிவமைப்பு
jasmine studio
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி
இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
உஷா - முருகானந்தன்
வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்



உங்கள் தொடர்புகட்கு:
தொலைபேசி (Tel)
லண்டன் 020 8640 4604
020 8286 9327
பாரீஸ் 01 7289 8165
சுவிஸ் 043 500 0277
தொலைநகல் (Fax)
020 8640 6972
ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:
பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com


'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

# எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம்

**சற்று மாறுதலுக்காக**

எழுதுவது: **சேயோன்**

சென்ற திங்கள் (22.10.07) மிக அதிகாலை 3மணி (அது இலங்கையில்) இங்கிலாந்தில் இரவு பத்தரை பதினொரு மணியிருக்கும். அந்த நேரம் முழித்திருப்போர் கனடாவில் வாழ்வோரும் (ஞாயிறு பின்னேரம் ஐந்தரை ஆறுமணி) ஒஸ்ரேலியாவில் வாழ்வோரும் (திங்கள் காலை ஏழரை எட்டு)ஆவர்.

மற்றெல்லாத் தமிழரும் ஆழ்ந்து உறக்கத் திருக்கையில் எங்கள் 21 தமிழ் இரத்தங்கள் அடர்ந்த கானகத்தால் சென்று குளக்கட்டு ஏறி, அனுராதபுர வான்படை முகாமை அடைகிறார்கள்...

மேலும் நான் கதை சொல்ல ஒன்றுமில்லை இது கதையுமல்ல, காவியம். வீரகாவியம். இதைப் பாட என்னால் ஏலப் போவதுமில்லை, தைரியமுமில்லை, தகுதியும் இல்லை.

நான் இதன் பின்னுள்ள ஓர்மத்தைப் பார்கிறேன் காலத்தைப் பார்க்கிறேன். வீறைப் பார்க்கிறேன். வீரத்தைப் பார்க்கிறேன்.

நண்பன் ஒருவன் முன்னர் 1985ல் ஒரு கவிதை எழுதியிருந்தான். அதனை நான் இப்போ மறுவாசிப்புக்கு உட்படுத்தினேன். என்னிலிருந்து அக்கவிதை வேறொரு பரிமாணத்தில் வெளிப்படுகிறது.

'எல்லாளன் தோற்றித்த சுவடுகளை
காலம் மூடியது
மூடிய மண்ணின் வெளிமேற்பரப்பில்
எல்லாளர்களின் கால்கள்
எல்லாளர்களின் இறக்கையடிப்பு
இரண்டு பறப்பு
இம்முறை யானை சரிந்து
எல்லாளன் வீழ்ந்ததில்லை
ஓர்மம் தரித்து
கைமுனு காசியப்பன்
இன்னும் எஞ்சிய
எல்லாச் சிங்களங்களையும்
எல்லாளர் வென்றனர்'

இந்த வீறை, வெற்றியை, உயிருக்கும், உணவுக்கும் உத்தரவாதமுள்ள ஒரு தேசத்தில் இருந்து கொண்டு கைதட்டி ஆர்ப்பரித்து மகிழ என்னால் முடியவில்லை. உணர்ச்சிப் பெருக்கில் உடல் துடிக்க, நடுங்கும் கையால் இதை ஏன் எழுத வேண்டும்?

அனுராதபுர வான்படையின் முகாம் இருந்தது 'நுவரவெவா' என்ற பெருங்குளத்தின் ஒரு கரையில். இந்தக் குளக்கட்டுக்கு ஒரு கதை உண்டு. 1958ம் ஆண்டு அப்போது நான் பிறக்கவில்லை. அக்காவுக்கு ஒரு வயது. அப்பா சிங்களக் கிராமத்தில் பணி புரிந்தார். தமிழர் மீதான இனப்படுகொலை நிகழ்கிறது. முஸ்லீம் சகோதரர்கள் அப்பா, அம்மாவைப் பாதுகாக்கிறார்கள். அது ஒருசில நாட்களுக்குப் பிறகு இயலாமல் போகிறது. அக்காவையும் தூக்கிக் கொண்டு அம்மாவும் அப்பாவும் இன்னும் சில ஆயிரக்கணக்கான தமிழர்களும் தமிழ்த் தேசத்தை நோக்கி பேருந்தில் வருகிறார்கள்.

இதே இடம். அனுராதபுரக்காடு. 'நுவரவெவா' குளக்கட்டு. வந்த அனைத்துப் பேருந்தும் நிறுத்தப்படுகிறது. அனுராதபுரச்சந்தியில் சிங்கள காடையர் தமிழர்களை வெட்டிக் கொல்லக் காத்திருக்கிறார்கள். அதே சிங்களக் காடையர் கூட்டம் 'நுவரவெவா' வாவியை நோக்கி தீப்பந்தங்களுடன் வந்தார்கள் தமிழர்களை வெட்டிக்கொல்ல. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் அத்தனை தமிழர்களுக்கும் தெரிந்து போயிற்று இனிச் சாவுதான்.

தமிழர்களுக்கு காவலாக வந்த தமிழரான பொலிஸ் அதிகாரி கதிர்காமர், துப்பாக்கி எடுத்துச் சுட்டு, காடையர்களைக் கலைக்கிறார். தமிழர் உயிர் தப்பியது. (அந்தப் பொலிஸ் அதிகாரி கதிர்காமரை 2,3 நாட்களிலேயே சிங்களப் பொலிசாரும், காடையரும் சேர்ந்து வெட்டிக் கொன்று விட்டார்கள் என்பது வேறு கதை)

1958ல் இது நிகழ்கிறது. 50 வருடங்கள் அரை நூற்றாண்டு. இப்போது அதே குளக்கட்டு ஏறி தமிழர் பாய்கிறார்கள். தமிழர் பயந்து ஒடுங்கிய காலம் போயிற்று. 58ல் அதே குளம். பயந்த தமிழர். 2007இல் அதே குளம பாய்ந்த தமிழர்.

காலம் எப்படி மாறிற்று? காரணம் யார்? எங்கள் தலைவனின் வரவு. அவன் தோற்றிய படை. தோள் கொடுக்கும் தளபதிகள். உரமாய் நின்ற மக்கள். உணர்வு, ஓர்மம், வீறு, வீரம் இவை தாமே இவற்றுக்கான காரணம்.

தலைமையேற்றுப் போன தளபதி என்ன சொல்கிறான்?

"தலைவர்தான் எங்கள் அப்பா. எங்கள் அம்மா. எல்லாம் அவர்தான். அவர்காலத்தில் தமிழீழம் காண்போம். அதற்கு எல்லோரும் ஒரு மூச்சாய் நிற்க வேணும்"

சிலிர்த்துப் போகிறேன் நான். ஓம். நாங்கள் எல்லோரும் ஒரே மூச்சாக நிற்க வேணும். தமிழர் எல்லோரும் (ஒரு சில தறுதலைகளைத் தவிர) உணர்வாயிருக்கிறார்கள். அது உண்மை.

ஆனால் இடையிடையே தயக்கம், சோர்வு, சந்தேகம், அவநம்பிக்கை, விரக்தி என்றும் வருகின்றன. இப்படி ஒரு 'அடி' கண்டால் பூரித்து போகிறார்கள்.

ஆனால் அது போதாது. போர் என்பது எங்களது ஆசைக்காக அல்ல. வெல்வதற்காக, வாழ்வதற்காக. எனவே நாங்கள் எல்லோரும் ஓர் உணர்வுடன் ஓர்மத்துடன் இடையில் எந்த தளம்பலும் இல்லாமல் தலைவனை முழுமையாய் நம்பி ஒரு மூச்சில் எழவேண்டும். எழுவோமா? ஓம் என்போரே, வாருங்கள் ஓரணியில் திரள்வோம்.

# முயற்சி திருவினை ஆக்கும்

**வள்ளுவர் காட்டும் வழி**

எழுதுவது: **இராம. கே. நாதன்**

ஒருவரது வாழ்வின் வெற்றிக்கு அவரது அயராத உழைப்பு ஒரு முக்கிய காரணியாக அமைகிறது. கடுமையான உழைப்பு இன்றி வாழ்வில் வெற்றி பெறுவது இயலாத காரியமாகிவிடும்.

சிலர் தமது வறுமைக்கும் கீழான நிலைக்கும் தமது விதியை நொந்து கொள்கிறார்கள். இது அவர்களது முயற்சியின்மைக்கு அவர்கள் தரும் நொண்டிச் சாக்காகும்.

ஏனெனில் கடுமையான உழைப்பினால் ஒருவருடைய தலைவிதியையே மாற்றி விட முடியும். (குறள் 619)

தான் செய்த பாவபுண்ணியங்களின் விளைவினாலேயே தனது வாழ்க்கை துன்பமானதாக அமைந்துவிட்டது என்று ஒருவன் கருதினாலும் அவன் அயராது உழைப்பானேயாயில் அவனது வாழ்க்கையை அவனால் மாற்றியமைத்துவிட முடியும். (குறள் 620).

ஒருவன் வறுமையில் துன்பப்படுவது அவன் வாழும் இடம், நேரம், சூழ்நிலை என்பவற்றைப் பொறுத்து உள்ளது. ஒருவன் வறுமையாக இருக்கிறானே என்று எவரும் அவன் மீது குறை சொல்லப் போவதில்லை.

ஆனால் அந்த வறுமையைப் போக்குவதற்கு முயற்சி செய்யாது, அந்த வறுமையிலிருந்து விடுபடுவதற்கு வழிதேடாது மீண்டும் மீண்டும் வறுமையிலேயே காலம் கழிப்பது குறை கூறப்படும்.

ஏனெனில் சந்தர்ப்ப சூழ்நிலையால் அவன் வறுமை நிலையை அடைந்திருந்தாலும் அவ் வறுமையிலிருந்து வெளியேற முயற்சிக்காது இருப்பதே பிறரின் பழிக்கு ஆளாக்கும். (குறள் 618).

ஒருவரது வாழ்வின் வெற்றி அவரது சொந்த வாழ்வை மாத்திரம் மேம்படுத்துவதாக இருந்து விடக் கூடாது. அவனைச் சூழ்ந்திருக்கும் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் எனப்பலரையும் நன்மை பெற வைக்கும் ஒரு சக்தியாக இருத்தல் வேண்டும். அப்படிப்பட்டவனது உழைப்பு அவனுக்கு மாத்திரமல்லாது அவனைச் சார்ந்தவர்களுக்கும் நன்மை பயப்பதாக அமைந்து விடும். (குறள் 613).

ஏனெனில் இப்படியாகத் தானும் வாழ்ந்து தன்னைச் சார்ந்தவர்களும் சிறப்பாக வாழ வேண்டுமாயின் அவன் தனது சொந்தக் கேளிக்கைகளிலும், மகிழ்ச்சியிலும் நாட்டம் கொள்ளாது, உழைப்பையே மேன்மையாக நினைத்தல் அவசியமாகிறது.

அப்படி உழைக்க முடியாதவன் எவ்வளவுதான் பிறருக்கு உதவவேண்டும் என ஆசையுடையவனாக இருந்தாலும் அவனால் தனது நோக்கத்தை அடையமுடியாது போய்விடும். (குறள் 614).

ஒரு சமூகத்தில் மதிப்புள்ளவன் தனது சொந்த வாழ்க்கையில் வெற்றி பெற்றவனாக இருத்தல் அவசியம்.

அவனது சமூகம், அவனிடமிருந்து பெறுகின்ற உதவிகளிலும், அவன் அச் சமூகம் மேம்பட உதவுகின்ற வழிமுறைகளினாலுமே அவன் அச் சமூகத்தினால் மதிக்கப்படுகிறான்.

அவ்வாறாக தனது சமூக நலனில் அக்கறை உள்ளவன் தனது சொந்த கேளிக்கைகளில் நாட்டம் உள்ளவனாக இருக்கமாட்டான். எப்போதும் பிறர் நலனிலேயே அக்கறை கொண்டவனாக இருப்பதுடன் அவர்களைத் தாங்கும் தூணாகவும் இருப்பான். (குறள் 615)

கடினமான உழைப்பு என்பது எவ்வளவு தடைகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் மீறி ஒருவனுக்கு நன்மை அளித்தே தீரும்

அதுதான் ஒருவனுக்குச் செழிப்பான வாழ்வைப் பெறுவதற்கு ஏதுவானதாக அமையும். நேரம், காலம், சந்தர்ப்பம் என்பவை அநுகூலமாக இருந்தாலும் உழைப்பு இல்லாது ஒரு செழிப்பான வாழ்வை அமைத்துக் கொள்வது கடினம். உழைப்பில்லாதவர்கள் மத்தியில் பசியும் பட்டினியும்தான் தலைகாட்டும். (குறள் 616)

அவர்கள் வீட்டில் மூதேவி குடியிருப்பாள். கடினமான உழைப்பாளிகளுக்குச் சீதேவியின் அருள் கிடைக்கும். (குறள் 617)

எவ்வளவுதான் கடுமையாக உழைத்தாலும் சில சமயங்களில் ஒரு சில தடைகள் வந்து சேரும். உழைப்பதற்கு எவ்வித பலனும் இல்லாததுபோல் தோன்றும். அல்லது எடுத்த காரியம் ஒருவரின் வல்லமைக்கு அப்பாற்பட்டதோ என எண்ணத் தோன்றும்.

ஆனால் அந்நேரங்களில் மனச் சோர்வு அடையாது மேலும் தொடர்ந்து கடினமாக உழைப்பவர்களுக்கு வெற்றி நிச்சயம் கிட்டும். (குறள் 611)

சிலர் ஒரு காரியத்தைத் தொடங்கியபின்னர் அதைச் சரிவரச் செய்து முடிக்காது அரைகுறையாக பாதியிலேயே அதைக் கைவிட்டு விடுவர். இப்படியாக எடுத்த காரியத்தை கடைசிவரை தொடர்ந்து செய்து முடிக்காதவர்களுக்கு வாழ்க்கையில் தோல்வி மட்டுமல்லாது உலகத்தாரின் பழிகளும் வந்துசேரும். இவனை நம்பமுடியாது, அல்லது இவனில் தங்கியிருக்க முடியாது, இவன் இடையில் கைவிட்டுவிடுவான் என்பன போன்ற பழிகளும் வந்து சேரும்.

ஆகையால் ஒரு காரியத்தை தொடங்கினால் அது எத்தகையது ஆகினும் அதைக் கடைசிவரை செய்து முடிப்பது அவசியம். ஒரு காரியத்தை தொடங்கி அதை முழுமையாக நிறைவேற்றி வைக்காதவனின் வாழ்க்கை வெற்றியை அடையாது விடுவது மட்டுமன்றி அவனுக்கு ஊரார் பழிகளும் வந்து சேரும். (குறள் 612)

எனவே வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என விரும்புபவர்கள், வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என விரும்புபவர்கள், கடுமையாக உழைப்பதில் ஆர்வமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். இந்த உண்மையை வள்ளுவன் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே கூறியிருந்தாலும், அது இன்றைய உலகிற்கும், வாழ்விற்கும் மிகப் பொருத்தமான தொன்றாகும்.

# மீண்டும் வந்த எல்லாளன்கள்





கிமு 101ஆம் ஆண்டு...

அனுராதபுரத்தை தலைநகரமாகக் கொண்டு இலங்கைத் தீவின் பெரும் பகுதியை ஆண்டு கொண்டிருந்த தமிழ் மன்னன் எல்லாளன் தெற்கில் இருந்து படையெடுத்து வந்த சிங்கள மன்னனாகிய துட்டகைமுனுவால் வெற்றி கொள்ளப்படுகிறான். 72 வயது நிரம்பிய எல்லாளனிற்கும் இளைஞனான துட்டகைமுனுவிற்கும் இடையில் நடந்த தனிச் சண்டையில் எல்லாள மன்னன் வீரச் சாவு அடைகிறான்.

இந்த நிகழ்வை இன்று வரை சிங்களப் பேரின வாதம் போற்றிக் கொண்டாடி வருகிறது. தமிழர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் என்றும், துட்டகைமுனு பௌத்த சாசனத்தை காப்பாற்ற போர் செய்த சிங்கள மன்னன் என்றும் பாடசாலைகளில் போதிக்கப்படுகிறது.

சிங்கள் பேரினவாதத்தால் 'வரலாற்றுநூல்' என்று சொல்லப்படுகின்ற 'மகாவம்சம்' எல்லாள மன்னன் தமிழ்நாட்டில் இருந்து படையெடுத்து வந்த சோழ மன்னன் என்று சொல்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் அப்படி ஒரு மன்னன் இருந்ததற்கான சான்றுகள் எதுவும் இல்லை. தமிழ்நாட்டின் கல்வெட்டுக் களிலோ, இலக்கியங்களிலோ எல்லாளன் பற்றிய குறிப்புகள் தென்படவில்லை.

நடுநிலையான ஆராய்ச்சியாளர்கள் எல்லாளன் இலங்கைத் தீவின் வட பகுதியில் இருந்து வந்தவன் என்று சொல்கிறார்கள். வன்னியில் உள்ள பூநகரிப் பகுதியை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்த எல்லாளன் கிமு 145ஆம் ஆண்டில் அனுராத புரத்தின் மீது படையெடுத்து வெற்றி கண்டான் என்று சொல்கிறார்கள்.

எல்லாள மன்னன் படையெடுத்து ஏறக்குறைய 2150 ஆண்டுகள் கழிந்த பின்பு மீண்டும் புதிய எல்லாளன்கள் வன்னியில் இருந்து அனுராத புரத்தின் மீது படையெடுத்து சிங்களப் பேரினவாதத் தின் இதயத்தை நொறுக்கிவிட்டிருக்கிறார்கள்.

இந்தத் தாக்குதலை தாம் எதிர்பார்க்கவில்லை என்று சிறிலங்காவின் பாதுகாப்புத்துறைப் பேச்சா ளரும் அமைச்சருமாகிய கேஹலிய ரம்புக்வல்ல கூறியுள்ளார். ஆனால் மாவீரர் வாரம் அண்மிப் பதால் விடுதலைப் புலிகள் ஒரு பெரும் தாக்குதலை நடத்துவார்கள் என்று எதிர்பார்த்து அனுராதபுர வான்தளம் உட்பட சிறிலங்காவின் அனைத்து படை முகாம்களும் உசார் படுத்தப்பட்டிருந்தன என்பது தான் உண்மை.

ஆனால் அதையும் மீறி அனுராதபுர வான் தளத்தை தகர்த்து விடுதலைப் புலிகள் பெரும் சாதனை ஒன்றை நிலைநாட்டியிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் அனுராதபுரம் வரை எப்படி வந்து தாக்குதல் நடத்தி, இத்தனை அழிவுகளை ஏற்படுத்தினார்கள் என்பது சிறிலங்கா அரசுக்கு இன்னும் புரியாத புதிராகவே இருக்கிறது. வான் படையினர் 'சிரச' தொலைக்காட்சியில் 'சுப்பர் ஸ்ரார்' நிகழ்ச்சி பார்த்துக் கொண்டிருந்தார்கள், மோட்டார் சைக்கிள் ஓட்டப் பந்தயம் நடத்தி களைத்துப் போய் தூங்கி விட்டார்கள், விடுதலைப் புலிகள் கட்டிட ஒப்பந்தக்காரர்களாக வான் தளத்தில் வேலை செய்து வேவு பார்த்திருந்தார்கள், இப்படி எல்லாம் சொல்லி தனக்கு ஏற்பட்ட அவமா னத்தை துடைத்துக் கொள்ள சிங்கள தேசம் முனைந்து வருகிறது.

சிங்கள தேசத்திற்கு பெருத்த தோல்வியையும் தமிழீழ தேசத்திற்கு பெருத்த வெற்றியையும் வழங் கியுள்ள இந்த நடவடிக்கையை 21 பேர் கொண்ட கரும்புலிகளின் அணி நிறைவேற்றியது.

ஏற்கனவே வன்னியில் இருந்து வந்து அனுராத புரத்தில் தங்கியிருந்த கரும்புலிகள் பின்பு படகுக ளின் மூலம் நுவரக்குளத்தின் ஊடாகப் பயணம் செய்து வான்தளத்திற்கு சற்றுத் தொலைவில் காட்டுப் பகுதியில் தரை யிறங்கி, அங்கிருந்து நடந்து வந்து வான்தளத்தை அடைந்துள்ளனர். நுவரக்குளம் வான்தளத்தில் இருந்து ஏறக்குறைய இரண்டு கிலோமீ ற்றர் தொலைவில் உள்ளது. வான் தளத்தின் பாதுகாப்பு வேலியை வெட்டி அறுத்த கரும்புலிகளின் அணி இரண்டு அணிகளாக பிரிந்து உள்நுழைந்து நிலையெடுத்தது.

நவீனரக தானியங்கித் துப்பாக்கிகளோடும், சிறியரக டாங்கி எதிர்ப்புப் பீரங்கிகளோடும் உள் நுழைந்த கரும்புலிகளின் அணிகள் அதிகாலை 3.20 மணியளிவில் தாக்குதலை ஆரம்பித்தன.

ஒரு அணி அங்கிருந்த காப்பரண்களையும்,

**அரசியல் அலசல்**

அலசுபவர்: **வி.சபேசன்**

விமான எதிர்ப்பு பீரங்கி நிலைகளையும் கைப் பற்றிக் கொண்டது. சிறிலங்காப் படையின் நிலை களை கைப்பற்றி, அங்கிருந்த கனரக ஆயுதங் களின் மூலமே சிறிலங்காப் படையினர் மீது தாக் குதல் நடத்தியது. இந்த அதிரடித் தாக்குதலினால் வான்படைத் தளத்தில் பெரும் அதிர்ச்சியும் குழப்பமும் ஏற்பட்டது. கரும்புலிகளின் ஒரு அணி பாதுகாப்புச் சூடு வழங்க, மற்றைய அணி வான்தளத்தில் தரித்து நின்ற வானூர்திகளை தகர்த்து அழித்தது.



*அமெரிக்காவால் வழங்கப்பட்டிருந்த Beach craft விமானம்*

விடுதலைப் புலிகளின் இந்த அதிர்ச்சிகர அதிரடித் தாக்குதலால் நிலைகுலைந்த சிறிலங்கா வான்படையினர் வான்தளத்தை விட்டு பின்வாங்கி சிதறி ஓடினர். பின்பு தம்மை சுதாகரித்துக் கொண்ட வான்படையினர் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்தி வான்தளத்தை மீண்டும் கைப் பற்ற முனைந்தனர்.

இந்த நேரத்தில் சிறிலங்கா வான் படையின ருக்கு புதிய ஒரு அதிர்ச்சியாக அங்கு வந்த வான் புலிகளின் இரண்டு விமானங்கள் குண்டுகளை வீசின. வான்புலிகளின் குண்டு வீச்சில் ஒரு எம் ஐ 24 ரக உலங்கு வானூர்த்தி தகர்க்கப்பட்டது. வான் தளத்திற்கும் கடும் சேதம் ஏற்பட்டது. வான் புலிகளின் தாக்குதலினால் பீதியுற்ற சிறிலங்கா வான்படையினர் வான்தளத்தை கைப்பற்றும் முயற்சியைக் கைவிட்டு பின்வாங்கினர்.

வான்புலிகளின் தாக்குதலை அடுத்து அனுராத புர வான்தளம் கரும்புலிகளின் முற்றுமுழுதான கட்டுப்பாட்டுக்குள் வந்தது. வான்தளத்தின் காப்பரண்களையும், பீரங்கி நிலைகளையும் கைப் பற்றிக் கொண்ட கரும்புலிகள், கடும் தாக்குத லை சிறிலங்காப் படையினர் மீது தொடுத்து வான் தளத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த னர். குண்டுகளை வீசிவிட்டு வான்புலிகளின் விமானங்கள் இரண்டும் மீண்டும் தளம் திரும்பின.

விடுதலைப் புலிகளின் வான்படையும் தரைப் படையும் இணைந்து நடத்திய முதலாவது தாக்கு தல் இது. வான்புலிகள் ஒரு பக்க துணையாக மட் டுமே செயற்பட்டிருந்தாலும், வான்தளத்தை கரும் புலிகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவ தற்கு முக்கிய பங்கை வான்புலிகள் ஆற்றியுள் ளார்கள். எதிர்காலத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு வான்புலிகள் சிறப்பான பங்களிப்பை கொடுப்பார்கள் என்பதை உறுதி யாகச் சொல்லிக்கொள்ளலாம்.

## 21 எல்லாளன்கள் சிறிலங்காப் படைகளுக்கு பெரும் நாசம் விளைவித்து விட்டார்கள். விரைவில் ஆயிரக் கணக்கில் சங்கிலியன்களும் உட்புகுந்தால் என்ன ஆகும்?

வான்புலிகளின் தாக்குதற் திறன் இந்தச் சண் டையில் சிறப்பாக வெளிப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்காப் படையினருக்கும் நெரு க்கமான நிலையில் மோதல்கள் இடம்பெறுகின்ற போதோ, அல்லது விடுதலைப் புலிகள் ஒரு தளத்தை தகர்த்தபடி உள் நுழைகின்ற போதோ, சிறிலங்கா வான்படையின் விமானங்கள் குண்டு களை வீசுவதில்லை. தமது படையினரும் பாதிக்கப் பட்டு விடுவார்கள் என்ற அச்சமே இதற்கு காரணம்.

ஆனால் வான்புலிகள் வான்தளத்தில் உள்ளே கரும்புலிகள் நிற்கின்ற நிலையிலேயே, அவர் களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வகையில் துல்லியமான முறையில் குண்டுகளை வீசியது வான்புலிகளின் திறைமைக்கு ஒரு எடுத்துக் காட்டு.

கரும்புலிகள் அனுராதபுர வான்தளத்தில் வானூர்திகளை தகர்த்துக் கொண்டிருந்த போது, அனுராதபுரத்தில் இருந்து சில கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள மிகிந்தலைப் பகுதியில் சிறிலங்கா வான்படைக்கு சொந்த மான பெல் ரக உலங்குவானூர்திஒன்று மர்மமான முறையில் விழுந்து நொறுங்கியது. இந்த வானூர்தி விழுந்தது பற்றி பலவிதமான செய்திகள் உலாவுகின்றன.

முதலில் வான்புலிகளின் விமானம் ஒன்றை சிறில ங்காப் படையினர் சுட்டு வீழ்த்தியுள்ளதாக சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஆனால் அது சிறிலங்காப் படையினரின் வானூர்தி என்று பின்பு அனைவருக்கும் தெரிந்து போனது. சிறிலங்கா வான்படையின் வானூர்த்தியை வான்புலிகளின் விமானம் என்று நினைத்து சிறிலங்காப் படையினரே சுட்டு வீழ்த்தி விட்டனர் என்று சொல்லப்படுகிறது.

வவுனியாவில் இருந்து படையினருக்கு உதவி க்கு வந்த இந்த பெல் ரக உலங்கு வானூர்தி விடுதலைப் புலிகளின் வேறொரு அணியினரால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக சில தகவல்கள் கூறுகின்றன. ஆனால் சிறிலங்காப் பாதுகாப்புத் தரப்பின் பேச்சாளர் உலங்குவானூர்தி தொழில் நுட்பக் கோளாறு காரணமாகவே வீழ்ந்ததாக கூறுகிறார்.

சில மாதங்களிற்கு முன்னர் கட்டுநாயக்கா வான் படைத் தளத்தின் மீது வான்புலிகளின் இரண்டு விமானங்கள் தாக்குதல் நடத்த வருவதாக தகவல் வந்த போது, வான்புலிகளின் விமானங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக அனுராதபுரத்தில் இருந்து மேலெழுந்த எம் ஐ 24 ரக உலங்கு வானூர்த்தி திடீரென்று வீழ்ந்து நொறுங்கியது. தற் பொழுது இரண்டாவது தடவையாகவும் அப் பகுதி யில் வானூர்தி ஒன்று வீழந்ததானது ஒரு மர்மமான நிகழ்வாகவே சிலரால் பார்க்கப்படுகிறது.

ஒரு புறம் பெல் ரக உலங்குவானூர்தி இவ்வாறு மர்மமான முறையில் கீழே விழுந்து நொறுங்க, மறுபுறம் கரும்புலிகள் அனுராதபுர வான்தளத்தில் நின்ற மற்றைய வானூர்திகளை தகர்த்து அழித்தனர். காலை விடிந்து 9 மணியான போது கரும்புலிகளால் 8 வானூர்திகள் முற்ற காக அழிக்கப்பட்டிருந்தது. இதை கரும்புலிகள் வன்னியில் உள்ள தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தினார்கள்.

(தொடர்ச்சி 8ம் பக்கத்தில்)

*அடங்காதபுரம்*

*தந்த*

*அடிகண்ட*

*பின்னும்*

*அடங்காதோ*

*சிங்களத்தின்*

*அதிகார மோகம்?*

ஒரு பேப்பர்

# மீண்டும் வந்த எல்லாளன்கள்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் சண்டை 11 மணிவரை நீடித்தது. தொடர்ந்து பல வானூர்த்திகள் அழிக்கப்பட்டன. மறைவான இடங்களில் இருந்த வானூர்த்திகளையும் கரும்புலிகள் தேடி அழித்தார்கள். கரும்புலிகளின் தாக்குதலில் ஆயுதக் கிடங்கு, எண்ணெய் குதம் போன்றவையும் அழிக்கப்பட்டது. தாக்குதலினால் பல இடங்கள் தீப்பற்றி எரிந்தன. தீ பல இடங்களுக்குப் பரவி மேலும் பல வானூர்த்திகள் எரிந்து சாம்பலாயின.

சிறிலங்கா வான்படைக்கு துணையாக சிறப்புப் பயிற்சி பெற்ற அதிரடிப் படையினரும் கரும்புலிகளோடு சண்டையிட்டனர். கவச வாகனங்களும் கொண்டு வரப்பட்டு கரும்புலிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. கரும்புலிகளின் தாக்குதலில் ஒரு கவசவாகனம் சேதமடைந்து செயலிழந்தது. தமிழீழத்திற்கு பெரும் வெற்றியை பெற்றுக் கொடுத்து சாதனை புரிந்த கரும்புலிகள் கடைசி வரை சண்டையிட்டு தமது இன்னுயிரை மண்ணுக்காக ஈந்தனர்.

கரும்புலிகள் உறுதிப்படுத்தியதன் படி 8 வானூர்திகள் அழிக்கப்பட்டதை விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்கள். ஆனால் மொத்தமாக எத்தனை வானூர்திகள் அழிக்கப்பட்டன என்பதை சிங்கள ஊடகங்கள்தான் வெளியிட்டன. சிறிலங்காவின் படைத்துறை அதிகாரிகள் தமக்கு தெரிந்த ஊடகவியலாளர்களிடம் விசயத்தைக் கசிய விட்டிருந்தார்கள்.

கடைசியாக வருகின்ற தகவல்களின் படி அதிகாலை 3.20 மணியில் இருந்து முற்பகல் 11 மணி வரை நீடித்த சண்டையில் சிறிலங்கா வான்படை 25 வானூர்த்திகள் வரை இழந்து விட்டது. சிறிலங்கா வான்படை வரலாற்றிலேயே ஏற்பட்ட அதி கூடிய இழப்பாக இது கருதப்படுகிறது.

ஒரு படை நடவடிக்கைக்கு உறுதுணையாக விளங்கக்கூடிய இரண்டு எம் ஐ 24 ரக உலங்கு வானூர்திகள், இரண்டு எம் ஐ 17 ரக உலங்கு வானூர்திகள், இரண்டு பெல் 212 ரக உலங்கு வானூர்திகள் ஆகியன சிறிலங்காப் படைகள் இழந்தவைகளுக்குள் அடங்கும்.



k8 பயிற்சி விமானம் எரிந்த நிலையில்

எம் ஐ 24 ரக வானூர்திகளை பறக்கும் டாங்கிகள் என்று அழைப்பார்கள். மிக், கிபீர் போன்ற யுத்த வானூர்திகளை வாங்குவதை விட அதிகளவு எம் ஐ 24 ரக வானூர்திகளை வாங்குவதே சிறந்தது என்று அமெரிக்க இராணுவ வல்லுனர்கள் சிறிலங்கா அரசுக்கு ஆலோசனை வழங்கி இருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது.

அவ்வளவு தூரம் இந்த உலங்கு வானூர்திகள் பயன் மிக்கவை. எம் ஐ 17 மற்றும் பெல் 212 ரக வானூர்திகள் தாக்குதலோடு வினியோகப் பணிகளையும், படையினரை ஏற்றி இறக்குகின்ற வேலைகளையும் மேற்கொள்ளக் கூடியது.

பொதுவாக அனுராதபுர வான்தளத்தினுள் ஓரிரு உலங்கு வானூர்திகள்தான் நிற்பது வழக்கம். மற்றையபடி ஒரு பயிற்சிவானூர்த்தித் தளமாகவே அனுராபுர வான்தளம் பேணப்பட்டு வந்தது. ஆனால் தற்பொழுது பல தாக்குதல் உலங்கு வானூர்திகள் அங்கே நிறுத்தப்பட்டிருந்ததற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

ஒன்று மன்னார் பகுதியில் ஆறு மாதங்களாக தொடர்ந்து நடந்து வரும் சண்டைகள். இச்சண்டைகளிற்கு இந்த உலங்குவானூர்திகள் இடையிடையே பயன்படுத்தப்பட்டு வந்தன. அத்துடன் வரும் நாட்களில் எம் ஐ ரக உலங்கு வானூர்திகளை அதிகளவில் சண்டைகளில் ஈடுபடுத்தவும் சிறிலங்காப் படை திட்டமிட்டிருந்தது.

அடுத்த காரணம் இதை விட முக்கியமானது. அது வான்புலிகளோடு சம்பந்தப்பட்டது. வான்புலிகளின் விமானங்களை எதிர்கொள்வதற்கு மிக் 29 ரக வானூர்த்திகளை கொள்வனவு செய்ய முயன்று, அதன் பிறகு பல்வேறு காரணங்களால் அத் திட்டம் கைவிடப் பட்டது. அதற்கு பதிலாக அனுராதபுர வான்தளத்தில் எம் ஐ ரக உலங்குவானூர்திகளை நிறுத்தி வான்புலிகள் வருகின்ற போது, உடனடியாகப் புறப்பட்டுச் சென்று வான்புலிகள் மீது வானத்தில் வைத்தே தாக்குதல் நடத்த முடிவு செய்யப்பட்டது.

இதற்காகவே வானில் வைத்து தாக்குதல் நடத்தக்கூடிய எம் ஐ ரக வானூர்திகள் அனுராதபுர வான்தளத்தில் நிறுத்தப்பட்டிருந்தன. அத்துடன் கே 8 ரக வானூர்த்திகள் சிலவும் அங்கே நின்றது. கே 8 ரக வானூர்தி பயிற்சிக்கு பயன்படுத்தப்பட்டாலும், அதற்கு இரவில் தொழிற்படும் திறமை உண்டு. வான்புலிகளின் தாக்குதல் இரவிலேயே இதுவரை இடம்பெற்றதால், கே 8 ரக வானூர்தி வான்புலிகளை எதிர்கொள்ளக் கூடியதாக கருதப்பட்டது.

கடந்த ஏப்ரல் 26 வான்புலிகளின் விமானங்கள் வருவதாக தகவல் கிடைத்ததும் கட்டுநாயக்காவில் இருந்து இரண்டு கே 8 ரக விமானங்கள் மேலெழுந்து வட்டமிட்டு வான்புலிகளை எதிர்கொள்ளத் தயாராகியது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வாறு வான்புலிகளை எதிர்கொள்ளும் ஆற்றல் மிக்கது என்று கருதப்பட்ட கே 8 ரக வானூர்திகளும் அனுராதபுர வான்தளத் தாக்குதலில் அழிக்கப்பட்டு விட்டது.

மொத்தத்தில் வான்புலிகளை எதிர்கொள்ளும் திறன் மிக்கவையாகக் கருதப்பட்ட பல வானூர்திகளை சிறிலங்கா வான்படை இழந்து விட்டது.

அத்துடன் பீச் ரக கண்காணிப்பு வானூர்தி அழிக்கப்பட்டதும் சிறிலங்கா வான்படைக்கு ஒரு பேரிழப்பாகக் கருதப்படுகிறது. வன்னியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டங்களை கண்காணிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வந்த இந்த பீச் கிராவ்ற் வானூர்தி அதி நவீனமானதும் மிக விலை உயர்ந்ததும் ஆகும். பீச் கிராவ்ற் ரக வானூர்தி ஒன்றின் விலை ஏறக்குறைய 25 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த ரகத்தில் இரண்டு வானூர்தி மட்டும்தான் சிறிலங்கா வான்படையிடம் இருந்தது. இதில் ஒன்று தற்பொழுது அழிக்கப்பட்டு விட்டது.

இவைகளோடு பிரீ 6 ரக பயிற்சி வானூர்தி எட்டும் ஆளில்லாத உளவு விமானங்கள் மூன்றும் அழிக்கப்பட்டன. இவைகளோடு ராடர் நிலையங்கள், விமான எதிர்ப்பு பீரங்கிகள், ஆயுதக் கிடங்கு, எண்ணெய் குதம் என்று சிறிலங்கா வான்படை பேரழிவைச் சந்தித்திருக்கிறது. அத்துடன் 18 படையினர் கொல்லப்பட்டும் 30 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளதாக தெரிய வருகிறது.

விடுதலைப் புலிகள் தோல்வியின் விளிம்பில் நிற்பதாக பரப்புரை செய்து வந்த சிறிலங்கா அரசு அதிர்ச்சியில் உறைந்து போய் நிற்கிறது. மன்னாரில் படை நடவடிக்கையை தொடர்வதற்கோ, வான்புலிகளை எதிர்கொள்வதற்கோ கொண்டுள்ள வலிமையில் பெரும் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டு விட்டதானது சிறிலங்கா அரசுக்கு பெரும் அச்சத்தை கொடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் இதோடு நிற்கப் போவதில்லை. 21 எல்லாளன்கள் சிறிலங்காப் படைகளுக்கு பெரும் நாசம் விளைவித்து விட்டார்கள். விரைவில் ஆயிரக் கணக்கில் சங்கிலியன்களும் உட்புகுந்தால் என்ன ஆகும் என்ற கேள்விதான் தற்பொழுது சிங்கள அரசின் அடிவயிற்றை கலக்கிக் கொண்டிருக்கிறது.


தொடரும் 19ம் ஆண்டு நினைவலைகள்



மொட்டென
25.11.1951

பொட்டென
05.11.1988

நாட்டுப்பற்றாளர்

**அமரர் சரவணமுத்து செல்வராசா (மாமா)**

[தென்மராட்சி பிரபல வர்த்தகரும்,
சாவகச்சேரி வர்த்தக சங்க முன்னாள் செயலாளரும்]

ஒளிரவனே!
ஊர் வாழ்த்தும் 'மாமா'வாய்
உரம் சேர்த்த பற்றாளனே...!
உன்னவள் கோசலையும் ஐம்பெருஞ் செல்வங்களும்
கண்ணீர் நதிக்கடியில் மூழ்கித் திளைத்ததை நீயறியாயோ?
கயவஞ்சகரின் தீட்டு உம்மீது குண்டு மழை பொழிந்தபோது
என்ன நினைத்தீரோ?
யார் உம்மீது பழிதீர்த்தது?
மனிதம் தாங்கி நின்ற எமதூதன் யார்?
சூரியனே உம் கரங்களாய் நாம் பிறந்தபோது
நிச்சயம் ஒளிசேர்ப்போம் — உன்னவள் கூடிமகிழ
சூரியக் குழந்தைகளாய் ஒளி பிறப்போம்.
போராளியாளனே! ஈந்தோம் அஞ்சலி.

**- மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

தகவல்: மருமகன் கரன் (லண்டன்), மகள் நிதி / கௌரி (லண்டன்)
Tel: 00 44 79 40 56 41 93



**"1. Stop Solicitors"**

Commissioners for OATHS

என்ற சட்ட நிறுவனமாக

Walthamstowவில்

**"தனா சட்டத்தரணி"**

தனித்து தனது தனித்துவமான சேவையை Aug 20ம் திகதி ஆரம்பித்துள்ளார்.
உங்கள் வரவினாலும் ஆதரவினாலும் உயர்ந்த தனா தொடர்ந்து உங்களுக்கு உயர்ந்த தனது தரமான சேவையைச் செய்ய ஆர்வமாய் உள்ளார்.



தனாவின் சேவைகள் அவசர சேவைக்கு: T.Thana 079 7666 0635

- Resedental Properties
- Commercial Leases
- Immigration Applications
- Family Re-Union
- Entry Clearance Applications & Appeal, Landlord & Tenant
- Family / Divorce Matters
- Power of Attorney Wills & Probate

For Service Call at

1st Floor, 246 Hoe Street,
Walthamstow,
London E17 3AX

Tel: 020 8521 4686
Fax: 020 8521 9919

E-Mail:
thanasolicitor@yahoo.co.uk

# தமிழீழப் பிரகடனம் காலம் கனிகிறது

எழுதியவர்
*கலாநிதி க. சிதம்பரநாதன்*

'ஒரு அமைப்பினால் ஒரு எல்லைக்குள் அதனுடைய முழுமையான அதிகாரத்தையும் வரையறுக்கப்பட்ட சட்டங்களுக்கு உட்பட்ட வகையில் ஆயுதப் படை- சிவில் சேவை- ஒரு நிருவாக கட்டமைப்பு- நீதித்துறை- பொலிஸ் படையையும் கொண்டிருந்தால் அது தனியான இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட ஒரு தனிநாடாகும்' - ஜேர்மனிய அரசியல்-பொருளாதார தத்துவ ஆசிரியர் திரு மெக்ஸ்மில்லன் கால் எமில் வெபர் அவர்கள் (1864-1920)

நாம் தொடர்ந்தும் கிழக்கு தீமோர்- அல்லது கொசவோ போன்ற சுதந்திர நாடுகளின் உருவாக்கத்திற்கு சர்வதேச சமூகம் ஆதரவு அளித்தது போன்று சுதந்திர தமிழீழம் அமைவதற்கு எமக்கு உதவவேண்டுமென்று கேட்பது எம்மை பொறுத்தவரை நீதியானதாக இருந்தாலும் அது நடைமுறையில் சாத்தியமாகும் என எதிர்பார்ப்பது வெறும் பகற் கனவாகவே ஆகும் என்ற எனது ஆணித்தரமான கருத்தின் அடிப்படையில் எனது கருத்துக்களை இங்கு முன்வைக்க விரும்புகிறேன்.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒருதலைப் பட்சமான சுதந்திர தனிநாடாக பிரகடனப் படுத்திய ஆபிரிக்கா-சோமாலிநிலத்தின் (Somaliland) உருவாக்கமும் அதன் வளர்ச்சி பற்றியும் சற்று ஆராய்வோமானால் இன்றைய சூழ்நிலையில் அதுபோன்ற சுதந்திர தனி நாடான தமிழீழத்தை நாம் பிரகடனப்படுத்த முடியும் என்பது எனது கருத்தாகும்.

சோமாலிநிலம் தனிநாடாக பிரகடனம் அறிவிக்கப்பட்டபோது அதற்கு உலகில் எந்தவொரு நாடும் மறைமுக ஆதரவைக் கூட அளிக்க முன்வரவில்லை.

நான் தற்போது எழுதிவரும் ஆய்வு நூல் தொடர்பாக பிரித்தானியாவில் உள்ள சோமாலி நிலத்தின் தூதுவரை அவரது காரியாலயத்தில் நேரடியாக சந்தித்து உரையாடக்கூடியவாய்ப்பு கிடைத்தது. அப்போது, சோமாலிநிலம் பற்றிய அவரது தகவல்களை எமது தமிழீழத்தினுடைய உருவாக்கத்துடன் தொடர்பு படுத்தி என்னுடைய சிந்தனைகளை தெரியப்படுத்த வேண்டுமென்று ஆவல் கொண்டேன்.

தமிழீழத்தின் ஒரு பிரதேசத்தை பிரகடனப் படுத்தாத சுதந்திர தனிநாடாக விடுதலைப் புலிகள் உருவாக்கியிருக்கின்றார்கள். இது சிங்கள நாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட இதுவரை காலமும் பிரகடனப்படுத்தாத தமிழீழத்தின் நிலப்பிரதேசம். சோமாலியாநாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட சோமாலி நிலம் போன்றது.

சர்வதேச நாடுகள் அங்கீகாரம் வழங்கினாலோ வழங்காவிட்டாலோ இந்த நிலப்பரப்பை தமிழீழத்தின் மீட்கப்பட்ட பகுதியாக சர்வதேசத்திற்கும் தமிழீழ மக்களுக்கும் பிரகடனப் படுத்தவேண்டிய கட்டாய தேவை உள்ளமையை விடுதலைப்புலிகள் பரிசீலனை செய்யவேண்டும்.

சர்வதேச சட்டங்களின் நியதிப்படி ஒரு நாடு என்பது

- ஒரு நிரந்தர மக்கள் தொகையை கொண்டிருத்தல்
- வரையறுக்கப்பட்ட எல்லைகளை கொண்டிருத்தல்
- ஒரு அரசாங்கத்தை கொண்டிருத்தல்
- மற்றைய நாடுகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய வல்லமையை கொண்டிருத்தல்

இந்த அடிப்படையில் சோமாலிநிலத்தின் பிரகடனமும் அதனது வளர்ச்சியும் தற்போதைய நிலையும் சர்வதேசத்திற்கு ஒரு சவாலாகவும் இருக்கின்றது. ஆயுத போராட்டமொன்றின் வெற்றியில் சோமாலிநிலம் அமைக்கப்படவில்லை.

சோமாலிநிலம் உருவாக்கப்படுவதற்கு அதன் அண்டைநாடுகள் எதிர்ப்புக்களை காட்டவில்லை. மாறாக எதியோப்பியா முழு ஆதரவையும் வெளிப்படையாகவே வழங்கியது. இப்போதும் வழங்குகின்றது.

இதன் அடிப்படையில் எமது தமிழீழ உருவாக்கத்தை சமப்படுத்தினால் முற்றிலும் மாறுபட்ட சூழலை நாம் எதிர்கொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆனால் தமிழீழத்தினுடைய சிறப்புடன்கூடிய சாதகமான காரணி என்னவென்றால் பிரகடனப்படுததப்படாத தமிழீழம் கடந்த ஆறு வருடங்களாக சோமாலி நிலம்போன்று அபிவிருத்தியையும் காத்திரமான தோற்றத்தையும் கொண்டுள்ளமை.

சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு தமிழீழம் ஆளாவது போன்ற நிலைப்பாடு சோமாலி நிலத்திற்கு இல்லை. சுதந்திர தமிழீழத்தை ஒருதலை பட்சமாக பிரகடனப் படுத்தும்போது- சிறிலங்கா அரசினது எதிர் தாக்கங்கள் எவையாக இருக்குமென்ற என்பது பற்றியும் நாம் அறிந்து வைத்துக் கொள்ள வேண்டியதும் அவசியமாகும்.

- தமிழீழத்தின்மீது முப்படைகளின் வலிந்த இராணுவத்தாக்குதலை தீவிரப்படுத்துதல்.
- தமிழீழத்திற்கு வெளிநாடுகளிலிலிருந்து கிடைக்கக்கூடிய உதவிகளை ஆகாய- தரை- கடல் மார்க்கமாக பெறுவதை தடைசெய்தல்
- ஏதாவது வெளி நாடுகள் தமிழீழத்திற்கு ஆதரவு வழங்குவதை முன்கூட்டியே தடுப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையில் பிரேரணையை கொண்டுவர முயற்சித்தல்

இவற்றில் முதல் இரண்டும் ஏற்கனவே பிரகடனப்படுத்தாத நடவடிக்கையாக சிறிலங்கா அரசு செய்து கொண்டிருப்பதினால் இவை புதிதாக அதிக தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆனால் மூன்றாவதாக குறிப்பிட்டது போன்று உலக நாடுகள் சில, நேரடியாக சிறிலங்காவுக்கு ஆதரவாகவும் விடுதலைப்புலிகளுக்கு ஏதிராகவும் பாரிய தாக்கத்தை சர்வதேசங்களிலிருந்து ஏற்படுவதை தவிர்ப்பதற்கு சிறிலங்கா அரசின் அணுகுமுறையை நாம் முன்னதாகவே கடைபிடித்துக் கொள்வது பொருத்தமானதாக இருக்கும்.

சிறிலங்கா தனது குற்றங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு அது பாவிக்கும் சுலோகமானது-

'சிறிலங்கா பழமைவாய்ந்த ஜனநாயகமரபு வழியில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசை கொண்டுள்ள தன்னாதிக்கமும் இறைமையும் கொண்ட நாடு என்பதாகும்'

> **ஏதாவது விமானசேவை தமிழீழத்திற்கு உலகெங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களின் பிரயாணத்தினால் ஏற்படக் கூடிய தங்களுக்குரிய வருமானத்தை கவனத்தில் கொண்டு தமிழீழத்திற்கான விமான சேவையை நடாத்த முன்வருவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.**

இதே சுலோகத்தின் அடிப்படையில்தான் சோமாலிநிலமும் தனது பயணத்தை ஆரம்பித்தது. சோமாலிநிலம் பிரகடனப் படுத்தப்படும்போது சர்வதேசத்தின் ஆதரவை உடனடியாக பெறாவிட்டாலும் அவற்றின் எதிர்ப்புகளை சம்பாதிப்பதை தவிர்ப்பதற்கு முன்கூட்டியே கையாண்டு கொண்ட திட்டங்கள் பற்றிய சில தகவல்களை இங்கு தருவது எமக்கு பயனுள்ளதாக அமையும்.

சோமாலிநில பிரகடனம் அறிவிக்கப் பட்டபோது உருவாகும் புதிய நாட்டின் உடனடியான எதிகாலத்திட்டத்தை கால அட்டவணையுடன் வெளியிட்டது. அது சோமாலி நிலத்திற்கான அரசியல் சாசனத்தின் வரைவு அமுலாக்கம்- அதன் அடிப்படையில் மக்கள் கலந்து கொண்டு சோமாலிநில அரசை ஜனநாயக முறையில் தெரிவுசெய்கின்ற செயற்பாடு பாராளுமன்றம் போன்ற கோட்பாடுகள் பற்றி தெளிவான கொள்கைகளை வெளிப்படுத்தியதாக இருந்தது.

தற்போதைய சோமாலி நிலத்தின் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல் தலைவர்களை சர்வதேசத்தினால் அங்கீகரிக்க முடியாவிட்டாலும்-அதனால் நிராகரிக்க முடியாத நிலையொன்றை சோமாலிநில மக்கள் ஆக்கிவிட்டார்கள்.

எந்த சுலோகத்தை வைத்து தமிழீழ மக்களை கொடுமைப் படுத்தி சர்வதேசத்திற்கு வேசம் போடுகின்றதோ அதே சுலோகத்தின் மூலம் பிரகடனப்படுத்தவிருக்கும் தமிழீத்திற்கு எதிரான போக்குகளை, ஜனநாயக விரும்பிகளான பல நாடுகள் காலப்போக்கில் கைவிடக் கூடிய சாத்தியக்கூறுகளை எற்படுத்தலாம்

தமிழீழத்தின் உறுதியான நிலைப்பாட்டுக்கும்- அதன் அபிவிருத்தி - வளர்ச்சி என்பவற்றுக்கு ஏதுவாக ஏற்கனவே அமைந்துள்ள காரணிகளைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை இரண்டு என்பது எனது கருத்தாகும்.

- தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான சர்வதேச அங்கீகாரம்.
- தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசத்தினுடனான உறவுகளும் உத்தியோகப் பற்றற்ற இராஜதந்திர உறவுகளும்

இந்த இரண்டு நோக்கிலும் நாம் நிச்சயம் வெற்றியடையவேண்டும். சோமாலிநிலம் உருவாக்கப்பட்டு 20 வருடங்களுக்கு மேலாக இருந்தாலும் சர்வதேசங்களின் அங்கீகாரத்தை பெறுவதில் அது அடைந்துவரும் தாமதம் சோமாலி நிலத்திற்கு வெளியில் ஒரு கட்டமைப்புடன்கூடிய நிர்வாக அமைப்புகளின் பற்றாக்குறை என்பது எனது ஆய்வின் ஒரு கணிப்பாகும்.

புலம்பெயர்ந்த தமிழீழமக்களும் அவர்களின் பல்வேறு கட்டமைப்புக்களும் சர்வதேச நாடுகளில் தமிழீழபோராட்டத்திற்கு அளித்து வரும் பல்வேறு பங்களிப்புக்களும் காலக்கிரமத்தில் எமது இலக்கை அடைவதற்கான வழியை ஏற்படுத்தும்.

ஆயுதப்போராட்டமொன்றின் மூலம் சுதந்திர தமிழீழத்தை அடைய முடியுமா அல்லது முடியாதா என்பது எனது விவாதமில்லை. ஆனால் சமகால உலக அணுகு முறையில் எமது தமிழீழ போராட்டம் துரதிஸ்டவசமாக பயங்கரவாதம் என்ற பதத்திற்குள் உள்ளடக்கப்பட்டுவிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அமெரிக்காவின் ஆசிய பிராந்திய விவகாரங்களுக்கு பொறுப்பான அதிகாரி திரு. புட்சர் அவர்கள் ஒரு தடவைவிடுதலைப்புலிகள் தங்களது இலக்கை அடைவதற்கு ஆயுத போராட்டமொன்றுதான் வழியில்லையென்று குறிப்பிட்டது நினைவுக்கு வருகின்றது.

அவர் குறிப்பிட்ட மற்றைய வழிகள் வேறு வகையாக இருந்தாலும் நாம் புரிந்து கொள்ளக்கூடிய வழி அரசியல் ரீதியாக தமிழீழத்தை பிரகடனப்படுத்துவதுதான் என்பதை தற்போதைய சூழலில் அனைத்து தமிழினமும் தீர்மானிக்கவேண்டிய ஒன்றாகும் என்பது எனது கருத்து.

நான் நேரடியாகவே தமிழீழ நிர்வாக செயற்பாட்டை பார்த்து அறிந்து கொண்டவன். தற்போதுள்ள தமிழீழ கட்டமைப்புக்குள் வெளியுலகிற்கான போக்குவரத்துக்கான சாதன அமைப்பு ஏற்படுத்துவதை விட வேறு எந்தவித புதிய நடைமுறைகள் பற்றியும் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய தேவையில்லையென்பது எனது கணிப்பு.

சோமாலிநிலத்திற்கு வெளியுலகில் இருந்து வர்த்தக போக்குவரத்து விமான சேவையை எதியோப்பிய நாட்டு விமான நிறுவனம் செய்து கொண்டிருக்கின்றது. எனவே உலகில் உள்ள ஏதாவது விமானசேவை தமிழீழத்திற்கு உலகெங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களின் பிரயாணத்தினால் ஏற்படக் கூடிய தங்களுக்குரிய வருமானத்தை கவனத்தில் கொண்டு தமிழீழத்திற்கான விமான சேவையை நடாத்த முன்வருவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

தமிழீழத்திற்கும் அதன் மக்களுக்கும் அண்மைக்காலமாக சிங்கள அரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள கொடூரங்களை சர்வதேச சமூகம் நன்கு அறிந்து கொண்டும் அதனை பாரா முகத்துடன் நடந்து கொள்வது எமக்கு வியக்கத்தக்க ஒன்றல்ல.

இராஜதந்திர அணுகு முறை என்ற ஒரு செயற்பாட்டுக்குள் வெறுமனே கண்டனங்களும்- அறிக்கைகளும்- வேண்டுகோள்களையும் விட வேறு எதையும் இந்த வல்லரசுகளிடம் இருந்து எம்மைப்போன்ற எந்த நாட்டு மக்களும் பெறமுடியாது என்பதை நாம் ஏற்றுக் கொள்வதை தாமதிக்கக் கூடாது என்பது எனது கருத்து.



INSIGHT SYSTEMS

பிரஜாவுரிமை பெறுவதற்குரிய LIFE IN THE UK பாட வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. கிழக்கு லண்டன் பகுதியில் இதுவரை கற்பித்த மாணவர்களில் 98%ற்கு மேலானவர்களை தேர்ச்சியடைய வைத்துள்ள பெருமைக்குரிய அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை. தமிழில் உதவிக் குறிப்புக்கள். ஒவ்வொரு வகுப்பு முடிவினிலும் அத்தியாய முடிவினிலும் பயிற்சிப் பரீட்சைகள். வெகு விரைவில் கம்பியூட்டர் வகுப்புக்களும் ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: 07908 866 300

# ஆயுதப் போராட்டம்: பயங்கரவாதமா? விடுதலைப் போரா?

## எழுபரிதி
*( ஒரு பேப்பருக்காக )*

தமிழீழ விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் சர்வதேச சமூகத்தினை நோக்கி நீண்ட நாட்களாகச் விடுக்கின்ற கோரிக்கை, சர்வதேச சமூகமானது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் சர்வதேச பயங்கரவாதத்திற்கும் இடையிலான வேறுபாட்டை விளங்கிக் கொண்டு அதற்கேற்ப செயற்பட வேண்டும் என்பதே.

சர்வதேச சமூகமானது ஆயதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அனைத்து குழுவினரையும் ஒரே தரப்பாக கருதுவது அவை விடுதலைப் புலிகளை சர்வதேசப் பயங்கரவாதிகளின் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வழிவகுத்தது.

இதனால் நன்மை அடைவது சிறிலங்கா அரசாங்கமே. ஏனெனில் உள்நாட்டில் பயங்கரவாத அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியிருக்கும் நாடு என்ற அனுதாபம் சிறிலங்கா அரசின்மீது இருப்பதால் அதன் மனிதவுரிமை மீறல்கள் விடயத்தில் சகிப்புத்தன்மை காட்டப்பட்டு வருகிறது.

தத்தமது நாட்டு மக்களுக்கோ, அவற்றின் தேசிய நலன்களுக்கோ தமிழீழ விடுதலைப் புலிகள் அச்சுறுத்தலாக இல்லாதவிடத்தும் இவ்வமைப்பு சில நாடுகளில் தடைசெய்யப் பட்டுள்ளமையானது இக்கருத்துருவாக்கத்தின் அடிப்படையிலேயே எழுந்தது ஆகும்.

வன்முறை தழுவிய போராட்டத்தை நடாத்துபவர்கள் என்ற வகையில் விடுதலைப்புலிகளின் எல்லா நடவடிக்கைகளுமே மனிதாபிமானமிக்கதாக இருக்கும் என யாரும் எதிர்பார்க்க முடியாது. இது ஈராக்கிலோ, ஆப்கானிஸ்தானிலோ இராணுவ நடவடிக்கைகளினை மேற்கொண்டிருக்கும் அமெரிக்க, பிரித்தானிய கூட்டுப்படைகளுக்கும் பொருந்தும்.

பயங்கரவாதம் என்ற பதத்திற்குரிய சரியான வரைவிலக்கணம் இன்னமும் வகுக்கபட முடியாத நிலையில், தேசிய இனங்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடும் இயக்கங்களை பயங்கரவாதப் பட்டியலில் வகைப்படுத்தப்படுவது தொடர்பில் அதிருப்தி கலந்த சில விமர்சனங்கள் அரசியல் நிபுணர்களினால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது தான் முதல் தடவையாக ஒரு முன்னணி அரசியல் பிரமுகர் இந்நடைமுறை பற்றி கேள்வி எழுப்பியிருக்கிறார்.

அவர் வேறுயாருமல்ல, அமெரிக்காவின் முதற்பெண்மணியாக இருந்தவரும் எதிர்வரும் அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடவிருக்கும் கில்லரி கிளின்ரன்.

பிரித்தானிய கார்டியன் பத்திரிகைக்கு அவர் அண்மையில் வழங்கிய பேட்டி ஒன்றில் பயங்கரவாதிகள் அனைவரையும் ஒரே மாதிரியாக வகைப்படுத்துவது தவறானது எனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாதம், அரசியல் குறிக்கோள்களை அடைவதற்கான ஆயுதமாகப் பயன்படுத்தப் படுவதாக குறிப்பிடடுள்ள அவர் வெவ்வேறு நாட்டு பயங்கரவாத இயக்கங்கள் ஒரே மாதிரியான தந்திரங்களை கையாண்டாலும், அவர்கள் தத்துவார்த்த ரீதியில் வேறுபட்டவர்களாக இருக்கிறார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கு உதாரணமாக இலங்கைத் தீவில் போரிட்டு வரும் விடுதலைப்புலிகளையும் ஸ்பெயின் நாட்டில் இயங்கும் பாஸ்க் கெரில்லாக்களையும் ஒப்பிட்டுள்ளார்.

வன்முறை தழுவிய போராட்டம் நடாத்துவோரை பயங்கரவாதிகள் என திருமதி. கிளின்ரன் அவர்கள் குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அத்தகைய இயக்கங்கள் எல்லாம் மானிட சுதந்திரத்தினை பறித்துக் கொள்வதற்காக போரிடவில்லை, மாறாக அவை அரசியல்ரீதியான குறிக்கோள்களை கொண்டுள்ளன என்பதை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். அந்த வகையில் அவரது கருத்துக்கள் வரவேற்கத் தக்கன.

இவ்விடயத்தில் தற்போதைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் போலன்றி அமெரிக்காவின் ஜனாதிபதியாக வரக்கூடிய நிலையில் உள்ள திருமதி கிளின்ரன் முற்போக்கான கருத்துக்களை கொண்டிருப்பது மகிழ்வைத் தருகிறது.

**'பயப்படவேண்டாம். கில்லரி கிளின்ரன் ஜனாதிபதியாக ஆகப்போவதில்லை' என மகிந்த இராஜபக்ச தனது சகாக்களைத் தேற்றிக் கொண்டதாக தெரிகிறது.**

ஆனால் அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுமிடத்தில் அமெரிக்க கொள்கை வகுப்பாளர்களிடத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவாரா என்பதனைபொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

எதிர்பார்த்தபடியே திருமதி கிளின்ரனின் கருத்துக்கள் சிங்கள தேசியவாதிகளையும், அதன் தலைவர்களையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

பயங்கரவாதம் தொடர்புபட்ட விடயத்தில் சர்வதேச உலகம் கறுப்பு-வெள்ளையாக ஒரே முடிவை எடுக்கும் எனவும், அதனை சாதகமாகப் பயன்படுத்தி, பயங்கரவாத பூச்சாண்டியை காட்டி தமது இனவழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக் முடியும் என நினைக்கும் சிங்களத் தலைவர்களுக்கு இவ்விதமான கருத்துருவாக்கம் உருவாவது மகிழ்ச்சியை ஏற்படுத்தப் போவதில்லை.

அதுவும் கொழும்பில் பயங்கரவாத ஒளிப்பு மாநாட்டை நடாத்தி ஒட்டுக் குழுத்தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை கொண்டு சாத்தானின் வேதம் ஓதக் கேட்டுக் கொணடிருப்பவர்களுக்கு இது நிட்சயம் கிலேசத்தை ஏற்படுத்தியிருக்கும்.

அண்மையில் சிறிலங்கா அமைச்சரவைக் கூட்டத்தில் இதுபற்றி பேச்செடுக்கப்பட்டபோது. 'பயப்படவேண்டாம். கில்லரி கிளின்ரன் ஜனாதிபதியாக ஆகப்போவதில்லை' என மகிந்த இராஜபக்ச தனது சகாக்களைத் தேற்றிக் கொண்டதாக சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

கில்லரி கிளின்ரன் என்ற பெண்மணி வெறுமனே ஒரு முன்னாள் ஜனாதிபதியின் மனைவி அல்ல. அவர் ஒரு சட்ட அறிஞர், பொதுப் பணியிலும் அரசியலிலும் பலவருடகாலமாக ஈடுபடுவர். நியுயோர்க் மாநிலத்தின் செனட்டராகவும் இருப்பவர். ஆகவே அவரது கருத்துக்கள் வலுவான ஒருவரிடமிருந்து வந்திருக்கின்றன என்ற வகையில் தமிழ் செயற்பாட்டாளர்களுக்கு இம்மாற்றம் ஒரு உத்வேகத்தை தரக்கூடியதாக அமைகின்றது என்பதில் ஐயமில்லை. இவை சட்டரீதியாக நிருபிக்கப் படும்போது இதன் உண்மையான பலாபலனை நாம் அனுபவிக்க முடியும்.

தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்திற்காக செயற்பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேற்கு நாடுகள் சிலவற்றிலும் அவுஸ்திரேலியாவிலும் கைதுசெய்யப் பட்டுள்ள தமிழ் செயற்பாட்டாளர்களின் நீதி விசாரணையிலும் இக்கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படுமாயின் புலம்பெயர் நாடுகளில் தமிழ் மக்களின் அரசியற்போராட்டம் புது வடிவம் பெறும் என்பதோடு தமிழீழ தேசியப் போராட்டத்தின் நியாயத்தன்மையும் உலக அரங்கில் வெளிப்படுத்தப்படும்.

இன்னொருவகையில் பார்த்தால் விடுதலைப் புலிகள் போன்று தேசிய இனங்களின் விடுதலைக்காகப் போராடும் இயக்கங்களுக்கு இருக்கும் பாரிய மக்கள் ஆதரவே, அவற்றை மானிடத்திற்கு எதிரான பயங்கரவாத இயக்கமாக வகைப்படுத்த முடியாதுள்ளது என்பதனையும், தமிழ் மக்களின் ஒன்றுபட்ட குரலின் அவசியத்தையும் நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.


தீபாவளியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை!

**Ganesha** Cash & Carry

அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்



உங்களுக்குத் தேவையான Sri Lankan, Indian, English, Groceries ஆபிரிக்கன் உணவு வகைகள் Fresh meat மற்றும் Off Licence பொருட்களை. . .

ஒரே இடத்தில் . . .

ஒரே நேரத்தில். . .

பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்.

பிரமாண்டமான Parking வசதிகள் எம்மிடம்.

Call:
Tel: **020 8597 9983**
Mob: **07946 058 177**

**Ganesha Cash & Carry**
112, Aldborough Road South, Newbury Park London 1G3 8EZ



## நடந்த நிகழ்வு

# இளைய கானக்குயில் 2007











கடந்த 20ம் திகதி சனிக்கிழமை மண்டபம் நிறைந்த ரசிகர்களுடன் 10 ஆவது ஆண்டாக மேடை ஏறியது திருமதி யோகா தில்லைநாதனின் 'இளைய கானக் குயில் 2007'.

பல இளம் பாடகர்கள் போட்டியிட்ட இந்த பாடல் போட்டியில் வழமை போலவே வெற்றியாளர்கள் மண்டபத்தில் நிறைந்திருந்த ரசிகர்களின் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

பால கானக் குயில்களாக அஜிதா பாலகிருஸ்ணன் மற்றும் கபிலன் முருகானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இளைய கானக் குயில்களாக ஆனந்த் பிரேமகுமார் மற்றும் புண்ணியா செல்வ முருகானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்விற்கு சித்திராலயா இசைக்குழுவினர் தங்கள் பின்னணி இசை மூலம் மெருகேற்றினர்.

இந்த நாட்டிலே மறைந்திருக்கும் இளந்திறமைகளை வெளிக் கொண்டு வருவதும் சிறுவர்களின் பாடும் ஆர்வத்தை அதிகரிப்பதுமான இந்தப் போட்டி நிகழ்ச்சியை வருடந் தவறாது நேர்த்தியாக ஒழுங்கமைத்து சிறப்பாகவே நடாத்தி வரும் திரு. திருமதி தில்லைநாதன் தம்பதியினரின் முயற்சி பாராட்டுக்குரியதே.

-- *கூத்தபிரான்*

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**NOV 03** — SATURDAY @ **5PM**

*காத்தவராயன் சிந்து நடைக் கூத்து*

திருநெல்வேலி சிறி பத்திரகாளி இளங் கலைஞர் மன்றத்தினரால் நடாத்தப்படும்.

Ashburton Learning Centre, Shirley Road, Croydon, Surrey CR9

*அனுமதி: தனிநபர் 8 பவுண்ஸ், குடும்பம்: 20 பவுண்ஸ் தொடர்புகளுக்கு: செந்தூரன்: 07834 777 171, செல்வன்: 07956 068 849, அருள் 07743 896 913*

**NOV 03** — SATURDAY @ **4:30PM**

*வெஸ்ரர்ன் தாளம்*

ஐக்கிய இராட்சிய தமிழ் மாணவர் அமைப்பினர் வழங்கும் கலை நிகழ்ச்சி

Greenford Assembley Hall, Greenford, Middlesex UB6 9QN

*அனுமதி: தனிநபர் 8 பவுண்ஸ், குடும்பம்: 20 பவுண்ஸ் தொடர்புகளுக்கு: 07940 020 758, 07961 726 326, 07970 272 554*

**NOV 03** — SATURDAY @ **5:30PM**

*சுதந்திரக் கனவுகள்*
*இசைத்தட்டு வெளியீட்டு விழா*

சுதந்திரக் கனவுகள் இசைத்தட்டு வெளியீட்டு விழா தாயகக் கலைஞர் புதுவை இரத்தினதுரையின் பாடல்களின் ஆங்கில மொழியிலான இசைத்தட்டு வெளியீடு

Ealing Kanaga Thurkka Amman Kovil, 5 Chapel Road, West Ealing, W13 9AE

**NOV 03** — SATURDAY @ **6PM**

*கலை மாலை 2007*

சங்கீதாலயா இசைப்பள்ளியினரின் நிகழ்ச்சி அனுமதி 5 பவுண்கள்

Wembley High Technical College, East Lane,Wembley HA0 3NT

**NOV 10** — SATURDAY @ **6PM**

***Musical Explosions***

மாலை 6 மணி: தமிழ் சமூக நலச் சங்கம் ஹவுன்ஸ்லோ வழங்கும் Musical Explosions இசை நிகழ்ச்சி .

Feltham Asembley Hall, Feltham Park, Hounslow Road, Feltham, TW14 9DN

**NOV 27** — Tuesday **@11.30 AM**

*தேசிய நினைவெழுச்சி நாள்*

London

தங்கள் நிகழ்வுகளையும் பிரசுரிக்க
ஒரு பேப்பர் ரை நாடுங்கள்.





# ஸ்ரீ கணபதி ஜோதிட நிலையம்



இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் **அர்ஜுனா ராஜு குருஜி ஜெங்கம்மா**

கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார். இவரை ஒரு முறை சந்தித்துப் பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சனை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். ஆயுர் வேத மருந்துகள் சகல விதமான வியாதிகளுக்கும் நாடி பார்த்து மருந்து தரப்படும்.

**07951 631 883 / 020 8470 5209**

1st Floor, Sai Hair Dressers, 345 A High Street North, Manor Park, London E12 Open Seven days a Week

# The Myopic Understanding of War and Development

By: Kusal Perera



The war hype that was maintained by the faulting Rajapaksa regime over the past two years through economic filibustering was busted by a Black Tiger group supported by two of their crude air planes in a single attack on the Saliyapura Air Force base in Anuradhapura, in the wee hours of the morning of 22nd October. The attack the first ground and air co-ordinated attack by the LTTE was by any standard, devastating. Numbers do matter in war, but what matters here most is the military penetration the LTTE was able to make into the main hub of logistics and resources that networks Vavuniya and Trincomalee and through Trincomalee the whole of Jaffna peninsula. What follows next is the political impact such an attack would have on the politics of the South. Its about this war that Defence Ministry Secretary, Gotabhaya Rajapaksa said he knows better than Counter Terrorism Expert Dr. Gerard Chaliand, just two days before the worst ever attack in the history of the Eelam war. According to Gotabhaya Rajapaksa, the government has already proved to the world that LTTE terrorism can be defeated. And for him, this war provides an opportunity for economic development too.

While answering a question posed by one of those journalists who are usually invited for Presidential media bashes, Gotabhaya Rajapaksa said last Friday (19th October) on a live TV discussion with the President, a selected bunch of Ministers and a few top officials including the Presidential Secretary in attendance, he had provided over 70,000 jobs and salaries paid to over 30,000 more armed voluntary vigilantes in "threatened" villages known before as "border" villages and that brings in a big cash flow into the rural economy.

What ever the job(s), wages do provide a source for cash flow and it is true these soldiers pump in some cash into the rural economy as they are from the villages and not from the middle class urban families. Hundred thousand and more jobs in the security forces despite a savage war being fought, is a big number within the rural economy in our country and it was one important component in village economies all through two decades of war.

> Defence Ministry Secretary, Gotabhaya Rajapaksa said he knows better than Counter Terrorism Expert Dr. Gerard Chaliand

In little hamlets, though the landscape is disturbed with "heroes' tombs", families with a soldier earn a respect too, within the hyped "macho" image of the Sinhala patriot, who comes home on leave once in about three months with daring and adventurous stories to be told to the young and the old at the "kada pila"(front porch in the little village boutique). He often leaves at the end of his short vacation, with an addition to the brick and cement house he started the previous time he came, or with a new plot of land cleared either to start a new building or for big cultivation.

It is this employment through war Gotabhaya think is good enough rural development. What he does not understand is, they are all "rolling jobs". They go with replacement necessities every time a soldier deserts his regiment, goes missing in action or comes home in a polythene bag. During this period when the war was sporadic with limited and selective attacks by the government, the LTTE opted for more politics than war. They were extremely selective in taking only military targets and their politics is not in the South for the Sinhala people to engage in, but obviously international. Thoppigala that saw no heavy fighting and the clearing of the East that sees some clash some where almost every day and security forces being inflicted with damage, the government was capitalising on exaggerated victories on the battle front. That definitely was its survival, with the JVP and the JHU too wanting the continuation of the war.

Yet what the government could not do with markets and what Gotabhaya does not understand is that those young men who get their hands on some cash, don't have much in the markets for that money. The economy was grinding to a halt. There isn't any growth in production. Neither in consumer production nor in agriculture. That drives inflation higher and would go beyond the present 15%. That depreciates the rupee and had driven the bank interests to over 18% during the past year. The private sector is thus caught in an avalanche of price hikes in all overheads and raw material sourcing. This crunch on the economy leaves the private sector if not shrinking, then trying to survive. The rural economy can not grow on its own and stands stagnated, unable to absorb youth who enter the job market. Where could they turn to for a living, except to the war that Gotabhaya feels he could win?

So, Gotabhaya feels he is doing miracles adding to development with jobs in the security forces. But unfortunately for him, he could not himself survive with his miracle for more than three days after declaring its success. The war is a fluctuating business. Geographical gains as projected by the government is not everything. The LTTE giving up the East and then denting the logistic capacity of the security forces at its nerve centre creates a vital shift in military power on the ground and then politically on the psyche of the Southern society. The immediate reaction among most who thought the government was winning the war and thought they would bear the economic burden, was shocked out of their dream of defeating the LTTE.

Thus its worth taking a cue from counter terrorism expert Dr. Challand, even if political forecasting of rational minds are not heeded. LTTE is the product of discrimination of Tamil aspirations. Those legitimate aspirations have to be met within a power sharing mechanism, before taking on the LTTE. Development as seen by Gotabhaya is thus myopic and totally counter productive in defeating the LTTE. This truth is naked if you do not know how to dress it with political understanding.

*Kusalperera.blogspot.com*

# The Rajapaksa Junta and making of Tamil Eelam

Poongothai
VIA ORUPAPER.COM'S BLOG

The island of Sri Lanka was unique among other third world countries in many ways, the high level of literacy and remarkably decent health care system put Sri Lanka in an unique position.

Whether you like it or not, the Sri Lankan health indices on maternal mortality rate and infant mortality rate were comparable with affluent western countries. There are many factors contributing to this kind of paradoxical indices.

- Existence of a strong educational system.
- Naturally very resilient people.
- Many of the institutions and disciplines are still aggressively following the British system and accreditation of British standards.

**So why am I writing about maternal mortality rate?**

Since the eruption of Tamileelam liberation struggle nearly three decades ago, Sri Lanka (Tamils and Sinhalese) had gone through numerous challenges in every aspect of life. Still Tamils are trying to live as normal as possible even if they are in an IDP refugee camp. This does not under estimate their hardships and sufferings, I would like to highlight the resilience of the people. On the other hand Sinhalese people also feeling the burden of this protracted conflict, even though they are in a far better living condition than Tamils. The successive Sinhala governments also tried to contain the war into the Northeast region and tried keep the Sinhala mass in the state of surrealism of 'Jaya Sikkurui' / victory assured.

Now there is a disturbance in this status quo; thanks to 'Medamulla' Mahinda Rajapaksa and his junta. There are signs of crack in the government machinery and signs of slow death of those renowned institutions established under the British rule. This could be the natural outcome of a system which embarked on a path of destruction by alienating the minorities and there fore 'not catching up' with the rest of the world. The Tamil Eelam liberation struggle was one of the longest and most destructive conventional wars after Vietnam War. So the current cracks in the government machinery could be due to long standing crippling disease of this island. But there are new factors which are aggravating the institutional decay and speed up the slow death into the fast forward mode. This is what I am going to write about in following passages.

Since the independence from British rule, this island has seen several Sinhala leaders as head of state; DS Senanayake, SWRD Banadaranaike, Dudley Senanayake, Dahanayake, Srimavo Bandaranaike, JR Jeyawardena, R Premadasa, DB Wijetunge, Chandrika Kumaratunga and now 'our' Percy!

Except Dudley, Srimavo and Chandrika rest of the leaders reached the top post of the government due to their hard work and perseverance. Among them DB Wijetunge and Mahinda Rajapaksa were lucky guys; the presidential post fell on their lap due to different reasons not due to their merits. Because of the death of Premadasa then Prime Minister DB Wijetunge was made president of Sri Lanka for the rest of the Premadasa's term.

The elevation of Mahendra Percy Rajapaksa to the post of President of Sri Lanka was a 'judgement day' to Sri Lanka. Even though his father was an MP and one of the trusted lieutenants of SWRD Bandaranaike and Mahinda was the youngest MP to be elected to the parliament; his skills, expertise and knowledge are not up to the standard for a statesman. After a long stint as an MP since 1970, he first becomes the Labour minister in Chandrika's PA government in 1994, and then he held the portfolios of ministry of fisheries and Ministry of Highways. Also he was the Prime minister of Sri Lanka since 2004 until the presidential election.

As a politician he failed to demonstrate statesmanship and he miserably failed to perform in any of those ministries as a minister. Once Sarath Amunugama ridiculed him by saying "country's economy will not improve by regularly attending the temple poojas with flower trays". As a politician he failed to achieve any thing substantially except the Post of president of Sri Lanka!!

*(to be continued)*




**Om Sri Kalikambal Jothidam**
Astro Palmistry - Face Reading

**GANAPATHY FOOD & WINE**
235 ALLENBY ROAD
SOUTHALL
MIDDLESEX
UB1 2HB
Opening Hours: 9.30 a.m - 8.30 p.m 7 Days a Week

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள **பெருமாள் சாஸ்திரி** அவர்கள் காளியாம்பாள் அருள் கொண்டு கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, விசா பிரச்சனை, உடல் நலம், திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லக்சுமீகர விடயம், கண் திருஷ்டி, கோட் வழக்குகள், வாகனப் பொருத்தம், தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன், ஜேர்மனி எங்கும் பிரபல்யம் பெற்றவர்.

I will read your Past, Present and Future through Face reading, Palm reading, Vasthu Sasthiram.

I can tell you about your health, Business, Education, Job, love Marriege, abroad travel, Family problem etc.



SPOKEN LANGUAGES: TAMIL, HINDI, KANNADAM, TELUGU& ENGLISH.

Call:
Pandit **Perumal Shastry**
**on 07944 557 263 / 07964 609 395**

# The 'SACRED' City of Anuradhapura and the Display of the Bodies of Dead Tamil Soldiers

**Charles Somasundrum**
FOR ORUPAPER

I received an e-mail recently containing the names of the 21 Tamil heroes who gave up their lives in the assault on the Anuradhapura army base. The e-mail also contained pictures of these 21 brave men and women, taken before they set out on their mission and from which they were aware they never return. The pictures speak for themselves. They show a band of 21 smart soldiers, men and women, who show no fear.

The pictures show them at ease, which is most remarkable since they were all aware that they were going on their last mission, a mission from which they were never to return.

The e-mail also contained pictures of the spy plane, a Beechcraft 200 HISAR surveillance aircraft that was destroyed. Among other planes destroyed were two MI 24 aircraft; three BT6 aircraft; one K8 aircraft; one M17 aircraft; one Bell 212 aircraft; two UAV aircraft and six Cessna. The total cost of the losses, to the Sinhala government and its army, was in the region of $40 million. It must be remembered that these were the same aircraft that kept harassing the Tamil civilians going about their everyday tasks. These aircraft also picked out schools, that were in session, that they bombed and strafed from the sky.

The TamilNet website carried a news item, with pictures, that were most disturbing. This item was about bodies of dead LTTE soldiers who had died in the attack by the LTTE on the Anuradhapura base of the Sinhala armed forces.

The 21 dead LTTE soldiers had been stripped of all clothing and dumped on top of one another in two trailers attached to farm tractors. These were tractor and trailer combinations that were normally used to collect garbage. The naked bodies were in one trailer while other trailer contained naked body parts in black bin bags. They had been 'dumped' in the trailers like so much garbage.

Not satisfied with their savage and primitive treatment of the dead LTTE soldiers, the army took them in a slow convoy, ostensibly to the hospital morgue. The trailers that were accompanied by Sinhala soldiers, stopped first at a road junction, on the way, so that the huge inquisitive crowd, that had quickly congregated, could feast their eyes on the corpses in the trailer. The convoy was reported to have stopped again, in front of the hospital, so that the bloodthirsty crowd could take photographs for their albums and to share with their friends

The pictures in TamilNet showed quite a number of Sinhala women looking at the naked bodies. There was one young Sinhala woman in particular, who could be seen leaning over the side of the trailer, looking intently at the naked bodies. Now, either this woman, as with others of her kind there, had a deep sexual curiosity in the naked bodies of the dead LTTE soldiers, or she and her fellow women were so starved of sex that they desperately needed to look at these naked dead bodies at least, in order to satisfy their personal sexual cravings?

> An Army spokesperson had said that the bodies were so displayed so as 'to prevent the mentality of defeat from entering the public mindset in the aftermath of this major military debacle'.

According to the lankadissent.com website (as reported in the TamilNet website) an Army spokesperson had said that the bodies were so displayed so as 'to prevent the mentality of defeat from entering the public mindset in the aftermath of this major military debacle'. The 'debacle' referred to here, was the attack by the LTTE on the army base in Anuradhapura, where a total damage estimated at $40 million was caused, and a large number of Sinhala soldiers lost their lives.

Apparently, having lost this particular battle, the Sinhala army decided to take their revenge on the dead LTTE soldiers in lieu for the 'prisoners' they were unable to take. According to a Reuters item, the Sri Lankan Defence Ministry had published photographs of some of the slain LTTE soldiers 'sprawled on the tarmac at the airbase (which was attacked by the LTTE soldiers), some bodies were charred with eyes wide open and one had a gaping hole in his head'.

In defence of this crude action, a senior military spokesman, Brigadier Udaya Nanayakkara, said 'somebody had taken (the photographs) to tarnish the image of the armed forces. We are professional soldiers. We do not want to do (things) like that. I can assure you that we wrapped all those bodies in black polythene bags'.

I do not see how the 'image' of the tarnished Sinhala army could be tarnished any further! We do know now however, thanks to the Brigadier, that the 'great' Sinhala army does not use 'body bags' when the dead bodies are those of Tamil soldiers. Body bags are only for the dead Sinhala soldiers. Apparently, black bin bags are good enough for the Tamil soldiers!

We do have however, the photographic evidence that cannot be refuted however many high ranking Sinhala officers try to deny the incident till they were blue in the face. We have irrefutable photographic evidence of the blood thirsty and crude actions of the Sinhala soldiers.

All this crudeness took place in Anuradhapura the ancient capital of Sinhala (and occasionally Tamil) kings. What is significant is that Anuradhapura is said to be 'sacred' to the Sinhala Buddhists, being the home of a Pipul tree, said to have been grown from a sapling of the Pipul tree under which Gautama Buddha attained Nirvana.

Anuradhapura is also the home of numerous Dagobas said to contain relics of the same Gautama. On full moon days pilgrims are said to flock to Anuradhapura from around the island to make offerings, even though Buddhism is not a religion on its own but is one of the six systems of Hindu philosophy.

It is difficult to balance all this 'piety' and 'worship' with the bloodthirsty and sexually deprived Sinhala crowd in Anuradhapura and the savage and almost primitive Sinhala soldier.

# On Anandasangaree and the Anuradhapura Air-Base Attack

**By Sachi Sri Kantha**
FOR ORUPAPER

Donna Summer (1948- ), the American disco diva's biggest hit, 'She Works Hard for the Money', portrays the turbulent times of a street prostitute. The old Tamil politico who has been working hard for his money in Colombo - delivering cheap jibes at the LTTE and hogging media space for himself without sweating - has done it again. The sclerotic Sangaree woke up from his slumber and released his unsolicited sermon, under the 'TULF press release' label, on October 24. To quote,

"The TULF strongly condemns the attack on the Air-base at Anuradhapuura, by the LTTE, as unwanted, meaningless and provocative. This is not a matter for anyone to rejoice at. The LTTE should at least at this stage realize that Tamil Eelam is a wild goose chase and even if achieved cannot last for one day, with the international Community strongly opposing it.

Mr. Prabaharan should stop playing with human life. Apart from the killing of 10 Air-force personnel he has also scarified without a just cause 21 Tamil youths whom they recruited compulsorily and brain-washed. I convey my deepest sympathies for these 31 victims of LTTE's atrocities.

*V.Anandasangaree,*
*President – TULF."*

In the last sentence of his press release, he has noted, "I convey my deepest sympathies for these 31 victims of LTTE's atrocities." The pseudo-sympathy of glib-talking Sangaree to the 21 heroic Tamil youths deserves condemnation. As the old adage informs us, words are cheap. Words flow more cheaply for a prostituting weathervane politician like Anandasangaree. Two years ago, this politician received a UNESCO prize tagged with the name of an Indian mediocrity. That the current regime of President Mahinda Rajapakse sponsored Sangaree's nomination for this prize was a fact that I gathered subsequently from one UNESCO desk official. Sangaree was also granted, as per the news reports, a cheque for 100,000 US dollars. If Sangaree's sympathy for the 21 Tamil youths is sincere, he should come forward to donate the 100,000 US dollars he got in Paris immediately to the families of the 21 Black Tigers and to the families of Tamil victims who have died due to the Sinhalese government's aerial aggression since November 2005.

While military analysts in the Indian subcontinent and elsewhere have correctly (or with some bias) assessed the effect of the enemy-demoralizing October 22nd display by the LTTE's special commandos, to Anandasangaree's jaundiced eyes, it was nothing but, "unwanted, meaningless and provocative." I'd say that the Tamil proverb, Kazhuthaiku Theriyuma Karpoora Vaasanai [Does the Donkey know anything about camphor scent?] aptly sums up Anandasangaree's ignorance on the significance of the Anuradhapura air-base attack by the LTTE. For a comparative evaluation, it may be of interest to hear what the TULF he currently leads has achieved for Tamils since the April 2004 General Election, other than his umpteen flying jaunts to India, Europe and South Africa.

## The pseudo-sympathy of glib-talking Sangaree to the 21 heroic Tamil youths deserves condemnation

More than three years have passed since Sangaree self-anointed himself as the President of a rump TULF party. Isn't it time for him to provide details on the other office bearers of his rump TULF? Has this rump party held any annual convention to present its political manifesto to the Tamils, apart from issuing insipid press releases and 'letters' to the media, *all in the name of Anandasangaree*? Can Sangaree even list 20 of his Tamil followers, by name, designation and a recognizable address? After all, he is supposed to be leading the Tamil United Liberation Front! Doesn't Sangaree brag of himself as a politician adhering to non-violence?

OK, if this be the case, can he lead his team of 20 Tamil followers in an influential agitation for the execution of Tamil rights for equality, by performing a 'fast to death' a la Gandhi, anywhere in Sri Lanka? This 'fast to death' (not the cheap stunt of fasting for 12 hours!) agitation by Sangaree, may bring the respect he badly yearns from Tamils. But, believe me, Sangaree is not a Mahatma.



ஸ்ரீ மஞ்சுநாத பிரசன்னா
சிவசக்தி ஜோதிட நிலையம்

SRI MANJUNATHA
PRASANNA SIVASAKTHI
SOTHIDAM

பண்டிதர் நாராயண ரெட்டி சாஸ்திரி

EELAM ENTERPRISES Convenience Store
164 B, Mitcham Road, Tooting, London SW17 9NJ
(Near st. Boniface Church, Opposite Home London Shop)
Opening Hours; 9.00 am-8.00pm-7days

Mob: 0750 7089 806 / 0776 8442 965

இந்தியாவில் இருந்து முதன் முறையாக வருகை தந்துள்ள **பண்டித் நாராயண ரெட்டி சாஸ்திரி** அவர்கள் கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, விசா பிரச்சனை, உடல் நலம், திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லக்சுமீகர விடயம், கண் திருஷ்டி, கோட் வழக்குகள், வாகனப் பொருத்தம், தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு, ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். அவர் பல நாடுகளில் விஜயமிட்டு பலரினது பிரச்சனைகளையும் தீர்த்து வைத்திருக்கிறார். வீடு, கடை மற்றும் தனி நபர்களின் நலனுக்காகவும், பாதுகாப்பாகவும் தகுந்த பூஜைகளை செய்வதில் வல்லுநர்.

Pandit Narayana
Raddy Sastry



He visited so many countries and had successfully solved problems for many people.

An expert pandit at service. Past, Present and Future of your life, will be read over to you from your Numerology, Face reading, Palm reading & Horoscope reading Prediction in Business, Education, Job, love, Marriege, Family problem, Sickness, Promotion, Visa, Court, Lottery, Money, Removal of enemy. All types of black magic and evil things removed. He does protection thing for house, shop and personal matters will not be kept in confidence.

SPOKEN LANGUAGES: TAMIL, HINDI & ENGLISH

# Kerala Ayurveda

In its purest form now at London Wembley, Southall and **NOW OPEN** at **CROYDON (Surrey)**

*Are you suffering from any of the following Chronic/ Acute Disease?*

Arthritis

Muscle Pains

Stress & Strain

Spondylitis

Joint Pains

Piles

Frozen Shoulder

Depression



Obesity

Sinusitis

Slip Disc

Psoriasis
Eczema

Rheumatism

Migraine

Insomnia

**10% to 20% Discount on all treatment**

**Bulk discounts on gift vouchers**
**(*terms & conditions apply)**



Kerala's age-old Ayurvedic Panchakarma treatments are very effective for treating such diseases. We have established an Ayurvedic Centre in Kerala's traditional way at the following address to undertake these treatments for the suffering people in London and are manned by well qualified and experienced Ayurvedic Doctors and Ayurvedic Panchakarma technicians from Kerala, India.



*We Also Provide: Ayurvedic Health Rejuvenation treatments through traditional medicated oil massages, steam bath etc. & Beauty therapies using herbal mixtures.*

## CALL NOW FOR AN APPOINTMENT AND FREE CONSULTATION | EXPERIENCED TEAM OF DOCTORS!

*8 Grand Parade*
*Forty Avenue*
*Wembley*
*HA9 9JS*
*Tel 020 8908 4666/*
*07866687216*

*505 London Road*
*Thornton Heath*
*Croydon*
*Surrey*
*CR7 6AR*
*Tel: 0844 7780052/ 020 8684 7513*

*60 King Street*
*Southall*
*Middlesex*
*UB2 4DB*
*Tel:02085719111/*
*07958539658*

Website: www.keralaayurvedam.co.uk | email: nacsaayurveda@lycos.co.uk

அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**NACS KERALA AYURVEDA**

A DIVISION OF NACS AYURVEDIC CENTRE (LTD.)

# செக்கென்ன? 'சிவலிங்கம்' என்ன?

சொந்த விருப்பு வெறுப்புக்களின் நிமித்தம், தாம் சார்ந்த சமூகத்தின்மீது வெறுப்புக் கொண்டவர்களாக வாழ்பவர்கள் சிலர் நம்மத்தியில் இன்னமும் இருக்கிறார்கள். மாற்றுக் கருத்து, ஜனநாயகம், பெண்ணியம், முற்போக்கு, விளிம்பு நிலை மக்களுக்காக குரல் கொடுத்தல் என்ற வாய்ச் சவடால்களுடன் இயங்கும் இவர்கள் உண்மையில் மானிட விரோதிகளாகவும், ஏகாதிபத்திய சக்திகளின் கைப்பாவைகளாகவுமே செயற்படுகிறார்கள்.

சாதாரணமாக எல்லோராலும் வெறுக்கப்படும் ஒழுக்கக்கேடுகளை தமது வசதிக்காக 'புரட்சி' என அறிமுகம் செய்வதும், ஈழத்தமிழ் மக்களிடையே பிரிவினையை வளர்ப்பதும் இவர்களது செயற்பாடாக இருந்து வருகிறது. இவர்கள் தொடர்பாக பி. இராயகரன் என்பவர் இணையத்தளம் ஒன்றில் பதிவு செய்த கட்டுரையின் சுருக்கத்தை இங்கு வெளியிடுகிறோம்.

இக்கட்டுரை ஆசிரியரான இரயாகரனும் இதே வகையினைச் சேர்ந்தவர், இவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டவர் என்ற வகையில், உள்ளிருந்துவந்த தகவல்களாக இவை அமைந்துள்ளன. இருப்பினும் அவற்றின் உண்மைத்தன்மை பற்றி எங்களால் சரிபார்த்துக் கொள்ள முடியவில்லை என்பதனையும் இக்கட்டுரையில் சில இடங்களில் இங்கிதமற்ற வார்த்தைகள் பாவிக்கப்பட்டுள்ளன என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர்

புலியெதிர்ப்பையே அரசியலாக கொண்டு ஏகாதிபத்தியத்துக்காக காவடியாடும் சிவலிங்கத்துக்கு, மக்கள் விரோதிகள் எடுபிடியாவது இயல்பு. எந்த பிசாசுடனாவது சேர்ந்து புலியை அழிக்கும் சிவலிங்கத்தின் பாசிசக் கோட்பாடு, பாரிசில் எம்மால் அம்பலமானதை பொறுக்கமுடியாமல், லட்சுமி அக்கா துள்ளிக் குதித்ததன் வெளிப்பாடுதான் இந்த புலம்பல். இப்படி அந்த கடவுள் சிவலிங்கத்தின் சடைமுடிக்குள் அமர்ந்து இருந்தபடி, சீண்டுகின்றார்.

கருத்தைக் கருத்தால் மறுத்துரைக்கும் திராணி கிடையாது. அதைச் செய்ய வக்கு கிடையாது. ஏகாதிபத்தியத்தை நக்கும் சிவலிங்கத்தின் கோட்பாட்டை காக்க முனைகின்றார். பிசாசுடன் சேர்ந்து புலியை அழிப்போம் என்று பாரிசில் அறிவித்த சிவலிங்கத்தின் மக்கள் விரோதத் தன்மையோ வெளிப்படையானது. இப்படி தொடர்ச்சியாக அம்பலமாவதைப் பாதுகாக்க, எடுபிடிகள் அம்மணமாக நின்று குலைப்பது தான் அரசியல் வேடிக்கை.

அரசியல் ரீதியாக சடைப் பாம்பாகி, மக்கள் விரோதத்தையே ஆன்மாவாக கொண்டவர், அதையே இசமாக்கியவர் தான் உயிர்நிழல் ஆசிரியர். இவரோ எடுப்பார் கைப்பிள்ளையாக, காலத்துக்காலம் வேஷம் போட்டவர். எந்த மக்கள் அரசியலும் கிடையாது.

இப்படி எந்த சமூக அரசியல் அடிப்படைகள் எதுவுமற்றவர். காலத்துக்கு காலம், முகம் பார்த்து, கொசித்து, வம்பளந்து, விஸ்கி அடிப்பதன் மூலம், கூடி கும்மாளம் அடிப்பதையே, அரசியலாக கருதி அதை வளர்த்தவர்கள், வளர்ந்தவர்கள்.

**அன்று நித்தியானந்தன், ஜெயபாலன், என்று எத்தனையோ வகையறாக்களை காவித் திரிந்த உங்கள் அரசியலின் தொடர்ச்சியில், புதிய அவதாரம் தான் இந்த சிவலிங்கம்.**

இசங்களின் சொல்லாடலைக் கொண்ட ஒரு புலியெதிர்ப்பு. இப்படி சொந்தத்தில் எந்த ஒரு விடயம் மீதும், மனித விடுதலைக்கு உதவக் கூடிய ஒரு கருத்தைக் கூட சொல்ல முடியாதவர் தான் உயிர்நிழல் ஆசிரியர். வெறும் தொகுப்பாளர். அரசியல் ரீதியாக மற்றவர்களின் எடுபிடி. கா்லா காலமாக ஆணாதிக்கத்துக்கு துணை போனவர். பெண்ணியம் என்ற பெயரில் ஏகாதிபத்திய கலாச்சாரத்தின் எடுபிடி.

அதாவது ஏகாதிபத்திய பெண்ணின் நடவடிக்கைக்குள் நின்று, அதை தூக்கி வைத்து பெண்ணியம் என்பவர். இவர் எம்மை சீண்ட முனைவது இயல்பு.

இவர் புலியெதிர்ப்பு சிவலிங்கம் பற்றி எங்களுக்கு கற்றுத் தரமுனைகின்றார். புலியெதிர்ப்பின் மதியுரைஞரான அவரின் பிசாசுச் சித்தாந்தத்தையும், அவரின் அரசியல் வேஷத்தையும், அக்குவேறாக ஆணிவேறாக நாம் நன்கு அறிவோம்.

அவரையும், அவரை குருவாக கொண்ட புலியெதிர்ப்பை மட்டும் அரசியலாக கொண்ட மக்கள் விரோத வேஷதாரிகள், பாரிஸ் கூட்டங்களில் எமக்கு தரும் ஓரிரு நிமிடங்களில் அம்பலப்படுத்தப்படுவதும் அம்பலமாவதும் தொடருகின்றது.

புலியொழிப்பு அரசியல் அம்பலமான ஒரு சந்தர்ப்பத்தில் தான், பிசாசுடன் (ஏகாதிபத்தியத்துடன்) சேர்ந்து புலியை அழிப்போம் என்று கூச்சலிட்ட அந்த மனித விரோத புல்லுருவியைப் பற்றி, நாங்கள் அரசியல் ரீதியாக நன்கு அறிவோம்.

இலங்கை அரசின் ஒரு கூலிக் குழுவான ஈ.பி.டி.பியின் வானொலியில் அலம்புவது, இந்தியக் கூலிக் குழுவான ஈ.என்.டி.எல்.எவ். இன் ரி.பி.சி வானொலியில் ஆய்வென்ற பெயரில் ஊதுவது உட்பட, தேனீ இணையம் வரை, அவர் என்ன செய்கின்றார் என்பதை நாம் தெளிவாக அறிவோம்.

ஆட்டுக்கு குழை காட்டி, அவர்களை தொடர்ச்சியாக பலிபீடத்துக்கு அழைத்துச் செல்லும் அந்த இழிவான மலிவான மக்கள் விரோத அரசியல்தான், அவரின் மதியுரை. இந்தா வருது, அந்தாவருது, தமிழ் மக்களே வந்து இந்தா பிடியுங்கள், அதை தூக்கிநிறுத்த என்னைப் பிடியுங்கள் என்கின்றது இந்த இழிவு கெட்ட அரசியல்.

இப்படி ஏகாதிபத்தியத்துக்காக பேரினவாதிகளுக்காக குலைப்பது அவரின் அரசியல். இதை மூடிமறைக்க ஜனநாயகம். தமிழ் மக்களை பேரினவாதிகளின் காலின் கீழ் பலியிட அழைத்துச் செல்லுதல்.

இந்த இரண்டு போக்குக்கும் வெளியில், மக்களுக்கான எந்த மாற்று அரசியலும் ஏன் அதை வழிகாட்டுவதும் கூட கிடையாது.

பேரினவாத அமைப்பில், அவர்களின் தயவில், தமிழ் மக்களுக்கு விடுதலையாம். இதுதான் இந்த சிந்தாந்த மதியுரைஞரின் உயர்ந்தபட்ச வழிகாட்டல். இதற்கு வெளியில், மக்கள் தமது விடுதலைக்காக சிந்திப்பது அபத்தம் என்பதே, இவர்களின் அரசியல் அறிவு கூறுகின்றது.

அந்த பிசாசு எடுபிடிக்கு வாலாட்டும் உயிர் நிழலுக்கோ, மக்கள் போராட்டம் என்பது கிண்டலுக்குரிய இசமாகிவிடுகின்றது.

பேரினவாதமும், அதை அரசியலாக கொண்ட எதிர் கட்சிகளும் மக்களை ஏமாற்ற சொல்வதை அப்படியே எடுத்து, அதை வேப்பிலையாக கட்டி ஆடுபவர் இந்த அன்னகாவடிகளின் சிவலிங்கம். இப்படி அதையே ஆட்டுக்கு குழையாக காட்டி, தமிழ் மக்களின் விடுதலைக்குப் பதில் பலிபீடத்துக்கு அழைத்துச் செல்வதே புலியெதிர்ப்பு அரசியல் சாரம்.

**ஈ.பி.டி.பியின் வானொலியில் அலம்புவது, இந்தியக் கூலிக் குழுவான ஈ.என்.டி.எல்.எவ். இன் ரி.பி.சி வானொலியில் ஆய்வென்ற பெயரில் ஊதுவது உட்பட, தேனீ இணையம் வரை, அவர் என்ன செய்கின்றார்?**

சிங்கள பேரினவாதம் இந்தா தீர்வு என்று ஊர் உலகத்தை ஏமாற்ற வைத்த வைக்கின்ற குழைகளை, அப்புகாத்து போலே கமக் கட்டுக்குள்ளே செருகிக் கொண்டு வந்து, அதை விரித்து வைத்து அரசியல் விபச்சாரம் செய்கின்றனர்.

இலக்கிய சந்திப்புத் தொடக்கம் இன்றுவரை, சமூகத்தை நோக்கி செயற்பட வக்கற்றுப் போன உங்களைப் போன்றவர்களுக்கு, அரசியல் பொறுக்கிகள் அவதார புருசராக இருப்பது ஆச்சரியமல்ல. அன்று நித்தியானந்தன், ஜெயபாலன், என்று எத்தனையோ வகையறாக்களை காவித் திரிந்த உங்கள் அரசியலின் தொடர்ச்சியில், புதிய அவதாரம் தான் இந்த சிவலிங்கம். இது எத்தனை காலத்துக்கு என்பதையும், வரலாற்றில் நிச்சயமாக பார்த்துவிட முடியும்.

பெண்ணியம் என்றால் என்ன என்று சொல்ல தெரியாதவர்கள் இவர்கள். அதன் மேல் எந்த அறிவும் கிடையாது. நிலப்பிரபுத்துவ ஆணாதிக்க சமூக அமைப்பில் பெண்கள் அனுபவிக்கும் வாழ்க்கையை, பகிரங்கமாக மேடையில் சொல்லத் தெரிந்த பெண் என்பதால் பெண்ணியவாதியாக தன்னைக் காட்டிக்கொள்ள முடிந்தது.

ஏகாதிபத்திய பெண்ணின் ஆணாதிக்க சாரத்தை சொல்ல முடியாது, அதையே ஆதரிப்பவர்கள். மறுபக்கத்தில் ஆணாதிக்க அமைப்பை எப்படி ஒழிக்க முடியும் என்றால், அதை கூற முடியாதவர்கள். அதற்காக எந்தத் தளத்திலும் போராடாதவர்கள். சொற்களில் வித்தை காட்ட முனைகின்றனர். ஏகாதிபத்திய கலாச்சாரம் பண்பாட்டுச் சீரழிவைப் பெண்ணியமாகக் காட்டி நிற்பவர்கள்.

**சிங்கள பேரினவாதம் இந்தா தீர்வு என்று ஊர் உலகத்தை ஏமாற்ற வைத்த வைக்கின்ற குழைகளை, அப்புகாத்து போலே கமக்கட்டுக்குள்ளே செருகிக் கொண்டு வந்து, அதை விரித்து வைத்து அரசியல் விபச்சாரம் செய்கின்றனர்.**

பெண்ணியம் என்றால் புகைத்தல், மதுபானம் அருந்தல், அரைகுறையாக உடை அணிதல், விரும்பினால் விபச்சாரம் விரும்பாவிட்டால் ஒழுக்கமாக படுத்தல், இப்படி ஆணாதிக்கத்தைப் புரிந்து கொண்டவர்களே இந்தப் பெண்ணியவாதிகள்.

உடல் வன்முறை, அவதூறு, மொழி வன்முறை, இறுதியாக உங்கள் புனிதமான சொல்லைக் கூட நாயைவிட கேவலமாக குதறிய போது, உங்கள் பெண்ணியம் விபச்சாரமா செய்தது? நிருபாவுக்கு உங்கள் ஆதரவுடன், ஒரு இலக்கியச் சந்திப்பில் கலைச்செல்வன் ஆடிய ஆணாதிக்க வசைக் கூத்து என்ன? உயிர்நிழல் முன்னாள் ஆசிரியர் ஒருவர் சம்பந்தப்பட்டு, உங்கள் வீட்டில் அவருக்கு பிடித்த இறுவட்டு உடைந்த போது, சீறிய ஆணாதிக்கத்தை கட்டுடைக்க தெரியாது போனது ஏன்?

இந்த கேவலம் ஒருபுறம், இந்த நிலையில் உண்மையை அறிய விவாதம் 'அவசியமாம்! இதை செய்ய மறுப்பவர்கள் நாங்களா? நீங்களா? எதை விவாதிக்க உங்களால், உங்கள் கும்பலால் முடியுமா? நான் தயார்? ஏகாதிபத்தியத்துக்கும், பேரினவாத அரசுக்கும் காவடி எடுக்கும் கும்பலுடன் சேர்ந்து, தாளம் போடுகின்ற உங்களால், மக்களுக்காக ஒரு நாளும் விவாதிக்க முடியாது. நடைமுறையும், அது சார்ந்த கருத்துக்களும் அதை மேலும் அம்பலமாக்குகின்றது.

கருத்துச் சுதந்திரம் பற்றி என்ன வேடிக்கையா செய்கின்றீர்கள்? அதை அனுமதிக்க மறுப்பவர்கள் நீங்கள். அன்று நான் பார்வைச் சுதந்திரத்தைக் கோரிய போது வன்முறை, 1995 பாரிஸ் இலக்கியச் சந்திப்பில் நான் பேசுவதாக இருந்தால் ஒரு நிமிடம் என்று எனக்கு மட்டும் சிறப்பு நியந்தனை,

அண்மையில் சபாலிங்கம் கூட்டத்தில் ஒரு நிமிடம் என்று திமர் சிறப்பு உத்தரவுகள், இப்படி கருத்து விவாதச் சுதந்திரம் நாறுகின்றது. இப்படி உங்கள் கருத்துச் சுதந்திரம் உலகம் அறிந்தது. கட்டுரையை போடக் கொடுத்தால் வெட்டித் திருத்துவது, சின்ன எழுத்தில் வாசிக்க முடியாத வகையில் எனது கட்டுரையை மட்டும் போடுவது என்று, உங்கள் நடைமுறை பிரசித்தமானவை. நீங்கள் தான் விவாதம், கருத்து, மொழி என்கின்றீர்கள்.

Home Office இல் ஒரே நாளில் Visa பெற்றுத்தரும் சேவை
வேலை அனுமதிப்பத்திரம் பெற்றுத்தருதல்
வர்த்தகத்திற்கான வீசாக்கள் பெற்றுத்தருதல்
ஐரோப்பிய நாடுகளுக்கான விண்ணப்பங்கள்
அகதி/குடியுரிமை விண்ணப்பங்கள்,
வீடு, வியாபார ஸ்தாபனம் வாங்குதல் / விற்பனை செய்தல்
வியாபாரப் பிணக்குகள்

Indra Sebastian Solicitors
Administrators of Oaths



Tel: 020 8427 3303 Fax: 020 8427 3313
144 Station Road, Harrow, Middlesex HA1 2RH
Website: issolicitors.co.uk | Email: info@issolicitors.co.uk

Conveyancing - Sale, Purchase & Lease of Commercial and Residential Properties and all other types including landlord & Tenant disputes

Intellectual Property
Protect your business and goodwill. Trademarks, Copyrights & Patents Litigation/Debt Collection/Business, Disputes

Matrimonial - Divorce & Ancillary, Proceedings Employment

* Immigration
* Home Office Same Day Visa Service
* Work Permits, HSMP, SEGS
* Business Persons
* Doctors - Medical Training Initiatives
* Care Homes - Cares & Nurses
* Hospitality - F&B, Receptionist, Waiters etc.
* Skilled Workers & Domestic Servants
* Marriage & Certificate of Approval
* Asylum & Human Rights
* European Applications (EEC, WRS)
* Entry Clearance & Visa Refusals Appeal
* Students
* Nationality (UK & Sri Lanka)
* Long Term Residency in UK

# தீபாவளி(லி)

முன்னொரு காலத்தில், எந்தக் காலத்தில் என்று கேட்காதீர்கள். கி.மு. என்றோ கி.பி. என்றோ எதுவும் இல்லாத ஒரு விசித்திரமான காலத்தில் இரணியாட்சதன் என்றொரு அசுரன் இருந்தான். அவன் பூமியைப் பாயாய்ச் சுருட்டி.. பூமிதான் உருண்டை வடிவமாய்ச்சே அதை எப்படி பாயாய் சுருட்ட முடியும் என்று கேட்காதீர்கள்.

அவன் ஏதோ சுருட்டிவிட்டான். சுருட்டிய பூமியை கடலுக்கு அடியில் கொண்டுபோய் ஒளித்து வைத்தான். பூமியில் கால் பகுதி நிலம் முக்கால் பகுதி நீர் இந்தப் புதுக் கடல் எங்கிருந்து வந்தது என்று கேட்காதீர்கள்.

உடனே மகாவிஷ்ணு கோபம் கொண்டு பன்றி அவதாரம் எடுத்து கடலுக்கு அடியில் சென்று அசுரனைக் கொன்று பூமியை மூக்கின் மேலே வைத்து தூக்கிக் கொண்டு வந்தார். அவர் மூக்கின் மேலே வைத்து தூக்கிக் கொண்டு வருவதற்கு பூமி என்ன மூக்குத்தியா என்று கேட்காதீர்கள்.

உடனே தன்னைக் காப்பற்றிய பன்றி மேல் பூமிக்குக் காதல், விவகாரம் முற்றி அவர்களுக்கு பிள்ளையும் பிறந்து விட்டது. அவன்தான் நரகாசுரன். மகாவிஷ்ணுதான் தேவமகா குலத்தில் தோன்றிய புண்ணியவான் ஆயிற்றே அவருக்குப் பிறந்த நரகாசுரன் எப்படி அசுரன் ஆனான் என்று கேட்காதீர்கள்.

நரகாசுரன் கடும் தவம் இயற்றி தனது தாயைத் தவிர மற்ற எவரும் தன்னைக் கொல்ல முடியாது என்றொரு வரத்தை பிரம்மாவிடமிருந்து வாங்கி விட்டான். அதன் பின் அவன் தீய செயல்களின் ஈடுபடத் தொடங்கினான்?. அது என்ன தீய செயல்கள்?!

பிரம்மாவைப் போல் பரமசிவன் மனைவி பார்வதி மேல் ஆசைப் படவில்லை, இராமனைப்போல்தவம்செய்துகொண்டிருந்த சூத்திரனின் தலையை வெட்டவில்லை, இந்திரனைப் போல் பிறன் மனையாளை மயக்கி உறவு கொள்ளவில்லை அவன் செய்த தீங்கு இந்திரனையும் அவன் கூட்டத்தையும் பிடித்து சிறையில் அடைத்தது தான்.

அப்போதும் அவன் இந்திரனின் மனைவி சசி தேவியையோ அல்லது பிற தேவ குலப் பெண்களின் மீதோ கை வைக்கவில்லை அங்கு அவன் தேவர் கூட்டத்தைப் போல் அல்லாது கண்ணியமாக நடந்து கொண்டதால் தான் அவனை அசுரர் கூட்டத்தில் சேர்த்தனரோ? என்னவோ?

நரகாசுரன் செய்ததில் என்ன தவறு? நரகாசுரன் போன்ற வீரர்கள் இந்திரனைப் போன்ற கோழைகளை அடக்கியாள்வது அவாள்களின் சத்திரிய தர்மம்தானே!

**சாய்ந்த கோபுரங்கள்**

எழுதுவது: **இளங்கோ**

ஆனால் பெருந்தெய்வங்களான விஷ்ணுவும் சிவனும் இந்திரனைப் போன்ற புல்லர்களைக் காப்பாற்ற வீரர்களான அசுரர்களை அழித்தார்கள். நரகாசுரனும் இறுதியில் அழிக்கப்பட்டான் எப்படி?

அவன் பெற்ற வரத்தின் படி அவனது தாய் பூமாதேவி கண்ணனின் மனைவி சத்திய பாமாவாக அவதரித்த போது சத்தியபாமாவால் கொல்லப்பட்டான்.

நரகாசுரன் இறந்த நாளே தீபாவாளி அதை எல்லோரும் மகிழ்ச்சியாகக் கொண்டாட வேண்டும் என புராணப் புழுகர்கள் கதை கட்டிவிட்டனர்.

அறிவுக்கு பொருத்தமற்ற இந்தக் கதை ஒரு புறம் இருக்கட்டும். உண்மையில் நரகாசுரன் யார்?

புரணங்களில் அசுரர்கள் ராட்சதர்கள் அரக்கர்கள் எனப் பட்டம் கட்டி விட்டவர்கள் வேறு யாருமில்லை பண்பாட்டுப் படை எடுப்பாளர்களான ஆரியர்களை எதிர் கொண்ட தமிழ் மன்னர்கள் தாம். தமிழ்க் கடல் மறை மலையடிகள் தனது வேளார் நாகரிகம் எனும் நூலில் வேள்வித் தீயில் உயிர்களைப் பலியிட்டு வெறியாட்டம் ஆடிய ஆரியர்களை எதிர்த்த இராவணன் நரகாசுரன் போன்றவர்களே அரக்கர்களாகவும் இராட்சதர்களாகவும் சித்தரிக்கப் பட்டு இழிவு படுத்தப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

## தீபாவளி என்பது வெறும் சமய விழா மட்டுமல்ல ஓர் இனத்தை இழிவு படுத்தும் விழா!

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், சோம சுந்தரப் பாரதியார் (சுப்பிரமணிய பாரதியார் அல்ல) போன்ற பல தமிழறிஞர்களும் தீபாவளி தமிழர்களை இழிவு படுத்தும் விழா எனக் குறிப்பிட்டுள்ளனர்.

தென் பகுதியில் வாழ்ந்தவர்களையே இராமாயணம் குரங்குகளாகவும் அரக்கர்களாகவும் சித்தரித்திருக்கின்றது என்பதை தமிழரல்லாத விவேகானந்தரே குறிப்பிட்டுள்ளார்.

அப்போது ஈழத்தில் சிங்களமோ தென்னாட்டில் தெலுங்கு மலையாளம் கன்னடம் போன்ற மொழிகளே தோன்றியிருக்கவில்லை அப்படியானால் அவர்கள் யார்? தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் தானே

சமய விழாக்களை கொண்டாடுவது அவரவர் உரிமை இதை எதிர்ப்பதுதான் பகுத்தறிவா என பலர் நினைக்கலாம்.

உண்மைதான் சமய விழாக்களில் நம்மைப் போன்றவர்களுக்கு நம்பிக்கையற்று இருக்கலாம் அதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் தீபாவளி வெறும் சமய விழா மட்டுமல்ல ஒரு இனத்தை இழிவு படுத்தும் விழா!

சற்று எண்ணிப் பாருங்கள் உலகில் எந்த இனமாவது தன் இனத்துக்காரன் அழிக்கப் பட்ட நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடக் கேள்விப் பட்டு இருக்கின்றோமா? ஆனால் நம்மவர்களோ நரகாசுரன் எனும் தமிழன் இறந்த நாளை ஆண்டு தோறும் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

பலர் ஒன்று கூடி மகிழ்வதற்கு விழா தேவை என்றால் நமக்குத் தைப்பொங்கல் இருக்கிறது. இயற்கையோடு இயைந்த விழா. வேறு திருநாட்கள் தேவையாயின் நாட்டிற்காவும் மொழிக்காகவும் தங்களை ஈர்ந்த பெரு மக்களின் பிறந்த நாட்களை நாம் விழாவாகக் கொண்டாடலாம்.

இதோ தீபாவளி கொண்டாடும் தமிழர்களை எண்ணி பாவேந்தர் பாரதிதாசனின் தீட்டிய கவிதை வரிகள்

நரகனைக் கொன்றநாள் நல்விழா நாளா?
நரகன் இறந்ததால் நன்மை யாருக்கு?
நரகன் என்பவன் நல்லனா? தீயனா?
அசுரன்என் றவனை அறைகின் றாரே?
இராக்கதன் என்றும் இயம்புகின் றாரே?
இப்பெய ரெல்லாம் யாரைக் குறிப்பது?
இன்றும் தமிழரை இராக்கதர் எனச் சிலர்
பன்னு கின்றனர் என்பது பொய்யா?
இவைக ளைநாம் எண்ண வேண்டும்.
எண்ணா தெதையும் நண்ணுவ தென்பது
படித்தவர் செயலும் பண்பும் ஆகுமா?
வழக்கம் என்பதில் ஒழுக்கம் இல்லையேல்
கழுத்துப் போயினும் கைக்கொளவேண்டாம்.
ஆயிரம் கோடி ஆண்டு செல்லினும்
தூயது தூயதாம் துரும்பிரும் பாகாது!
'உனக்கெது தெரியும் உள்ளநா ளெல்லாம்
நினைத்து நடத்திய நிகழ்ச்சியை விடுவதா?
என்றுகேட் பவனை 'ஏனடா குழந்தாய்!
உனக்கெது தெரியும் உரைப்பாய் என்று
கேட்கும் நாள் மடமை கிழிக்கும் நாள்
அறிவை ஊட்டும் நாள்
மானம் உணரு நாள் இந்நாள்.
தீவா வளியும் மானத் துக்குத்
தீபாவாளி ஆயின் சீ என்று விடுவிரே!

**FORWARD**
**REAL ESTATES**
*Sales, Lettings, Management*

**PROPERTY & FINANCE CONSULTANTS**

*With 25 years of combined experience of providing services to the business and community.*

**1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDLESEX HA0 2AJ TEL: 020 8900 9052**
**www.forwardrealestates.co.uk and e-mail address:mail@forwardrealestates.co.uk.**



**GROCERY/OFFLICENCE - NORTHOLT £74,950**
Forward Real Estates are pleased to present this successfully trading Grocery and off-licence. This shop is situated in a prominent location. The takings from the shop is £4,500 (approx) per week. There is a 3 bedroom flat on the first/second floor.



**GROCERY/OFFLICENCE - SOUTHALL - £75,000 L/H**
Forward Real Estates are pleased to present this successfully trading Grocery and off-licence. This shop boasts of a large trading area. The takings from the shop is £8,000 (approx) per week. Brand new lease of 15 years is offered for this shop.



**GROCERY/OFF LICENCE - COLINDALE £1,269,000**
Forward Real Estates are delighted to present this successfully trading Grocery and off-licence situated in a very prominent location. This shop boasts of a large trading area and 2 – 3 bedroom flats on the first floor. The takings from the shop is £13,000 (approx) + commission per week. Early viewings are highly recommended to avoid disappointment.


**BUSHEY - £249,950**
Forward Real Estates are pleased to offer for sale this 3 bedroom end terrace house. This property benefits from a reception, large kitchen/diner, utility area, 3 bedrooms, separate bathroom and WC, front and rear garden. This property is offered with no onward chain.



**NEWSAGENTS/OFF LICENCE - BARNET £99,450**
Forward real estates are pleased to present this successfully trading Newsagents with Grocery and off-licence. This shop is situated in a prominent location. The takings from the shop is £7,500 (approx) per week. There are 2 – 2 bedroom flats on the first floor.


**3 BED HOUSE - WEMBLEY £349,950**
Forward Real Estates are pleased to offer for sale this 3 bedroom mid terraced family home. This property benefits from double glazing, gas central heating, 2 receptions, open plan kitchen, 3 bed rooms, separate WC and bathroom, driveway, large rear garden and out house with 2 rooms. The property is available fully furnished.



**LAUNDERETTE AND DRY CLEANERS - EDGWARE £240,000**
Forward real estates are pleased to present this successfully trading Launderette and Dry cleaners for sale. This shop boasts of a large trading area and is situated in a prominent location. The takings from the shop is £14,000 (approx) per month. There are 1 - 4 bedroom flat, 1 - 2 bedroom flat and 1 - studio flat on the top floors. Early viewings are highly recommended to avoid disappointment.



**ITALIAN RESTAURANT - MORDEN £359,950**
Forward Real Estates are delighted to present this successfully trading Italian restaurant with exotic cocktail bar. This restaurant is situated in a prominent location and is fully licensed. It has been recently refurbished to a high standard.

**INAUGURAL OFFER** *0.6% ON SALES 5% ON LETTINGS*
* *Limited Time Only*
***Try us, be surprised!!!***

**020 8900 9052**

FindaProperty.com

# 'இசங்களும்' 'இஸ்ட்டுக்களும்' நடைமுறை அரசியலும்

ஆராய்பவர்
*(அற்புதன்)*

இன்று தமிழ் இணையத்தில் பல்வேறு இசங்களைப் பற்றி பல்வேறு இஸ்டுக்கள் முனைப்பாக எழுதி வருகின்றனர்.

இந்த இசங்கள் பற்றியும் இணையத்தினூடாகப் புலத்தில் இருந்த வண்ணம் சொகுசான முறையில் வீட்டிற்குள் கணனி முன் இருந்து இலவசத்தில் இணையப் புரட்சி செய்யும் இந்த இஸ்ட்டுக்களைப் பற்றியதுமான பொதுவான ஒரு பார்வையாக இந்தக் கட்டுரை அமைகிறது.

நான் சொல்வதே முடிந்த முடிபு என்றோ, நான் சொல்வதே அறுதியும் இறுதியானது என்றோ எந்த விவாதமும் எனது அறிவை, அரசியல் நிலைப் பாடுகளைப் பரிசோதித்துக் கொள்ள அவசியம் அற்றது என்றோ இக் கட்டுரை சொல்ல வரவில்லை.

மாறாக அறிவு என்பதுவும் அரசியல் என்பதுவும் அதிலும் மார்க்சிய அரசியல் என்பதுவும் விவாதத்தில் இருந்தே பிறந்தது, வளர்கிறது என்பது மிகவும் அடிப்படையான ஒரு உண்மை.

இத்னை மறுதலிக்கும் எவருமே ஒன்றில் ஜனநாயகம் அற்றவர்கள் அல்லது மார்க்சியப் போலிகள் அல்லது வரட்டுச் சித்தாந்திகள். தமது அரசியல் நிலைப் பாடுகளை விவாதிக்கத் தயங்கும் எவருமே தம்மையும் ஏமாற்றி மற்றவர்களையும் ஏமாற்றுகிறார்கள்.

விவாதத்தின் மூலம் தமது தெளிவற்ற குழப்பமான நடைமுறைக்கு ஒவ்வாத வரட்டுத் தனங்கள்அம்பலமாகும் என்பதே இந்த மறுப்பிற்கான அடிப்படை.

புத்தகங்களில் படித்த புரட்சிகரமான சொற்களை அவற்றின் அர்த்தமே விளங்காமல் சூத்திரம் போல் ஒப்புவிப்பதும், எந்த வித சமூக ஆய்வுகளோ,ஒப்பீடுகளோ , நடைமுறை அனுபவமோ அற்று இணையத்தில் புரட்சிகரக் கோசம் இடுவதே இவர்களின் போலியான அரசியலாக இருக்கிறது.

மாற்றாக நடைமுறை அரசியல் என்பது ஒரு சித்தாந்தம் நடைமுறை ரீதியாகப் போராட்டக் களத்தில் பிரயோகிக்கப்பட்டு, அந்தப் போராட்டக் களத்தில் நிகழும் நடைமுறை அனுபவத்தினூடாகப் பண்படுத்தப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு நடைமுறை தழுவிய ஒரு அரசியற் போராட்டச் சித்தாந்தமாக மக்கள் மத்தியில் பரிணமிக்கிறது.

நடைமுறை அற்ற வரட்டுச் சித்தாந்தங்கள் வெறும் எழுத்துடன், இணையத்துடன் தங்கள் போராட்டத்தை முடித்துக் கொள்கின்றன.

நான் யார், நான் வாழும் சூழலில் எனது அடையாளம் என்ன, எனக்கும் எனைச் சூழ இருக்கும் சமூகத்திற்குமான உறவு எத்தகையது எனும் கேள்விகளில் இருந்தே ஒருவரின் அரசியல் பிரஞ்ஞை என்பது பிறக்கிறது.

இவ்வாறு பிறக்கும் தனி மனிதர்களின் சுய அரசியல் விழிப்பின் பாற்பட்டே பொதுவான அரசியல் சித்தாந்தங்களும் அந்தச் சித்தாந்தங்களை முன் மொழியும் இயக்கங்களும் பிறக்கின்றன.

இவ்வாறு பிறக்கும் அரசியல் இயக்கங்களுக்கான தேவை என்பது அவை பிறக்கும் காலத்தில் நிலவும் சமூக உறவு முறைகளில், அவற்றிற் கிடையேயான முரண்பாடுகளில் இருந்தே பிறக்கிறது.இன்றைய அரசியல் என்பது இன்றைய சமூகத்தில் இருக்கும் முரண்பாடுகளின் அரசியல்.

**தமது அரசியல் நிலைப் பாடுகளை விவாதிக்கத் தயங்கும் எவருமே தம்மையும் ஏமாற்றி மற்றவர்களையும் ஏமாற்றுகிறார்கள்.**

அது கற்பனையான அல்லது நேற்று இருந்த அல்லதுநாளைநிகழக்கூடியமுரண்பாடுகளின் அரசியல் அல்ல.

ஒருசமூகத்தில்நிலவியமுரண்பாட்டின் அடிப்படையில் எழுந்த போராட்டத்தை இன்னொரு சமூகச் சூழலில் கொண்டு சென்று பொருத்த முடியாது.

ஒவ்வொரு போராட்டமும் அந்த, அந்தச் சூழலில் அந்தக் கணத்தில் இருக்கும் பிரதானமான முரண்பாட்டில் இருந்தே ஊற்றெடுக்கிறது.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் கூட ஒரு சமூகத்தில் பல் வகையான முரண்பாடுகள் இருக்கும். இதில் ஒருவருக்கும் இன்னொருவருக்குமான தனிப்பட்ட முரண்பாடுகள், ஒருபொது அடையாளத்தை தமது என உணரும் ஒரு மக்கட் கூட்டத்திற்கும் இன்னொரு கூட்டத்துக்குமான முரண்பாடுகள்.

இந்தப் பொதுமையான அடையாளத்தை உடைய மக்கட் கூட்டத்திற்கு உள்ளேயே இருக்கும் வேற்றுமைகளில் இருந்து எழும் முரண்பாடுகள் எனப் பல நிலைகளில் முரண்பாடுகள் தொழிற்படும்.

முரண்பாடுகளைத் தீர்க்கும் வழி முறையே அரசியல் என்னும் போது, அரசியல் இயக்கங்கள் என்பனவையும் முரண்பாடுகளின் அடிப்படையிலேயே கட்டப்படுகின்றன.

ஒரு மக்கட் சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிலவும் பிரதானமான முரண்பாட்டைத் தீர்க்கும் வண்ணம் அந்த மக்கட் சமூகத்தில் இருந்து எழும் அரசியற் சக்தி என்பது அந்த பிரதான முரண்பாட்டிற்கான தீர்வின் அடிப்படையிலேயே எழுகிறது.

இங்கே ஒரு போராட்டச் சூழலில் எழுந்த தீர்வை இன்னொரு போராட்டதிற்கான தீர்வாக பதியம் இட முடியாது. ஒரு முரண்பாட்டிற்கான தீர்வென்பது அந்தப் போராட்டச் சூழலில் இருந்தே எழுகிறது.

எந்த அரசியல் இயக்கமும் அந்தத் தருணத்தில் அதற்கான தேவையில் இருந்தே எழுகிறது. எனக்குப் பெரியாரைப் பிடிக்கும் ஆகவே நான் ஒரு பெரியாரிஸ்ட், எனக்கு மாக்சைப் பிடிக்கும் ஆகவே நான் ஒரு மாக்சிஸ்ட் என்பதால், நான் இணையத்தில் அவர்கள் சொன்ன வேதவாக்கின் படி புரட்சி செய்யப் போகிறேன் என்பதால் புரட்சிகளோ,மாற்ங்களோ, போராட்டங்களோ நடந்து விடப்போவதில்லை.

எந்தப்புரட்சியும் அவைபிரயோக்கிக்கப்படும் களத்திலையே நடை பெற முடியும். நடைமுறையில் சாத்தியமாகாத புரட்சி என்பது வெறும் வரட்டுச் சித்தாந்தமே.

சமூகத்தில் இருக்கும் பிரதானமான முரண்பாட்டிற்கான தீர்வை முன் மொழியாத சித்தாந்தம் என்பது நடைமுறையில் மக்களால் நிராகரிக்கப்படும் என்பதே அரசியல் நிதர்சனம்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் இதுவே வரலாறாக இருக்கிறது.வரலாற்று இயங்கியலே அரசியல் இயக்கங்களை உருவாக்கு கிறது.பிரபாகரனை உருவாக்கியதும், புலிகளை உருவாக்கியதும் வரலாற்று இயங்கியல் தான்.

மக்களே அரசியல் இயக்கங்களை போராட்டச் சக்திகளை உருவாக்கிறார்கள்.மக்களில் இருந்தே போராட்ட இயக்கங்கள் கட்டப்படுகின்றன.மக்கள் ஆதரவு என்பது அந்தச் சூழலில் உருவாகும் அரசியற் சக்திகளில் எவர் தமக்கான தீர்வை முன் வைத்து அர்ப்பணிப்புடனும்,வினைத் திறனுடனும் செயற்படுகிறார்கள் என்பதன் அடிப்படையிலையே தீர்மானிக்கப்படுகிறது.

**இவ்வாறு பிறக்கும் அரசியல் இயக்கங்களுக்கான தேவை என்பது அவை பிறக்கும் காலத்தில் நிலவும் சமூக உறவு முறைகளில், அவற்றிற் கிடையேயான முரண்பாடுகளில் இருந்தே பிறக்கிறது.**

தலைக்கு மேல் குண்டுகள் பொழியப்பட்டுக் கொண்டிருக்கும் போது ஒருவனுக்கு தனது உயிரைப் பாதுகாப்பது தான் மிக முக்கியமான விடயமாகத் தெரியும்.

நான் சுரண்டப்படுகிறேனா, நான் வணங்கும் கோவிலில் அச்சகர் பூணூல் போட்டிருக்கிறாரா என்பதல்ல ஒருவனது இன்றைய பிரச்சினை.

நாளும் நாளும் செத்து மடியும் எனது உறவுகளைப் பாதுகாப்பதற்கான ஒரு வழியை எந்த அரசியல் இயக்கம் சொல்கிறதோ அதிலும் மிக முக்கியமாக அதன் பொருட்டு வினைத் திறனுடன் செயற்படுகிறதோ அதற்கே நான் எனது ஆதரவை வழங்கப் போகிறேன். அவ்வாறே தம்மை தமிழர்கள் என்று உணர்த்தப்படும்,அடக்கப்படும்,

விரி PANORAMA
www.yarl.com

கொன்றொழிக்கப்படும் பலரும் சிந்திக்கும் போதும் அதன் பொருட்டு செயற்படும் போதும் அந்த அரசியல் இயக்கம் பரந்த அளவில் மக்கள் ஆதரவைப் பெற்று மேலும் மேலும் வளர்ந்து முரண்பாட்டிற்கான தீர்வை நோக்கிச் செல்கிறது.

**சமூகத்தில் இருக்கும் பிரதானமான முரண்பாட்டிற்கான தீர்வை முன் மொழியாத சித்தாந்தம் என்பது நடைமுறையில் மக்களால் நிராகரிக்கப்படும் என்பதே அரசியல் நிதர்சனம்.**

சிங்களப் பேரினவாதமே தமிழ்த் தேசிய விடுதலைப் போராடத்தை தூண்டியது, வளர்த்தது,வளர்க்கிறது.

தமிழ்த் தேசிய விடுதலை என்பதே இன்றைய நிலையில் தமிழர்களின் பிரதான முரணிற்கான மிக முக்கியமான தீர்வாக எம் முன் இருக்கிறது.இந்த விடுதலை என்பது தமிழர் என்னும் அடையாளத்தை உடைய எவருக்குமே இப்போது அவசியமாக இருக்கிறது.

நான் ஒரு தலித்தாக இருக்கலாம், நான் ஒரு பெண் ஆக இருக்கலாம் ஆனால் நான் ஒரு தமிழனாக இருப்பதாலையே இப்போது கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறேன். நான் ஒரு தலித்தாக ,ஒரு பெண்ணாகப் போராடுவதற்கு முன் நான் உயிர் வாழ வேண்டும்.

இந்த அரசியல் நடைமுறைக்கு ஒவ்வாத இசங்களையும்,இஸ்ட்டுக்களையும் அவர் தம் இணையப் புரட்சிகளையும், மாநாடுகளையும், ஈழ விடுதலைப் போராட்டச் சரித்திரத்தில் செத்து மடிந்த ஆயிரம் ஆயிரம் குப்பைகளோடு குப்பையாகப் புதைத்து விடும் வரலாற்று இயங்கியல்.

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர்

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு வகைகள், பசுமையான மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், பாத்திர வகைகள், தமிழ், இந்தி சினிமா DVD, CD, VHS போன்றவற்றை பெறுவது மாத்திரமன்றி

கடல் கடந்து வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவதற்கும் நாடவேண்டிய இடம்....

அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்





MARUTHI CASH & CARRY
15 - 17 Queensbury Station Parade, Queensbury HA8 5NR
Tel: 020 8952 66 55 | 020 8381 3442 | Fax: 020 8905 7546

# செய்தி ஊடகங்களின் ஆரம்பமும் இன்றைய பிரச்சார வடிவமும்

மனித இனத்திடம் தம்மை சுற்றி நடப்பவை பற்றியும் அவற்றினால் ஏற்படக் கூடிய தாக்கம் பற்றியும் அறியும் ஆவல் இயற்கையாக இருந்தது. இந்த ஆர்வத்தை பூர்த்தி செய்ய நுகரப்படுவது தான் செய்திகள் என்று நாம் இன்று விளங்கி வைத்துள்ள பதம்.

ஆரம்ப காலங்களில் செய்திகளின் பரிமாற்றம் என்பது தனிநபர்களிடையேயானதாகவும் செவி வழியாக பயணம் செய்பவர்களால் பரப்பப்பட்டதாக இருந்தது. எனவே பரிமாறப்படும் செய்திகளின் உள்ளடக்கம் என்பது கேட்பவர் ஆர்வப்படுபவற்றிலும் சொல்பவரின் அவதானத்திலும் தங்கியிருந்தது. உள்ளடக்கத்தின் பெறுமதியும் உண்மைத்தன்மையும் அவதானத்தை பகிர்வபரிலும் பரிமாற்றம் நடக்கும் சந்தர்ப்ப சூழ்நிலையிலும் தங்கியிருந்தது.

மனித நாகரிக வளர்ச்சியில் அதிகாரம் ஆட்சி ஒழுங்கு சட்டம் என்பவை படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது இந்த செய்திப் பரிமாற்றம் என்பதும் வரையறைகளை சந்தித்ததுடன் புதிய வடிவங்களையும் பெற்றது. ஆட்சி அதிகார பீடங்கள் அறிவுப்புகளை செய்தல் நிகழ்வுகளை தொகுத்து வழங்குதல் போன்றவற்றின் மூலம் செய்திகள் தனிநபர் பரிமாற்ற வடிவத்தில் இருந்து கட்டுப்பாடான பரப்பல் வடிவத்தை அடைந்தது. பரப்பல் நோக்கமாக்கப்பட்ட நிலையில் அதற்கு பொருத்தமான வடிவங்களாக இசை நடனம் கதை பாடல்கள் என்பன புகுத்தப்பட்டன. ரோமர் சாம்ராச்சியத்தில் யுலியர் சீசர் காலப் பகுதியில் இருந்து அன்றாட நிகழ்வுகள் பற்றி தயாரித்த அறிக்கைகள் அதன் காலனித்துவ பகுதிகளில் பரப்பப்பட்டதாக ஆதாரங்கள் உண்டு.

அச்சு பிரதி செய்யும் முறை 1456 கண்டு பிடிக்கப்பட்ட காலத்தில் இருந்து செய்திப் பரப்பல் முறை புதிய வடிவத்தைப் பெற்றது. ஆரம்பத்தில் பைபிள் போன்ற புத்தகங்கள் அச்சுப் பிரதி செய்யப்பட்டு வினியோகிக்கப்பட்டது. புத்தக பாணியில் எழுதப்பட்ட பருவவெளியீடாக முதல் பிரசுரம் 1594 இல் லத்தீன் மொழியில் யேர்மனியில் வெளிவந்தது என்று கூறப்பட்டாலும் ஆதாரபூர்வமாக முதலாவது செய்தித்தாள் அச்சு செய்யப்பட்ட ஆண்டாக 1605 உலக செய்தித்தாள் ஒருங்கமைப்பினால் (World Association of Newspapers) இன்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது. வாராந்த சஞ்சிகை வடிவிலான பிரசுரங்கள் முதன் முதலில் ஆங்கிலத்தில் இங்கிலாந்தில் 1665 இல் இருந்து வெளிவரத் தொடங்கியது.

கைத்தொழில் புரட்சியும் தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றங்களும் அச்சுப் பிரதிகளை உருவாக்குவதில் பாரிய முன்னேற்றங்களை தரத்திலும் வேகத்திலும் தந்தன. காலனித்துவ காலங்களில் அரசாட்சிக்கு எதிரான பத்திரிகைகள் இயங்க முற்பட்ட பொழுது அவற்றை தடுக்கும் நோக்கில் பத்திரிகைகளை பிரசுரிப்பதற்கு முத்திரை பெறவேண்டிய விதிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

இதன் அடிப்படை நோக்கம் முத்திரை மூலம் பெறப்படும் வரி மூலம் பொருளாதார சுமையை அதிகரித்து சுயாதீன பத்திரிகைகளிற்கான எண்ணிக்கையை குறைப்பதும் முத்திரையை வழங்காது விடுவதன் மூலம் குறித்த பத்திரிகைகளை தடை செய்யும் முயற்சியாகவும் இருந்தது. இவ்வாறு படிப்படியாக மக்களின் ஆர்வங்களை பூர்த்தி செய்யும் செய்திகளை தாங்கி வந்த ஊடகமும் அதை நிறைவேற்றுவதில் ஈடுபட்ட ஊடகத்துறையும் மக்கள் மீது ஆளுமையைச் செலுத்தும் ஒரு கண்ணுக்கு புலப்படாத அதிகாரத் தரப்பாக மாற்றம் பெற்றது.

செய்தி ஊடகத்தின் வளர்ச்சியானது அதன் செய்தி சேகரிப்பு முதல் வினியோகம் வரை எதிர்கொள்ளும் பொருளாதார சுமைகளை தாங்குவதற்குரிய பின்புலங்களில் தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியது.

சுயாதீனமாக இயங்கிய செய்தி ஊடகங்கள் விளம்பரங்களை பிரசுரிக்கும் வழக்கத்தை அறிமுகப்படுத்தியதனூடாக தமது சுயாதீனத்தை மேலும் இழந்தன. இவ்வாறு வணிகமயப்படுத்தப்பட்ட ஊடகத்துறை தம்மை நோக்கிவிளம்பரங்களையும் முதலீடுகளையும் கவரும் நோக்கில் தமது இயக்க விதிகளை மாற்றிக் கொண்டார்கள்.

இதன் அங்கமாக மரியாதைக்குரிய நடத்தை நடுநிலையான நீதியான கொள்கைகள் என்ற பொது அபிப்பிராய ரீதியில் கவர்ச்சியான வரையறைகளை உருவாக்கியதன் மூலம்professional journalism என்பதற்கு வித்திட்டார்கள்.

இதன் அங்கமாக ஊடகத்துறைக்குரிய கல்லூரிகள் உருவாக்கப்பட்டது. இவ்வாறு துறைசார் கல்லூரிகளில் பயிற்றப்பட்ட Professional journalism என்பதன் ஒரு அங்கம் தான் உத்தியோகபூர்வ மூலங்களில் இருந்து வரும் தகவல்களையும் அபிப்பிராயங்களை மட்டும் தான் செய்தியாக்கும் மரபு. அதாவது அரச நிர்வாகம் முதல் ஏனைய நிலையான கட்டமைப்புகளின் நலன்களிற்கு எதிராக எதையும் பிரசுரிக்காத தன்மை.

இன்றைய உலகில் பிபிசி முதல் நியுயோர்க் ரைம்ஸ் பத்திரிகை வரை எல்லோரும்professional journalism என்ற வரையறைக்குள் இயங்குபவர்கள்.

இற்றைவரை பிபிசி ஈராக் யுத்தத்தை 'தவறாக கணிப்பிடப் பட்டதாக' சித்தரிப்பதோடு நிறுத்தி விடுகிறதே அன்றி சட்டத்திற்கு விரோதமானது, சீண்டப்படாத வலிந்த தாக்குதல் என்றோ பொய்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பாகவோ சித்தரிப்பதில்லை.

இதே போன்றே 2 ஆம் உலகமாயுத்தத்தின் முடிவில் ஆவணி 1945 இல் யப்பான் மீது வீசப்பட்ட அணுகுண்டு பற்றி ரைம்ஸ் சஞ்சிகை வரைந்த தலையங்கம் 'கீரோசிமா அழிவுகளில் அணுக் கதீர்வீச்சு இல்லை' ("No Radioactivity in Hiroshima Ruin").

விரியம் PANORAMA
www.yarl.com

அமெரிக்காவின் ஊடகங்கள் ஈராக் மீதான படையெடுப்பில் அரச தரப்பு தகவல்களையும் அபிப்பிராயங்களையும் ஒருமனதாக ஒத்து ஊதி நாட்டையும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் (ஊடகத்)துறையையும் ஏமாற்றிவிட்டதாக தற்பொழுது விவாதங்கள் நடைபெறுகிறது.

அமெரிக்காவில் ஊடகங்கள் வணிக சக்திகளின் கையில் நடுநிலையை இழந்து நிற்கிறது என்ற பரவலான கருத்தியல் இன்று உருவாகிவிட்டது.

ஒப்பீட்டளவில் பிபிசி இன்னமும் நடுநிலை உள்ள ஊடகமாக அமெரிக்காவில் கருத்தப்படுவதால் சந்தர்ப்பத்தை உணர்ந்து அண்மையில் 'பிபிசி அமெரிக்க' என்ற சேவையை அறிமுகப்படுத்தியிருந்தார்கள்

ஈரான் மீதான கவனம் திரும்பிய காலப் பகுதியில் பிபிசி மற்றும் வொயிஸ் ஒவ் அமெரிக்க போன்ற ஊடகங்கள் பேர்சியன் மொழியிலான சேவையினை விரிவாக்கியிருந்தார்கள் .

அதேவேளை பிபிசி பொருளாதார சிக்கல்களினால் செலவினங்களை கட்டுப்படுத்தும் மறுசீரமைப்பு மூல்ம் சில நிகழ்ச்சிகளை நிறுத்துவதாகவும் பல நூறு பணியாளர்களை இடைநிறுத்துவதாகவும் அண்மையில் அறிவித்திருந்தது. இந்தப் பின்னணியில் சர்வதேச ஊடகங்களின் பல்மொழிச் சேவைகளின் நோக்கத்தையும் ஓரளவு புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

*- குறுக்காலை போவான்*

MARKANDAN & CO
SOLICITORS & ESTATE AGENTS

We also Specialise in....

- ஒப்பந்த தகராறுகள்
- நுகர்வோர் பிரச்சினைகள்
- மரண சாசனம் உறுதி தயாரித்தல்
- Bankruptcy Problems
- மதுபான அனுமதிகள்
- கட்டட அனுமதிகள்
- Cafe அனுமதிகள்
- House / Flat
- Purchase or Sale
- Remortgages
- Right to Buy
- Highly skilled migration
- Power of Attorney
- Sponsorship for UK Visas
- Work Permit application
- Civil Litigation

No Win – No Fee

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்.

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்
விவாக விண்ணப்பங்கள் | அகதி விண்ணப்பங்கள்
14, 10 அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணப்பங்கள்
பிரித்தானிய பிரஜாவுரிமை | வீதிப் போக்குவரத்து | சம்பந்தமான வழக்குகள்

கடன் சுமையில் இருக்கிறீர்களா?

உங்கள் வங்கிகளுடன் / நிதி நிறுவனத்துடன் உரையாடி உங்கள் கடன் தொகையைக் குறைப்பதுடன் முடிந்தால் வட்டியையும் நீக்கிவிட முயல்வோம். No Win – No Fee (Subject to assessment)

நீங்கள் உரிய காலத்திற்கு முன்னரே ஈட்டுத் தொகையை மீளச் செலுத்தியதற்காக உங்கள் வங்கி / நிதி நிறுவனம் மேலதிக கட்டணத்தை அறவிட்டுள்ளதா?
உங்களிடமிருந்து மேலதிகமாக கட்டணம் அறவிடப்பட்டதாக நீங்கள் கருதினால் FSAயின் விதிப்படி அதனை வங்கியிடமிருந்து மீளப் பெற்றுத் தர முயல்வோம்.
No Win -- No Fee (Subject to assessment)

அண்மைக் காலத்தில் விநியோகிக்கப்பட்ட மாசுபடுத்தப்பட்ட எரிபொருளால் உங்கள் வாகனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதா? அப்படியானால் எரிபொருள் நிலையத்திலிருந்து நஷ்ட ஈடு பெற்றுத் தருவோம். No Win – No Fee (Subject to assessment)

வரிச்சுமைகளை குறைப்பதற்கும் ஆலோசனைகள் வழங்கப்படும்
No Win – No Fee (Subject to assessment)



845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: 08712887343 Fax: 08712887353
Web: www.markandan-solicitors.com
Email: mm@markandan-solicitors.com

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்...

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

# அடி கொஞ்சம் கனமாத் தான் விழுந்திட்டுது போல



ஆக்களுக்குத் தலையிலை அடி பட்டால் மறை கழண்டு போகும் எண்டு சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறம். அந்த மாதிரித் தான் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின்ரை தலை மாதிரியான அநுராதபுரத்திலை விழுந்த அடியிலை சிங்கள அமைச்சர்களும் படைத் தலைவர்களும் வாயுழறிக் கொண்டிருக்கினம்.

சாம்பிளுக்கு கொஞ்சம் பாருங்கோ

**றம்புக்வெல்ல (சிங்களத்தின்ரை படைத்துறைப் பேச்சாளர்)**

அநுராதபுரத்திலை புலிகளின்ரை தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டிருக்கிறது. இதில் 2 விமானங்கள் மட்டும் சிறிய சேதங்களிற்குள்ளாகியுள்ளன. நிலமை பூரண கட்டுப்பாட்டிற்குள் உள்ளது.

**பிரதமர் பாராளுமன்றத்தில்**

புலிகளின் தாக்குதலில் எட்டு விமானங்கள் சேதமடைந்துள்ளன.

**லக்ஸ்மன் செனிவிரட்ன–ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்**

அனுராதபுரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிறிலங்கா வான் படையின் 18 வானூர்திகள் அழிக்கப்பட்டுள்ளன. மொத்தம் ரூ 6.6 பில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளது

**இக்பால் அத்தாஸ் — பாதுகாப்பு ஆய்வாளர்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலி அணிகள், 2001 யூலையில் கட்டுநாயக்கவில் ஏற்படுத்தியவற்றை விட அதிக அழிவுகளையும் இழப்புகளையும் கடந்த வாரம் அ'புரம் விமானத்தளத்தின் மீதான தாக்குதல் எற்படுத்தியிருக்கின்றன.

அநுராதபுரம் விமானத்தளத்தில் அச்சமயம் தரித்திருந்த 27 வான் கலங்களில் மூன்றைத் தவிர எஞ்சியவை ஒன்றில் முற்றாக நாசமாக்கபட்டிருக்கின்றன அல்லது பகுதியாகச் சேதமாக்கபட்டிருக்கின்றன

**றம்புக்வெல்ல**

படுதோல்வியை மறைக்கப் புலிகள் இது போன்ற ஒரு கோழைத்தனமான தாக்குதலை நடத்தியுள்ளனர்.

**றம்புக்வெல்ல**

புலிகளிடமிருந்து இது போன்றதொரு தாக்குதலை நாங்கள் எதிர்பார்க்கவில்லை

**மஹிந்த ராஜபக்ச**

சிறீலங்கா வான் படைக்கு சொந்தமான வான் கலங்கள் விடுதலைப் புலிகளின் தற்கொடை அணியினால் அழிக்கப்பட்டது எனக்குக் கவலையைத் தரவில்லை

**ரவி கருணாநாயக்கா**

விமானங்கள் அழிக்கப்பட்டது குறித்து மஹிந்தவும் அவரது சகோதரர்களும் மகிழ்ச்சியில் இருக்கிறார்கள். இப்போது வான்கலங்களைக் கொள்வனவு செய்யும் போது பெரும் ஊழல்கள் செய்யலாம் . பெரும் பணம் ஈட்டலாம் என்பதே மகிழ்ச்சிக்கு காரணம்.

**உதய நாணயக்கார (படைத்துறை பேச்சாளர்)**

இறந்த புலிகள் தற்கொலை அங்கிகளை அணிந்திருந்ததாலேயே அவர்களது ஆடைக்ளைக் களைய வேண்டி ஏற்பட்டது.

**றம்புக்வெல்ல**

புலிகளின் உடல்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டதாக வந்த செய்திகள் தவறானது. அரசிற்கு எதிரான பிரச்சாரங்களை மேற்கொள்வதற்காக புலிகள் நவீன தொழினுட்பங்களைப் பயன்படுத்தி இது போன்ற போலியான படங்களைத் தயாரித்திருக்கலாம்.

**உதய நாணயக்காரா**

அநுராதபுர நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் புலிகளின் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன

**அநுராதபுர நீதிமன்றம்**

புலிகளின் உடலங்களை அடக்கம் செய்யும் படி நாங்கள் எந்த ஒரு தீர்ப்பையும் அறிவிக்கவில்லை

**மஹிந்த ராஜபக்ச**

புலிகளின் எத்தகைய நிபந்தனைகளுக்கும் அரசு அடிபணியாது. நாம் புலிகளை யுத்தத்தில் வெல்ல உறுதியாக இருக்கிறோம்

**லக்ஸ்மன் கிரியெல்ல ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் கை ஓங்கும் முன்னரே தற்போதைய நிலையைத் தக்க வைத்துக்கொண்டு புதிய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்

**லக்ஸ்மன் கிரியெல்ல — ஐ.தே.க**

இலங்கை இனப்பிரச்சினைக்கு போரின் மூலம் தீர்வு காண்பது என்பது முட்டாள்தனமானது

**மஹிந்த ராஜபக்ச**

விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு தயார்

**மஹிந்த ராஜபக்ச**

இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வு முன்வைக்கப்படும்

**கோத்தபாயா ராஜபக்ச**

கூடிய விரைவில் எமது விமானப்படையினர் புலிகளின் விமானங்களை சுட்டு வீழ்த்துவதை நீங்கள் காணத்தான் போகின்றீர்கள்.

**ரவி கருணாநாயக்கா**

எமது படைத்தளங்களுககு மேல் ஒரு காக்காய் குருவி பறந்தால்கூட சுட்டு விழுத்துவோம் என்று சவால் விட்டவர்கள் இன்று மௌனமாகி விட்டார்கள்

**ஹிலாரி கிளின்டன்**

இலங்கையில் போராடும் தமிழ்ப் புலிகள் அல்லது ஸ்பெய்னின் பாஸ்கி பிரிவினைவாதிகள் ஆகிய அனைவரையும் பயங்கரவாதம் என்ற அகன்ற தூரிகையால் சாயம் பூசுகின்ற தவறுகளைச் நாம் செய்வதாக நினைக்கிறேன்.

**சம்பிக்க ரணவக்க**

ஹிலாரி கிளிண்டனின் அறிக்கை ஆபத்தானது. இது குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும்.

**மஹிந்த ராஜபக்ச**

அவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறப் போவதில்லை. அதனால் இது குறித்து நாங்கள் கவலைப் படத் தேவையில்லை

❖ ❖ ❖

என்ன மனநல வைத்திய சாலையிலை நிக்கிற feeling வருகுதோ?

*- வித்தகன்*



*நன்றி :தினக்குரல்*

Meera Arnold & Co.
pay roll
book keeping
company formation
45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2333

**A J ACCOUNTANCY**
Auditors & Accountants
Over 25 years in public practise
Accounts Preparation, Self Assessment, VAT & PAYE Returns
An Efficient, Practical Service for small to Medium Size Companies, Partnerships & Sole Traders
Tel: 020 8778 8666
Fax: 020 8778 8999
Email: info@ajaccountancy.co.uk
Web: www.ajaccountancy.co.uk
43 Anerley Road, London SE19 2AS

**PERMA**
**INTERNATIONAL SHIPPING LTD**
உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?
இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும் தரமான பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்
**தொடர்புகளுக்கு: சிவம்**
45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: 020 8646 5222, Mobile: 07939 550397



அனைத்து தமிழ் தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பான தொழில் நுட்பத்துடன் பொருத்திக்கொள்ள, திருத்த வேலை சகல அறைகளிலும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்து ரசிக்கலாம்.
Ram: 07861 371 837 / Thas: 07885 987 857

**தமிழ் பேசி தலைமுடி அலங்கரிக்கும் ஆள் உடன் தேவை!**



FAIRCUT 3 BARBERS
Tel: 020 8684 1103
379, Mitcham Road, Croydon
CR0 3HP
Opening Hours:
Mon- Thurs 10am – 7pm
Fri- Sat 10am – 8pm
Sundays 10am – 5pm

**GRAND CONSTRUCTIONS**
Professionally Qualified Engineers with 10 Years Experience
- Obtaining Planning Permissions & Building Control
- All Types of Consultancy & Drawings (Architectural & Structural)
- All Types of Quality Construction & Repairs
- Cost Saving Advices and Free Estimates

Contact: 07912615876 or 07886532103

# தலைவர் என்றால் சங்கரிதான்

**சங்கரிபுத்திரன்**
*( ஒரு பேப்பருக்காக )*

'நெஞ்சு பொறுக்குதில்லையே. இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்து விட்டால்' என்ற பாரதியாரின் பாடல்தான் இப் பொழுது நினைவுக்கு வருகிறது. தமிழ் மக்களுக்காக. ஓயாது உழைத்த உத்தமன் எங்கள் ஐயா தலைவர் ஆனந்தசங்கரி அவர்கள் பற்றி ஒரு சில காவாலிக் கூட்டம் தூற்றிக் கொன்டு திரிகிறதே. அதை நினைக்கும் பொழுதுதான் நெஞ்சு பொறுக்குதில்லையே என்னும் பாடல் நினைவுக்கு வருகிறது.

ஆனந்தசங்கரி ஐயாவின் வரலாறு தெரியாத வீணர்கள்தான் ஐயாவைப்பற்றிக் கேவலமாகக் கதைக்கிறார்கள். ஐயா ஆரம்பத்தில் சமசமாசக் கட்சி என்ற கம்யுனிஸ்ட் சித்தாந்தக் கட்சியில் இருந்தார் அதிலிருந்தே நாம் ஒன்றை ஊகிக்கலாம்.

மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று அந்தக்காலத்திலேயே அவர் உளமாற சிந்தித்திருக்கின்றார் எம்.பி பதவிக்கு ஆசைப் பட்டிருந்தால் அவர் தமிழரசுக் கட்சியிலேயோ தமிழ்காங்கிரஸ் கட்சியிலேயோ சேர்ந்திருக் கலாம் ஆனால் அவர் சேரவில்லை. ஏன்? அவருக்கு எம்.பி. பதவியிலும் பார்க்க மக்கள் நலன்தான் முக்கியம்.

ஆனால் பிறகு அவர் ஆழ யோசித்து ஒரு முடிவுக்கு வருகிறார். மக்களுக்கு சேவை செய்வதற்கு எம்.பி பதவி வசதியானது. எனவே எம்.பி ஆகக்கூடிய காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்.

1970ஆம் ஆண்டு எலெக்சனில் ஜெயித்து எம்.பி ஆகினார். பாருங்கள் எங்கள் தலைவர் ஆனந்தசங்கரி ஐயாவின் திறமையை. அந்த எலெக்சனில் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம், செயலாளர் மு. சிவசிதம்பரம் எல்லோரும் தோற்றுப்போக, எங்கள் ஐயா வெல்கிறார். அது எப்படி? ஐயாவின்ர திறமைகள்தான் அதற்குக் காரணம்.

1972ஆம் ஆண்டு மே 22ம் திகதி, அப்போதைய பிரதமர் சிறீமாவோ, இலங்கையை குடியரசாக்கினார். இலங்கையை 'சிறீலங்கா என்று பெயர் மாற்றினார். தமிழ் மக்களை இரண்டாம் தரக்குடியாக்கினார்.

ஆனால் எங்கள் ஐயா மக்களின் நலனைக் குறியாகக் கொண்டு. சிறீமாவின் இந்தத் திட்டங்களுக்கு ஆனந்தசங்கரி அய்யா முழு ஒத்துழைப்பு வழங்கினார். சிறீமாவின்ர சீலைத் தலைப்பைப்பிடிச்சுக் கொண்டு திரிகிறார் என்று மற்றவர்கள் நக்கலடித்தாலும் ஐயா கலங்கவில்லை. எப்படி கலங்குவார்? ஐயாவின் நோக்கம் என்ன? மக்கள் நலன். பிறகென்ன தமிழர் முக்கியமா? மக்கள் முக்கியமா?

இப்படி ஆனந்தசங்கரி ஐயாவின் வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டினால், எங்கள் உடல் சிலிர்க்கும்படி பல அரிய சாதனைகளை நாங்கள் பார்க்கலாம். எத்தனை பெண்களுக்கு அவர் வேலை கொடுத்திருக்கிறார். இவற்றையெல்லாம் இந்தக் காவாலிக் கூட்டம் உணர்ந்ததில்லை. ஏதோ ஐயா இரண்டு, மூன்று மனைவிமாரை வைத்திருப்பதாகக் கதைகட்டி விடுகிறார்கள்.

தெரியாமல்தான் கேட்கிறேன். அதில் என்ன பிழை இருக்கிறது? ஏதோ ஐயா தன் உடல் இச்சைக்காகவா அதைச் செய்கிறார்? இல்லையே! அந்தப் பெண்களுக்கு வாழ்வு கொடுக்கிறார். இந்தக் காவாலிக் கூட்டங்களுக்குத் தெரிந்தது இரண்டு, மூன்று. ஆனால் ஐயா பல பெண்களுக்கு வாழ்வு கொடுக்கிறார். அதுதான் உண்மை.

சும்மா சாமானியர்களால் எங்கள் ஆனந்தசங்கரி ஐயாவைப் புரிய முடியாது. என்னைப் போன்ற அணுக்கத் தொண்டர்களால்தான் ஐயாவைப் புரிய முடியும்.

தலைவர் ஆனந்தசங்கரி ஐயாவை 'றோ'வின் ஏஜென்ற் என்றும் இந்தியாவின் விசுவாசியாகவும் சிலர் சித்தரிக்கிறார். இப்படி சொல்பவர்களுக்கு நாக்கு அழுகிப் போகும். வாய் புழுத்துப் போகும்.

ஐயாவை ஏஜன்ட் ஆக இரு என்று கேட்கிற அளவுக்கு 'றோ' என்ன சின்னன் பொன்னனான அமைப்பே? அல்லது 'றோ' பலசரக்குக் கடையா வைத்திருக்கிறது, ஐயாவை ஏஜென்ட் ஆக இருக்கச் சொல்லி கேட்பதற்கு?

ஐயாவை இந்தியவின் விசுவாசி என்று சொன்னால் நம்பலாம். இந்தியாவை விட்டால் அய்யாவுக்கு வேறு போக்கிடம் ஏது? எம்.பி ஆகியிருந்தால் அதைச் சாட்டிக் கொண்டு கொழும்பிலை சீவிச்சிருக்கலாம். அல்லாவிடில் சிங்களவங்களோடை அண்டளிக்க ஏலாது. அதனால் தான் ஐயா அடிக்கடி இந்தியாவுக்குப் போறதும் இந்தியாவை அனுசரித்து நடக்கிறதும். இதை எத்தனை பேரால் விளங்க இயலுமோ தெரியாது.

## 'றோ' பலசரக்குக் கடையா வைத்திருக்கிறது, ஐயாவை ஏஜென்ட் ஆக இருக்கச் சொல்லி கேட்பதற்கு?

தலைவர் ஆனந்தசங்கரி ஐயாவைப் பற்றி இன்னும் சிலர் வேறு விதமாகக் கதைக்கிறார்கள். சிங்கள அரசாங்கம் எறியிற எலும்புத் துண்டுக்காக ஐயா காத்து நிற்கிறார் என்கிற மாதிரி.

நாக்கில் நரம்பில்லாதவர்கள்தான் இப்படிக் கதைப்பார்கள். இப்படிப் பொய் கதைப்பவர்களுக்கு நான் பதில் சொல்லக் கூடாது. என்றாலும் சொல்கிறேன்.

சிங்கள அரசாங்கம் முழு இறைச்சிக் சாப்பாடு கொடுத்தால் ஐயா வேண்டாம் எண்ணுவாரோ?

தமிழ்ச்சனம் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். சிங்கள அரசாங்கம் ஒருபோதும் முழு இறைச்சிச் சாப்பாடு தராது. அது தான் வயிறு புடைக்கத் தின்று போட்டு எலும்புத் துண்டுகளைத் தான் போடும். லபக்கென்று எட்டி எலும்புத் துண்டுகளை பொறுக்க வேண்டும். இல்லாவிடில் டக்ளஸ், சித்தார்த்தர், சிறீதரன் கருணா என்று கொஞ்சப் பேர் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். அவர்கள் பொறுக்கிடுவார்கள்.

வயதுபோன காலத்தில் தலைவர் ஆனந்தசங்கரி ஐயாவுக்கு வீரம் குறைந்து போயிருக்கிறது என்று நீங்கள் நினைத்தால் அது உங்களுடைய பிழை. அமெரிக்காவே சொல்லப்பயப்படுகிற ஒரு விசயத்தை எங்களுடைய ஆனந்தசங்கரி ஐயா துணிந்து சொல்கிறார் என்றால் அவருடைய வீரத்தைப் பார்த்துக் கொள்ளுங்களேன்.

அனுராதபுரம் விமானப்படை முகாமை புலிகள் தாக்குகிறார்கள். தீர்க்கதரிசனமாக யோசித்துப் பாருங்கள். அது எவ்வளவு முக்கிய வரலாற்றுத் தவறென்பது உங்களுக்குப் புரியும்.

ஆனால் அதை அமெரிக்கா. இந்தியா என்று எந்த நாடுகளும் கண்டிக்கேல்லை. ஏன்? புலிகளுக்கு இந்த நாடுகள் பயம். ஆனால் ஆனந்தசங்கரி ஐயா துணிந்து கண்டித்தார்.

இந்த இடத்தில்தான் ஐயாவின் வீரம் வெளிப்படுது. இந்தச் சாகிற வயதிலும் இப்படி ஒரு. துணிச்சல் வருகிறதெண்டால் ஐயாதான் உண்மையான தமிழ் மக்களின் தலைவர்.

உண்மையில் இந்தத் தாக்குதல் தேவையில்லாத ஒன்று. இனிப் பாருங்கள் அனுராதபுரத்தில் தாக்கிய புலிகள் இலங்கை முழுவதும் தாக்கப் போகிறார்கள். அப்படியென்றால் சிங்கள மக்கள் எங்குபோய் நிம்மதியாக வாழ்வது?

இலங்கை என்பது சிங்களவர்களின் நாடு. அங்கு சிங்கள மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும். அதற்கு புலிகள் வேட்டு வைக்கிறார்கள். இதுதான் ஆனந்தசங்கரி ஐயாவிற்கு வந்த மனக்கவலை. அதுதான் அவர் கண்டிக்கிறார்.

தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவர் ஆனந்தசங்கரி ஐயா ஒருவர்தான்.



## Gigantopithecus blacki

Gigantopithecus blacki is an extint species of ape. The only known fossils of *G. blacki* are a few teeth and mandibles found in cave sites in Southeast asia. As the name suggests, these are appreciably larger than those of living gorillas, but the exact size and structure of the rest of the body can only be estimated in the absence of additional findings. Recent research using high-precision absolute-dating methods has shown that after existing for about a million years, *G. blacki* died out 100,000 years ago. Based on the fossils evidence, paleontologists speculate that Gigantopithecus had an adult standing height of over three meters (ten feet) and a weight of 550 kg (1200 lb), and was thus much larger and heavier than current-day gorillas. Its appearance is not known, because of the fragmentary nature of its fossil remains. It is possible that it resembled modern gorillas, because of its supposedly similar lifestyle. Some scientists, however, think that it probably looked more like its closest modern relative, the orangutang . Being so large, it is possible that Gigantopithecus had few or no enemies when fully grown; however, younger, weak or injured individuals may have been vulnerable to tiger and Homo erectus attacks. One skeleton of a full grown Gigantopithecus blacki was found in the Caves of china. The skeleton was 10ft tall. Other smaller skeletons were found close to it. Those skeleton belonged to Homo erectus. Scientists believed that the Gigantopithecus blacki had a battle with the Homo erectus and they killed each other.

By Kabilan Puvanendran





## Receipe

### Potato Rolls



- **1 medium baking potato (about 6 ounces)**
- **1/2 cup hot water (115 degrees F)**
- **2 large eggs, at room temperature**
- **2/3 cup sugar (4 1/4 ounces)**
- **2 1/4 teaspoons rapid rise yeast (1/4 ounce package)**
- **1 teaspoon fine salt**
- **4 1/4 to 1/2 cups all-purpose flour (13 1/8 ounces)**
- **1/2 cup unsalted butter (1 stick), at room temperature, plus more for brushing**

Cook the potato in a microwave on HIGH until soft and it squeezes easily up to 15 minutes. Peel and pass the warm potato through a potato ricer or food mill into a large bowl.

Stir the hot water, eggs, half the sugar and yeast into the potato. Add 2 cups of the flour and the salt and mix with a wooden spoon to make sticky, shaggy dough. Cover the bowl tightly with plastic wrap and set aside in a warm place until the dough doubles in volume, about 1 1/2 hours.

Beat the butter with the remaining 1/3 cup sugar in a standing mixer until light and fluffy. Add the risen dough to the creamed butter. Continue to mix on low until the butter and dough come together, about 1 minute. Gradually add the remaining 2 1/4 cups of flour, about 1/4 cup at a time.

Turn dough onto a lightly floured work surface and knead by hand until dough is smooth and no longer tacky, 1 to 2 minutes more. Shape dough into a ball.

Brush a large bowl with butter and turn dough around in bowl to coat lightly. Let rise at room temperature until doubled in size, about 1 1/2 hours.

Generously butter two 9-inch round or square cake pans. Turn the dough out of the bowl and pat into a rectangle about 16- by 8-inches, gently pressing out excess air. Divide the dough into 32 equal portions, about an ounce each, with a pizza wheel or bench scraper.

Position a rack in the centre of the oven and preheat to 375 degrees F.

Bake rolls until golden brown and puffy, and an instant read thermometer inserted into the centre of the rolls registers 190 degrees F, about 40 minutes. Remove rolls from the oven and quickly brush the tops with soft butter.

Cool the rolls in the pan for about 10 minutes before turning them out onto a rack in one piece. Cool slightly. Serve warm or at room temperature in one piece or pulled apart as individual rolls.

## Jokes

Doctor, Doctor I think I'm a bell?

**Take these and if it doesn't help give me a ring!**

Doctor, Doctor I've got wind! Can you give me something?

**Yes - here's a kite!**

Doctor, Doctor I think I need glasses

**you certainly do, Sir, this is a fish and chip shop!**

What do you get if you cross some ants with some tics?

**All sorts of antics!**

What do you call a greedy ant?

**An anteater!**

Why did the elephant put his trunk across the path?

**To trip up the ants!**

What is even bigger than an elephant?

**A giant!**

What do you call ants in space?

**Astronants!**

What do you call an ant from overseas?

**Important!**

What medicine would you give an ill ant?

**Antibiotics!**

What kind of hair do oceans have?

**Wavy!**

★ உடல் எடை குறைப்புக்கான மருந்துகள்
★ மூலிகை மருந்துகள்
- இன்னும் பல தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கு 10% விசேட விலைக்கழிவு*



வெளிவந்துவிட்டது
இலவச மருத்துவ இதழ்
"ஆரோக்கிய வாழ்வு"
பெற்றுக்கொள்ள தமிழ் கடைகள்
ஆலயங்களை நாடலாம்

Tel: +44 (0) 20 8765 9015
Email: sales@herbanaturelle.com
Web: www.herbanaturelle.com

மருத்துவ ஆலோசனைகளுக்கு, மூலிகை மருத்துவர் அஞ்சலா ஜெகநாதன் - 020 8765 9015

HERBA NATURELLE
Natural Health Centre
NORBURY 1410, London Road, Norbury SW17 4BZ
CROYDON 351a Whitehorse Road Croydon CRO 2HS

# காற்றோடு போனவனும் கடலோடு போனவர்களும்

செப்டெம்பர் மாதம் சென்மத்துக்கும் ஆறாத ரணங்கள் நிரம்பிய மாதம். காக்க வந்தோம் என்றவர்கள் கதையெல்லாம் பொய் யாக உயிர் கரைய நல்லூர் வீதியெங்கும் விழிகசிய துயர் சுமந்த நாட்களவை.

நாட்கள் ஒவ்வொன்றும் நகர மறுத்து அணுவணுவாய் இருளில் கரைந்த இராட்சதப் பொழுதுகள். இந்தியர்கள் காப்பார்கள் என்ற எங்கள் நம்பிக்கைகள் மீது விழுந்த பேரிடியில் போரொன்றின் வரவை எங்கள் தேசம் எண்ணிக் கொண்டிருந்த நேரம்.

இன்றென்றும் நாளையென்றும் எங்கள் தியாக தீபம் உயிர் மீளும் என்று எஞ்சியிருந்த நம்பிக்கைகள் மீது 26.09.1987 பகல் 10.38 நிமிடத்தோடு எங்கோ மையம் கொண்ட சுறா வளி எங்களில் விழுந்தாற்போல அந்தச் செய்தி காதுகளில் விழுகிறது.

தேசமெங்கும் திலீப நினைவுகளோடு நல் லூர் நோக்கிய மக்கள் நகர்வு அலையலையாய் திரள்கிறது. 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும்' என்ற கனவோடும் 651வது மாவீரராய் வானிலிருந்து தமிழீழத்தைப் பார்ப்பேன் என்றபடி உயிர் நீத்த எங்கள் தியாக தீபத்தின் பேச்சுகள் ஒலித்தபடி.....ஊரெங்கும் அந்த மனிதக்கடவுளின் உரைகள் தான்.அழுகையும் துயரமும் எங்களைத் ஆட்கொண்டிருந்தது.

செப்ரெம்பர் மாதத்துயர் ஆறாது தியாகி திலீபன் நினைவுகளோடும் துயரோடும் எங்கள் தேசம் அழுது முடியாமல் ஒக்ரோபர் பிறந்தும் ஓயாத துயரோடு ஊரெங்கும் திலீப நினைவு. உயிர் உருக நினைவெல்லாம் நல்லூரான் வீதியிலே....கனவாகி நினைவெங்கும் திலீப நினைவு. மறக்கப்பட முடியாத துரோகம் எங்கள் இதயங்களில் எழுதப்பட்டுப் போனது.

தோழரின் நினைவுகளில் தமிழ் ஈழதேசத்தின் நினைவுகளில் திலீபன் என்ற பெயர் எத்தனை யுகங்கள் கடந்தாலும் அழிக்கப்பட முடியாத ரணங்களோடு.....அந்தத் துயர் ஆறாத சுமையோடு அழுதவிழி காயாமல்...

## என் குரவகப் பதிவுகள்

மீட்டுபவர்: சுதந்திரா

அப்படித்தான் அந்த ஒக்ரோபர் வானொலிச் செய்திகளில் தலைப்பாக 'குமரப்பா, புலேந் திரன் தளபதிகள் உட்பட பன்னிரு புலிகள் பலாலியில் கைதிகளாய்.... துயர் தரும் செய்திகளே எங்கள் காதுகளை நிறைத்திருக்க 'கொழும்புக்கு ஏத்தப்போகினமாம்' அந்தச் செய்தியும் அடுத்து வந்து சேர தேசம் தனது வழமையை இழந்து போனது. 'பேச்சுவார்த்தை நடக்கிறதாம் பிடிபட்டவையள் வருவினமாம்' பேசிக்கொண்டிருந்தார்கள்.

அதுவொரு மாலை நேரம் 'பன்னிருவர் பலாலியிலே சயனைட் அருந்தி வீரமரணம்' எதிர்பார்க்காத துயர் சொல்லிச் செய்தி தேசமெங்கும் பரவுகிறது.

'பிடிட்டுவை வருவினம்' சொன்னவர்கள் வார்த்தைகள் பொய்யாகி..... பலாலி இராணுவ வாசலில் அடுத்த நாள் மதிய வெய்யில் சுட்டெரிக்க 'எங்கள் தோழர்களைத் திருப்பித்தா' என்ற கோசங்கள். இந்தியப்படைகளின் எதிர்ப்புகளையெல்லாம் மீறி வழிமறிப்பும் வேண்டுதலும். காந்திய தேசத்தார் சொன்னதெல்லாம் பொய்யென்று புரிந்தும் இருந்த மீத நம்பிக்கைகள் மீதும் இடிவிழுத்திப் போனார்கள்.

கடலில் போனவர்கள் ஆயர்கடவைப் பிள்ளையார் வாசலில் மலர்ப்படுக்கையில். காசியானந்தனின் கவிதைகளில் துயரம் கசிய இதயங்கள் துயரில் தோய்ந்தபடி.... அஞ்சலிகள் மலர் வளையம் மாலைகளும் பன்னிருவர் பாதங்களில் அஞ்சலிக்க பார்வைகளால் மேய்ந்தபடி பலாலி வீதியில் ஓடித்திரிந்த கவசவாகனங்களில் கசந்த பார்வைகள் இன்றும் கசக்கிறது....

மனதை கனப்படுத்திய அன்றைய அஞ்சலி நிகழ்வில் தளபதிகள் குமரப்பா , புலேந் திரனின் துணைகளின் அழுகையே இன்றும் அறுபடாத நினைவாக நெஞ்சில் கனக்கிறது.

மணமாகிச் சிலமாதங்களேயான அந்தத் தளபதிகளின் துணைகளின் துயர் முட்டிய குரல்கள், உற்றார், உறவுகள், நண்பர்கள் போராளிகள் என ஆயர்கடவை வாசலில் அவர்களின் குரல்கள்தான்.

கடவுளரே கல்லாயிருக்க எங்கள் கதிரவராய் இருந்த குரல்கள் குப்பியில் முடிந்து மாவீரங்களாய் தீருவில் நினைவாலயத்தில் நிமிர்ந்த நினைவுகளில் ஞாபகங்கள் கரைகிறது.

தீருவிலில் தீயான திருமுகங்கள் நினை வுகள் எழுதிய நாள். ஒக்ரோபர் என்றாலே இவர்களை நினைக்காத இதயங்கள் இல்லை யிங்கு. சாவில் வாழ்வெய்திய சந்தனங்கள் சாகடிக்கப்பட்ட சாகாத நாட்களிவை நேற்றாய் நினைவெல்லாம்.....விழி நீர் மாலை கோர்த்து ஆயார் கடவை வாசலில் அவர்கள் படுத்திருக்க அழுத நாட்களவை....

பலாலி வாசலில் பகைவர் குகையமைத்த தமிழன் நிலமதிலே உச்சிவெயில் சுட்டெரிக்க 'எங்கள் தோழர்களை எங்களிடம் திருப்பித்தா' எத்தனை குரல்களின் அதிர்வுகள்.....! எல்லாமே நினைவெழுந்து நினைவெழுந்து நெஞ்சு கனக்கிறது நினைவு சுடுகிறது.

சுதுமலையில் உரைதந்த எரிமலைகள் மூச்ச ழித்து மலர்களின் நடுவே தோழர் , தோழியரின் இதய நாளங்களில் விடுதலைத் தீயெரித்துத் தமிழ் வீடெங்கும் ஒளிகொடுத்த அற்புதங்கள்.

### காக்க வந்தவர்கள் எங்கள் வீடுகளில் வீதிகளில் கொன்று போட்ட உயிர்கள் தான் எத்தனை? இந்தியரின் வல்லாதிக்க வெறிக்குப் பலியாகி வீழ்ந்தவர்கள் தான் எத்தனை பேர்?

ஒக்ரோபர் பத்து விடியல் காலிக்க முதல் ஊரெங்கும் போரின் ஆரம்பம் பற்றிய அறிதல் கள். இந்திய வல்லாதிக்கப் வல்லரசப் படை களோடு தமிழீழம் என்ற சிறிய தேசம் தமிழீழத்தையும் தமிழினத்தையும் காக்கும் போரில் களத்தில். இந்திய யுத்த டாங்கி களும் படைகளும் எங்கள் தேசத்தின் புதல்வர் களோடு போர் செய்ய வல்லரசை எதிர்த்து வரிப்புலிகள் களமாடும் செய்தி நிலமெங்கும் கேட்கிறது.

காக்க வந்தவர்கள் எங்கள் வீடுகளில் வீதிகளில் கொன்று போட்ட உயிர்களின் உறவுகளின் துயர்கள் தொடராக....சிறுவரும் புலியென்று பலிகொண்ட இந்தியரின் வல்லாதிக்க வெறியில் எங்கள் மண்ணில் 10ஆயிரத்துக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் கொலையுண்டு போனார்கள்.

அழிந்தார் தமிழர் என்று ஆணவமாய் நின்ற வர்கள் ஆணவத்தில் அடியாக தமிழர் சேனை தன்னைப் புதுப்பித்துக் கொண்டு நிமிர்ந்த போது கடலேறி வந்த பேய்களை கலங்கள் அள்ளிப்போய் காலங்களும் கரைந்து விட்டன. இன்னும் காலம் தந்த துயர் ஆறாத வடுவாக.... ஒக்ரோபர் ஒவ்வொன்றும் இந்தியரின் துரோகம் சொல்லும் மாதமாக.....



பலதும் பத்தும்

# மூளைப் புற்று நோய் வேண்டுமா?



செல்போனை தொடர்ந்து உபயோகித்தால் மூளையில் புற்று நோய் ஏற்படக்கூடிய ஆபத்து இருப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. சுவீடன் நாட்டின் உரிஃப்ரோ நகரில் உள்ள பல்கலைக்கழக மருத்துவமனை பேராசிரியர் லின்னார்ட் ஹார்டெல் மற்றும் உமியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் கிஜில் ஹான்சன் மில்ட் ஆகியோர் இணைந்து நடத்திய ஆய்வில் இந்த உண்மை தெரியவந்துள்ளது.

இவர்களின் ஆராய்ச்சியில், 10 ஆண்டு தொடர்ந்து செல்போன் பயன்படுத்தும் நபர்களுக்கு, மூளைப் புற்றுநோய் தாக்கும் வாய்ப்பு மற்றவர்களை விட 2 மடங்கு அதிகம் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

தினசரி ஒரு மணி நேரத்திற்கும் அதிகமாக செல்போன் பயன்படுத்துபவர்கள், எந்த காதில் செல்போனை வைத்து பேசுகிறார்களோ, அப்பகுதி மூளையில் கட்டி ஏற்படுவதற்கான ஆபத்து உள்ளதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

சிறு குழந்தைகள் செல்போன் பயன்படுத்துவதால் மூளைப்புற்று நோய் வரும் ஆபத்து மிகவும் அதிகமாக இருக்கிறது என தங்கள் ஆய்வில் லின்னார்ட் மற்றும் கிஜில் தெரிவித்துள்ளனர்

என்ரை பிள்ளையும் போன் கதைக்கும் எண்டு இனியும் பெருமை பேசப் போறியளோ?

# கறிக்கு மாத்திரமா கறிவேப்பிலை ?



உணவின் வாசனையை அதிகரிக்கத்தான் கறிவேப்பிலை பயன்படுகிறது என்று பலர் கருதுகின்றனர். இதனால்தான் சாப்பிடும்போது உணவில் கிடக்கும் கறிவேப்பிலையை எடுத்து கீழே போட்டு விடுகிறோம். ஆனால் கறிவேப்பிலையில் பல்வேறு மருத்துவ குணங்கள் இருப்பதாக சமீபத்திய ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கறிவேப்பிலையின் தாவரப்பெயர் முரையா கோய்னிஜா. இது ருட்டேசி என்ற தாவரக் குடும்பத்தை சேர்ந்தது. கறிவேப்பிலையில் விட்டமின் ஏ, பி, சி, கால்சியம் போன்றவைக்ள் உள்ளன. மேலும் கறிவேப்பிலையில் பல அமினோ அமிலங்கள் உள்ளது. இவைகள் தான் கறிவேப்பிலைக்கு இனிய மணத்தை தருகிறது. பல மருத்துவ குணங்களையும் வெளிப்படுத்துகிறது. கறிவேப்பிலை புற்றுநோயை ஆரம்பித்திலேயே கொல்லும் ஆற்றல் உடையது என்பதை அண்மையில் அவுஸ்திரேலிய உணவியல் அறிஞர்கள் கண்டறிந்துள்ளனர்.

இது புற்றுநோய், இதய நோய்களை குறைக்கும் ஆற்றல் கொண்டது. மேலும் கறிவேப்பிலையால் ஞாபக சக்தி எளிதில் கிடைக்கிறது என்றும் கண்டறியப்பட்டுள்ளது.

சாதாரணமாக 100 கிராம் கறிவேப்பிலையை அரைத்து சாற்றை எடுத்து 100 கிராம் தேங்காய் எண்ணையில் கலந்து இதமான சூட்டில் ஈரப்பதம் நீங்கும் வரை காய்ச்சி தினசரி தலைக்கு தேய்த்து வந்தால் உடல் உஷ்ணம் மங்கும். பரம்பரை நரை வராது. கண்பார்வை குறைவு ஏற்படாது. கறிவேப்பிலையை அரைத்து சாப்பிட்டால் நுரையீரல், இருதய சம்பந்தப்பட்ட ரத்த சம்பந்தப்பட்ட நோய்கள் வருவது குறையும் என்கிறது இந்நிறுவனம்.

இதுதவிர நீரிழிவு நோயாளிகள் காலையில் 10 கறிவேப்பிலை இலையையும், மாலையில் 10 இலையையும் பறித்த உடனேயே வாயில் போட்டு மென்று சாற்றை விழுங்கி வந்தால் மாத்திரை சாப்பிடும் அளவை பாதியாக குறைத்து விடலாம் என்கிறார்கள் மருத்துவர்கள்.

தினசரி வெறும் வயிற்றில் கறிவேப்பிலை இலையை 3 மாதங்கள் சாப்பிட்டு வந்தால் நீரிழிவால் உடல் கனமாவது குறைக்கப்படும். சிறுநீரில் சர்க்கரை வெளியேறுவதும் முற்றிலும் தடை செய்யப்படும். கறிவேப்பிலை ரத்தத்தில் இருக்கும் கொழுப்பை குறைக்கவும், அறிவை பெருக்கவும் உதவுகிறது. கறிவேப்பிலையை பச்சையாகவே மென்று தின்றால் குரல் இனிமையாகும். சளியும் குறையும் என்கிறார்கள் மருத்துவர்கள்.

*நன்றி: தமிழ்மொழி.கொம்*

# பேரீரீரீரீய விமானம்



இலகு விமானங்களின் சாகசங்களைக் கண்டு பிரமித்து நிற்கும் உங்களுக்கு ஒருமாறுதலுக்காக கன ரக விமானம் குறித்த செய்தியொன்று.

உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானமான யு380 தன்னுடைய கன்னிப் பறப்பை சிங்கப்பூரிலிருந்து சிட்னிக்கு வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.

மொத்தம் 853 பயணிக்கக் கூடிய இந்த விமானத்தில் அன்றைய தினம் 450 பேர் பயணித்தனர்.

# உலகின் பெரும் பணக்காரர்



இந்தியாவைச் சேர்ந்த பெருந் தொழிலதிபரான திரு. முகேஸ் அம்பானி உலகின் பெரும் பணக்காரராகி இருக்கிறார்.

உலகின் முதல் ஐந்து பெரும் பணக்காரர்கள் பற்றிய விபரம் இதோ.

1.Mukesh Ambani ($63.2 billion)
2. Carlos Slim Helu ($62.2993 billion)
3. William (Bill) Gates ($62.29 billion)
4. Warren Buffett ($55.9 billion)
5. Lakshmi Mittal ($50.9 billion)

விளையாட்டு

# உலகக் கிண்ண றகர்

## இங்கிலாந்தின் சாதனைக் கனவு தகர்ந்தது





உலகக் கிண்ண ரகர் வரலாற்றிலேயே இதுவரை எந்த அணியும் தொடர்ந்து இரண்டு முறை கிண்ணத்தை வென்றதில்லை.

இந்த நிலையை மாற்றிவிடலாம் என்ற கனவுடன் தென்னாபிரிக்காவுடன் இறுதிப் போட்டியில் மோதிய இங்கிலாந்து அணியினர் தென்னாபிரிக்க அணியிடம் 15-6 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வி கண்டதன் மூலம் அவர்களது சாதனைக் கனவும் தவிடுபொடியானது.

20 அணிகள் பங்குபற்றிய இந்தச் சற்றுப் போட்டியில் இங்கிலாந்து அணி பலம் கன்றிய அணியாகவே போட்டித் தொடரின் ஆரம்பத்தில் காணப்பட்டது. முதலாம் சற்று ஆட்டமொன்றில் தென்னாபிரிக்க அணியிடம் 36-0 என்ற புள்ளிகள் அடிப்படையில் படுதோல்வியடைந்திருந்ததும் கறிப்பிடத்தக்கது.

ஆனால் படிப்படியாக மன்னெறிய இங்கிலாந்து அணி காலிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியையும் அரையிறுதிப் போட்டியில் பிரான்ஸ் அணியையும் தோற்கடிதது இறுதிப் போட்டியில் நுழைந்தனர்.

மறுபுறத்திலே ஆரம்பம் முதலே சிறப்பாக விளையாடிய தென்னாபிரிக்க அணியினர் இறுதிப் போட்டியிலும் திறமையாக விளையாடி வெற்றிக் கிண்ணத்தைப் பெற்று;க கொண்டனர்.



*எத்தனை நாளைக்குத் தான் சுவரையும் மரங்களையும் தேடிக் கொண்டு திரியிறது. நாங்களும் முன்னேற வேண்டாமோ?*

**Tamsons**
Accountancy & Tax Consultancy Ltd.



* Accountancy & Auditing
* Business Start up Advice
* Business Plans & Cash Flow Forecasts
* Personal tax Affairs & Self Assesment
* Company Tax Affairs & Company Tax Return (CT600)
* Preparing VAT, Payroll for the Sole Trader
* Partnership & Limited Companies

Company Formation *
Attending VAT & PAYE visits *
CIS Voucher & Construction *
Industry Services *
Tax Investigations *
Solicitors Accounts *
& Accounts Reports *

65, Southlands Road, Bromley, Kent BR2 9QR
Tel: 020 8313 0800

# அன்ராசபுரம் அவங்கடையோ?

கூத்தபிரான்
ஒரு பேப்பருக்காக

ஆம், திரும்பவும் சொல்கிறேன், அன்ராசபுரம் நாங்கள் நினைக்கிற அளவுக்கு அவங்கடை இல்லை. கொஞ்சம் திரும்பிப் பார்த்தம் எண்டால் நேற்று வரைக்கும் எங்கடையாகவும் இருந்த இடம் இது. அம்பாறை நகரம் எப்படி எங்களவருக்காய் இருந்து சிங்களவருக்காய் போய்விட்டதோ அப்படித்தான் இதுவும்.

இதைச் சொல்வதற்கு தொல்பொருள் ஆய்வும் கல்வெட்டுகளும் எமக்குத் தேவையில்லை. அப்படியெல்லாம் ஆய்ந்து கலாநிதிப் பட்டங்களை சுருட்டிக் கொண்டு பலர் 'பரதேசி'களாக அலைவது வேறுகதை.

'அது அவங்கடை' என்று எங்கள் நேற்றைய தலைவர்கள் எங்களுக்கு பூச்சாண்டி காட்டியிருக்கிறார்கள். எங்களை தூங்க வைத்திருக்கிறார்கள். மெயில் வண்டி மூன்றாம் வகுப்புப் பெட்டியில் நாங்கள் தூங்கிக்கிடக்க உறங்கல் இருக்கைகளில் விழித்திருந்து அவர்கள் சல்லாபம் புரிந்து கும்மாளமடித்திருக்கிறார்கள்.

நள்ளிரவில் அனுராசபுரத்தில் ஏறி 'நகிட்ட பாங்' என்று சிங்களவன் கத்தியதும் திடுக்கிட்டு எழுந்து, எங்களுக்குள் சண்டைபிடித்து எடுத்த கோணர் சீற்றை அவனிடம் பறிகொடுத்து, அஞ்சி ஒடுங்கிப் பயணித்திருக்கிறோம்.

தூங்கிக் கிடந்த தமிழினத்தைத் தட்டி எழுப்பியவர் யார்? என்ற கேள்விக்கு 'அனுராசபுரத்தில் ரயிலேறும் சிங்களச் சகோதரர்கள்' என்று மாமனிதன் 'சிரித்திரன் சுந்தர்' தன் மகுடியார் பதிலில் கூறியிருந்தார்.

இது எவ்வளவு உண்மை?அவர்கள் எங்களைச் சீண்டி எழுப்பி விட்டார்கள். இனித் தூங்க மாட்டோம் தூங்கவும் முடியாது!...

எங்கோ போய் விட்டேன். என்ன சொன்னேன்?அனுராதபுரம் அவங்கடை இல்லை? என்றுதானே! பத்தாம் நூற்றாண்டுச் சோழனை, புத்தம் போதிக்க வந்த தமிழ் நாட்டுத் துறவிகளை ஒருபக்கத்தில் வைத்து விட்டுப் பார்ப்போம்.

## நாங்கள் சுருட்டு விற்கவும் சோத்துக்கடை வைக்கவும் அனுராசபுரத்துக்குப் போக வில்லை.

அனுராசபுர நகராண்மையை நேற்றுவரை சிற்றம்பலம் என்ற தமிழன் நிர்வகித்திருக்கிறான். இன்றைய புனித நகர்முழுவதும் நேற்றுவரை செறிந்து வாழ்ந்திருக்கிறார்கள் தமிழர்கள்.

புராதன சிவாலயத்தில் அங்கப் பிரதிஷ்டை செய்து அருகில் உள்ள வாவியில் தீர்த்தத் திருவிழா நிகழ்த்தியிருக்கிறார்கள்.

எனது பெரியப்பா அங்கேதான் பிறந்தார். சித்தப்பாவுக்கும் மாமாவுக்கும் அனுராசபுரத்தில் மூன்று போக விளைச்சல் தரும் வயல் நிலங்கள் இருந்தன. இன்றைக்கும் எங்களில் பலரிடம் அந்தக் காணி உறுதிகள் கைவசம் உண்டு.

நாங்கள் வடக்கு, கிழக்கில் உறவினரே இல்லாத அனுராசபுரத் தமிழரை1977ஆம் 1983ம்ஆண்டுகளில் ஏதிலிகளாக முகாம்களில் பராமரித்திருக்கிறோம்.

அனுராசபுரம் அவங்கடை என்ற எங்கள் மனப்படத்தை, மனப்பயத்தை அழித்து எழுத வேண்டிய காலம் வந்துவிட்டது.

அனுராசபுரம் அவங்கடை மட்டும் இல்லை. நாங்கள் சுருட்டு விற்கவும் சோத்துக்கடை வைக்கவும் அனுராசபுரத்துக்குப் போக வில்லை.

சிங்களவரைப் போலவே எங்களவரும் -தமிழரும்- அங்கு பிறந்து, வளர்ந்து,கல்வி கற்று உயர் தொழிலாற்றியிருக்கிறார்கள், கணக்குப் பார்த்திருக்கிறார்கள், வழக்குப் பேசியிருக்கிறார்கள், காணி அளந்திருக்கிறார்கள், புதிய நகரையும் புனித நகரையும் நிர்மாணித்திருக்கிறார்கள்,தொடருந்துகளை நெறிப்படுத்தியிருக்கிறார்கள், துருப்பிடித்த அரசயந்திரத்துக்கு மசகிட்டு ஓட வைத்திருக்கிறர்கள்,பிணி தீர்த்திருக்கிறார்கள்.

எங்கள் இன்றைய கத்தோலிக்க ஆயர் ஒருவர் முன்னாளில் அனுராதபுரத்துக் கல்லூரியை நிர்வகித்து எண்ணற்றவர்களுக்கு அறிவூட்டியிருக்கிறார்.

போதாதற்கு அனுராசபுரத்து 'ரத்நாயக்காக்களையும்' 'உக்கு பண்டாக்களையும்' எங்கள் ஊர்களில் கொண்டு வந்து வைத்து உணவூட்டி படிப்பித்திருக்கிறோம்.

இவ்வளவையும் ஏன் சொல்கிறேன்? அகழ்வாய்வு, கல்வெட்டு ஆய்வு தேவையற்ற காலத்தில் நாங்கள் அன்ராசபுரத்தில் வாழ்ந்திருக்கிறோம். நேற்றுவரை அங்கு மனிதர்களாக மானுடப் பண்புடன் நிமிர்ந்து நின்றிருக்கிறோம்.

பின்னர் நாங்கள் தூங்க வைத்து துரத்தப்பட்டிருக்கிறோம். இன்று மீண்டும் விண்ணதிர்வில் விழித்துக் கொண்டு விட்டோம். ஏனென்றால் அன்ராசபுரம் அவங்கடை மட்டுமல்ல.

## இலங்கைக்குத் திருப்பி அனுப்பக் கூடாது.

இலங்கையில் தற்போது நிலவும் பாதுகாப்பற்ற சூழலை ஐரோப்பியமனித உரிமைகள் நீதிமன்றம் கவனத்திற் கொண்டு, இலங்கைதமிழர் எவரையும் இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டாம் என்று பிரித்தானிய அரசுக்கு அறிவுறுத்தல் செய்துள்ளது.

தான் விசாரணை செய்யும் ஒருவருக்கு எதிராக எந்த ஐரோப்பிய நாடென்றாலும் ஒரு முடிவு எடுத்தால் அதற்கு தடை உத்தரவு போட அதற்கு 39வது சட்டப் பிரிவின் கீழ் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியே இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளது

தஞ்சம் கோரல் விண்ணப்பம் நிராகரிக்கப் பட்ட பல இலங்கைத் தமிழரை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், கட்டாயமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பி உள்ளன. இது சம்பந்மாகப் பல முறையீடுகள் ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த முறையீடுகள் விசாரணையில் இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை தமிழர் திருப்பி அனுப்பப் படுதல் தேவையற்ற நடவடிக்கை எனக் கருதுவதால், முதல் கட்ட நடவடிக்கையாக எந்த இலங்கைத் தமிழரையும் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று பிரித்தானிய அரசுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தலின் விளைவாக தஞ்சம் நிராகரிக்கப்பட்டு எல்லா சட்ட வழிமுறைகளும் இழந்த ஒரு இலங்கைத் தமிழரை உள்நாட்டு அலுவலகம் திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்யும் பட்சத்தில் அப்படிப் பட்டவரால் ஐரோப்பிய மனித உரிமை நிதிமன்றத்திற்கு, மனுச் செய்யும் உரிமை உண்டு.

தான் இறுதி அறிவுறுத்தல் வழங்கும்வரை நாடு கடத்தலை அந்த நீதிமன்றால் பின்போட முடியும்.

அதே நேரத்தில் உங்களுக்கு தெரிந்த எவராவது சிறையில் இருக்கும்போதே உள்நாட்டு அலுவலகத்தால் திருப்பி அனுப்பப்பட இருந்தால் admin@ncadc.org.uk என்ற இணையத் தளத்துடன் அவர்சார்பாக நீங்களும் தொடர்பு கொள்ளலாம்.



# கைக்கெட்டாத கைம்மாத்துகள்

அங்கம் 2

கற்பனைத் தொடர்

எழுதுவது: சோழியான்

சுழிபுரம்!

குடிமனைகளும் வயல் வெளிகளும் கோவில் களும் நிறைந்த கிராமம். கூடவே வடபுறத்து எல்லையில் நீல நிறத்தில் வெண்ணிற அலைகளை முட்டி மோதவிட்டு வேடிக்கையாக ஆர்ப்பரிக்கும் பரந்து விரிந்த கடல் வலயம்.

அக்கிராமத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பத்திரகாளி அம்மனின் ஆலயம் மிகவும் பிரபல்யமானது. அவ் ஆலயத்தின் அருகில் வசிக்கும் ஒரு சிறு குழந் தையைக் கேட்டால்கூட, நமசிவாயகம் வீடு எது என்பதைச் சுட்டிக் காட்டிவிடும்.

நமசிவாயகம் மரவேலையில் மிகவும் பிரசித்தமானவர். வீட்டு வேலைகளில் இருந்து கோவில் வாகனங்கள்வரை அவரின் திறமைக்குச் சான்றாகப் பலவற்றை அங்கே காணலாம்.

ஒருகாலத்தில் அவ்வூரில் எவராவது புதுவீடு கட்டுவது என்றால் அவரிடம்தான் வருவார்கள். கதவு, யன்னல், வளை, முகடு என்று குறித்த நேரத்தில் சொன்ன மாதிரியான வேலைகளை நாணயமாக முடித்துக் கொடுத்துத் தனக்கென ஒரு பெயரைத் தக்கவைத்திருந்தார்.

நமசிவாயகத்துக்கு ஐந்து பிள்ளைகள். மூத்தது மூன்றும் பொடியன்கள். மூத்தவன் நடராஜன் தந்தை வழியிலேயே தொழிலைக் கற்று, கூடவே மரவியாபாரமும் செய்கிறான்.

எனினும் நாட்டுப் பிரச்சனைகளின் மத்தியில் எந்தத் தொழிலைத்தான் ஒழுங்காகச் செய்ய முடிகிறது நடராஜனுக்கும் திருமணமாகிக் குடியும்குடித்தனமுமாகத் தனியாகப் போய் விட்டான். ஒரு மகன், ஒரு மகள் என இரண்டு குழந்தைகள். மூன்றாவது சிவராசனின் தம்பி வரதராஜன். அடுத்தது இரண்டும் பெண்கள் - குமுதினி, சாந்தினி.

சிவராசன் அப்போது எஸ்.எஸ்.சி. படித்துக் கொண்டிருந்தான். நமசிவாயகத்துக்கு ஒரு மகனையாவது நன்றாகப் படிப்பித்து உத்தியோகம் பார்க்க வைக்க வேண்டுமென்று தீராத ஆசை.

சிவராசனும் வீட்டில் உள்ளவர்களிலும் பார்க்க கல்வியில் கெட்டிக்காரன்தான். அதனால் அவனின் படிப்பிற்கு இடையூறாகிவிடுமோ என்ற எண்ணத்தில் சிவராசனை மர வேலையில் ஈடுபடுத்தவில்லை. தன்னுடைய ஆசையை அவன்மூலமாக நிறைவேற்ற முடியும் என உறுதியாக நம்பினார். கல்விக்காக சிவராசன் கேட்டவற்றை எல்லாம் வாங்கிக் கொடுத்தார். நடராஜன்தான் அப்போது நமசிவாயகத்துக்கு உதவியாக இருந்து வேலை பழகினான்.

சிவராசனும் எஸ். எஸ். சி. வரை ஒழுங்காகத்தான் கல்வி கற்றான். அதன் பின்னர் தான் நண்பர், சினிமா என்று வாலிப வயதின் துடுக்குத்தனங்கள் அவனையும் பற்றிக் கொண்டன.

அப்போது 'மூன்று முடிச்சு' என்ற படம் வந்தாலும் வந்தது. ரஜனி ஸ்டைலில் சிகரட்டைத் தூக்கிப் போட்டு உதட்டால் கவ்விப் பிடித்ததில் ஏதோ சாதனை செய்து விட்டதாகக் குதூகலம் அடைந்ததில் சிவராசனுக்குப் புகைப் பழக்கமும் தொற்றிக் கொண்டது.

மீசை அரும்பிய பருவம். கூட்டாளிகளில் மனோகரன் என்பவன் அவனுடன் மிகவும் ஒட்டு. தந்தையிடம் ரியூசனுக்குப் போக வேண்டுமெண்டு அடம்பிடித்துப் புத்தம்புதிய பச்சை நிறத்தில் ஏசியா சைக்கிள் ஒன்று வாங்கிக் கொண்டான். அப்படி ஒரு 'ஏசியா' சைக்கிள் மனோகரனிடமும் இருந்தது.

'சிவா! நாளைக்கு நுணசைக் கோவில் தேர். வாறாய்தானே?' எனக் கேட்டான் மனோகரன்.

மாதகலில் நெற்கதிர்கள் புதுமணப் பெண்ணாகித் தலைசாய்க்கும் வயல்களின் நடுவே கம்பீரமாக அமைந்திருந்தது நுணசை முருகன் ஆலயம். நுணசையில் தேர்த்திருவிழா என்றால் பல்லாயிரக்கணக்கான மக்கள் நாலா புறமும் இருந்து வந்து குழுமுவார்கள். விதம் விதமான காவடிகள் வரும். அதற்கும் மேலாக அவர்கள் எதிர்பார்க்கும் பாவாடைக் கூட்டங்கள் காலில் கொலுசு குலுங்க ஓடியாடித் திரியும். அவர்களுக்குப் பின்னால் சென்று, கூட்டத்தோடு கூட்டமாக வளையல் கடைகளுள் முட்டி மோதுவதில் நெஞ்சம் இனம்புரியாத உணர்வுகளின் தாக்கத்தில் குறுகுறுக்கும். அந்தக் குறுகுறுப்பில் திமிறிப் பிறக்கும் ஆனந்தமே அலாதி ஆனந்தம்தான்.

'என்னடா சிவா! நான் கேட்டுக் கொண்டிருக்கிறன். நீ என்னெண்டால் என்னத்தையோ பிடிக்கப் போறவன்போலை யோசிச்சுக் கொண்டிருக்கிறாய்!'

'நுணசைத் தேர் எண்டால் சும்மாவே? எனக்கும் வாறத்துக்கு ஆசைதான். ஆனா....'

'என்னடா ஆனா.... ஆவன்னா....'

'வெறுங்கையோடை எப்படியடா வாறது? செலவுக்குக் காசு வேணுமெல்லே?!'

'வீட்டிலை கேட்டுப் பாரன்....'

'அப்பரிட்டைக் கேட்டால் முறையாய் ஏச்சுத்தான் விழும். அடுத்த வருசமும் தேர் பார்க்கலாம். இப்ப சோதினை வருது. படி எண்டு துள்ளுவார்.'

'அப்பரை விடு. எல்லா அப்பர்மாரும் இப்பிடித்தான். தங்கடை இளமைக் காலத்தை மறந்து கதைப்பினம். உன்ரை அம்மாவிட்டைக் கொஞ்சம் ஐஸ் வைச்சுப் பாரன். அவசரமாய் ஒரு புத்தகம் வாங்கவேணுமெண்டு சொல்லிக் கேள். இதைக்கூட நான் சொல்லித் தர வேண்டிக் கிடக்கு.'

'ஊதுபத்திக்கும் காசு வேணும்....'

'ஊதுபத்தியோ.... அட ஓமோம்.... பிறிஸ்டல் டபிள் பைக்கற் வாங்க வேணும். தேவன், குமார், நந்தன் எல்லாரும் வாறாங்கள். எல்லாம் காய்ஞ்சு வறண்ட பட்டாளங்கள். நீயும் நானும்தான் செலவழிக்க வேணும். எதுக்கும் பாத்துக் கொண்டு வா....' பணத்துக்குப் பாதை காட்டினான் மனோகரன்.

'அப்ப எத்தினை மணிக்கு எங்கையிருந்து வெளிக்கிடுறது?'

'சோதர் குஞ்சாச்சிவீட்டடிக்கு வா. எல்லாரையும் அங்கை தான் வரச் சொல்லியிருக்கிறன். காற்சட்டையோடை படிக்கப்போறன் எண்டு சொல்லிப் போட்டு வா. சோதர் குஞ்சாச்சி வீட்டிலை கந்தசாமி அண்ணற்றை வேட்டியள் இருக்கும். கட்டிக் கொண்டு போகலாம்.'

'அதுவும் நல்ல ஐடியாதான். அப்ப வெள்ளண்ணப் பத்து மணிக்கு வந்தால் காணுந்தானே?!'

'பத்துமணிக்கோ.... நல்ல கதை. எட்டுமணிக்கு அங்கை நில். அப்பிடியே போற வழியிலை சில்லாலைக்கை கள்ளுக் கொஞ்சம் அடிச்சுப் போட்டுப் போனால்தான் உசாராய் இருக்கும். கூட்டத்துக்கை புகுந்து விளையாடலாம்.'

'மனோ, கள்ளடிக்கிறது சரி. மாதகல் ஆக்கள் பொல்லாதவங்கள். கோவிலுக்கை நிதானமில்லாமை என்னவாலும் சேட்டைசெய்தால் சும்மா கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பாக்கமாட்டாங்கள். தேர்ச் சில்லுக்கை போட்டு நசிச்சுப் போடுவாங்கள். கவனம்....'

'ஏண்டா தொட்டதுக்கெல்லாம் பயப்பிடுறாய். அவங்கள் பொல்லாதவங்கள் எண்டால் நாங்கள் சுழிபுரத்தாங்கள்.... நாங்கள் என்ன பெட்டைப்பசங்களே.... எதுக்கும் நாளைக்குச் குஞ்சாச்சி வீட்டை வந்து சேர். ஆனா ஒண்டு.... புத்தக அலுவலை மறந்துபோகாமை கொம்மாட்டை செலவுக்கு வாங்கிக் கொண்டு வா.'

கோவிலுக்குப் போய் நண்பர்களுடன் கும்மாளம் போட, பொய் சொல்லித் தாயை ஏமாற்ற வேண்டியுள்ளதை நினைத்துச் சிவராசனின் மனம் சற்றுச் சங்கடப்பட்டது. என்றாலும் அவனது இளரத்தம் நண்பர்களுடன் சந்தோசமாய் பொழுதைக் கழிக்கப் பொய் கூறுவதில் தவறில்லை என முடிவெடுத்தது.

பொய் உண்மையாகித் தாயை நம்ப வைத்ததற்கு அறிகுறியாக, நமசிவாயகத்தின் மடியிலிருந்து சில தாள்கள் வெளிக் கிளம்பின. மறுநாள் குதூகலத்துடன் சோதர் குஞ்சாச்சியின் வீட்டை அடைந்தான் சிவராசன்.

அங்கே....

சோதர் குஞ்சாச்சியின் வீட்டுமுகப்பை அடைத்தால்போல் ஓங்கிப் படர்ந்து வளர்ந்திருந்த புளியமரத்தடியில் மனோகரன், தேவன், குமார், நந்தன் எல்லோரும் சிவராசனின் வரவிற்காக காத்திருந்தனர்.

'குஞ்சாச்சி.... எணோய்....'

'என்ன அப்புவவை... என்ன கூட்டமாய் நிக்கிறியள்? எந்த வீட்டுக் கூரையைப் பிரிக்கிற யோசினை?'

'குஞ்சாச்சிக்கு எப்ப பாத்தாலும் கிண்டல்தான். நுணசைக்குப் போகப்போறம்....'

'ஓமோம். அதுதான் குமரியளெல்லாம் அள்ளுப்பட்டுக் கொண்டு வயலுக்காலை ஓடுறாளவை. அதுக்கேன் புளியடியிலை நிண்டு மெனக்கெடுகிறியள்.... நேரவழிக்கு வெய்யில் ஏற முந்திப் போங்கோவன் பொடியள்....'

'அதிலை ஒரு சிக்கலணை. கோவிலுக்குப் போக வேணும் எண்டு வீட்டிலை கேட்டால் சண்டைக்கு வருதுகள்.... வீட்டுக்காரரோடை பெரிய வில்லங்கமாய்ப் போச்சு.'

'மெய்யாயோ....?!'

'நாங்கள் என்ன பொய்யே சொல்லுறம்.....?!'

'அப்பா! நுணசைக் கந்தா! இதென்ன கலிகாலமாக் கிடக்குது. கோவிலுக்குப் போக வேண்டாமெண்டு சொல்லீனமோ? கலிகாலம் முத்திப்போச்சடா தம்பியவை. நான் போய் ஒருக்கா உங்கடை கோத்தையவையைக் கேட்டுக் கொண்டு வரட்டே....'

அவசரப்பட்டுத் தடுத்தான் நந்தன்.

'குஞ்சாச்சி.... சும்மா கிடக்கிற சங்கை ஊதிக் கெடுக்காதையணை. பேந்து நாங்கள் தேருக்குப் போன மாதிரித்தான்.'

'அப்ப தேருக்குப் போகேலையே?'

'நீங்கள் இருக்கேக்கை எங்களுக்கென்ன கவலை. குஞ்சாச்சி! இப்ப நீங்கள்தான் எங்களுக்கு உதவி செய்ய வேணும்...'

'என்ன செலவுக்கு காசு கீசு வேணுமே? ஐயோ தம்பியவை, இன்னும் அந்தாள் காசனுப்பேல்லை. அரிசி, மா, சீனி எண்டு கந்தையா கடைக் கொப்பியிலையும் கடன் ஏறிக்கொண்டு போகுது. கோழிமுட்டை மூண்டு இருக்கு தாறன். கந்தையான்ரை கடையிலை குடுத்து ஏதாலும் காசு வாங்கிக்கொண்டு போங்கோவன்....'

என்னதான் இருந்தாலும் சோதர் குஞ்சாச்சியின் மனமே தங்கம்தான். எவர் கேட்டாலும் இல்லை என்று கூறாமல் உள்ளதைப் பகிர்ந்து கொடுத்து உதவும் குணம்.

'குஞ்சாச்சி! எங்களுக்குக் காசு தேவையில்லை. கோவிலுக்குக் காற்சட்டையோடை போறது வடிவாயே இருக்கும். கந்தசாமி அண்ணற்றை வேட்டி இருந்தால் தாங்கோவன். கட்டிப் போட்டுக் கொண்டு வந்து தாறம்....'

'தாறத்திலை ஒண்டுமில்லை. வேட்டிபவுத்திரம். பிசக்கினாலும் பறுவாயில்லை. தோய்ச்சுப் போடலாம். கிழிச்சுப் போடாதையுங்கோ. பேந்து அந்தாளோடை காலந்தள்ளேலாது. ஆரைக் கேட்டடி குடுத்தனி எண்டு நாய் மாதிரிக் குரைக்கும்....'

சோதர் அவர்களுக்குக் குஞ்சாச்சி. அவளின் கணவர் அண்ணர். என்ன உறவு முறையோ? - ஊர் அவ்வாறு தான் அழைத்தது. அவர்களும் அழைத்தார்கள்.

அகலக் கரைவைத்த நாலுமுழப் பருத்தி வேட்டிகளில் பக்திமான்களாக ஐவரும் சைக்கிள்களை எடுத்துக்கொண்டு வெளியேற ஆயத்தமானபோது, தேவன் தலையைச் சொறிந்தான்.

'குஞ்சாச்சி....'

'என்னடா....'

'அந்த முட்டை மூண்டு....'

(தொடரும்)




Habib Bank AG Zurich (Tooting)
Maestro Card

You can top-up your card with cash or cheque in any of our branches, any post office, or at paypoint joints. Or On-line by credit or debit card.

**Call us on 0800 1 601 701 or visit our site www.hbz-money.com**

This card is issued on behalf of Prepay Technologies Ltd. by Clydesdalebank Plc pursuant to licence by MasterCard International Incorporated

Authorised and regulated by the Financial Services Authority

*யாவருக்கும் ஒரு நற்செய்தி!*

வந்து விட்டது HBZ e-money "மய்ஸ்றோக் கார்ட்"

முன் கூட்டியே முதலீடு செய்த உங்கள் வைப்புப் பணத்தை நல்ல முறையில் பாதுகாத்து மேற்பாத்து உங்கள் தேவைக்கு எங்கை எங்கையே எப்ப எப்பவோ பாவிப்பதற்கு உங்கள் வசதிப்படி செலவு செய்யும் வழிவகுக்கும் அருமையான காட் (Prepaid)

இதின் செய்முறை நீங்கள் ஏற்கனவே பாவித்து பழகிய ரெலிபோன் காட் போன்றது.

நாடு முழுவதிலும் உள்ள 39000 இடங்களிலும், உங்கள் யாங் கணக்கில் இருந்து முதலீடு செய்யலாம்.

HBZ e-money "மய்ஸ்றோக் கார்ட்" chip and pin கட்டுப்பாட்டு முறையில் வலு பாதுகாப்புடன் செயல் பண்ணப்படுகிறது.

உலகில் எங்கு எங்கோ "மய்ஸ்றோக் கார்ட்" ஏற்று கொள்ளப்படும் இடங்களில் எல்லாம் நீங்கள் பாவிக்கலாம்.

நீங்கள் HBZ e-money "மய்ஸ்றோக் கார்ட்" விண்ணப்பிக்க UK உள்ள எங்கள் கிளைகளில் இன்றே விண்ணப்பிக்கலாம்.

கச்சிதமாய் கையாண்டால் காசைப்பெருக்கலாம்

காசைப் பெருக்கிவிட்டால் கடவுளையும் காணலாம்.......

# TILMAX®

*Quality Comes First*

EPOS SYSTEMS

## We are here to support your business



CASIO QT-6000 | XN 900 | AURES ODYSSE | WIRELESS WAITRESSING | RETAIL SOLUTIONS



| 130 CR | CASIO TE-M80 | CASIO TE-100 | CASIO TE-2000 | CASIO TE-2200 | CASIO QT-2100 | CASIO TE-800F |
|---|---|---|---|---|---|---|
| £79 | £159 | £249 | £289 | £549 including scanner | £999 | £1,099 |

**24/7 SUPPLY AND INSTALL SERVICE, MAINTAIN ALL MAKES OF EPOS & PRINTERS**

**ORDEMAN WIRELESS WAITRESSING**

**FREE DEMONSTRATION AND CONSULTATION ON YOUR REQUEST**

**ALL KINDS OF CATERING EQUIPMENT AND CHILLED DISPLAYS**

**INSTALMENT/RENTAL FACILITIES AVAILABLE(SUBJECT TO STATUS)**





அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்



£179



# 0208 55 55 055 / 07852 184 510

**WWW.TILMAX.CO.UK 328 HIGH ROAD LEYTONSTONE, LONDON E11 3HS**

# பறக்கும் தட்டுக்கள்
## (Flying Saucers)



பாகம் 10

அமெரிக்காவின் நியுமெக்சிக்கோ நகரசபையின் கீழ் உள்ள பேர்மிங்ரன் நகரத்திலிருந்து வெளியாகும் பேர்மிங்ரன் டெய்லி ரைம் நாளிதளானது பங்குனி மாதம் 18ம் திகதி 1950ஆம் ஆண்டு (Farmington Daily Time March 18 1950) வெளியிட்ட செய்தியில் நியுமெக்சிக்கோவில் வசிக்கும் அரைவாசிக்கும் மேற்பட்ட மக்கள் ஐந்நூறுக்கும் மேற்பட்ட பறக்கும் தட்டுக்கள் மிக வேகமாகச் சென்றன என்று படங்களுடன் வெளியிட்டிருந்தமையை பொய் எனக்கூறி ஒதுக்கிவிட முடியாது.

அத்துடன் பல விமானிகள். கணவன் மனைவிமார்கள். மற்றும் பலர் வெளியிட்ட கருத்துக்களை இங்கு நான் உங்கள்முன் சமர்ப்பிக்கவில்லை காரணம் இவை போதிய ஆதாரங்களுடன் அமைந்திருக்காமையே ஆகும். இவற்றைத்தகுந்த ஆதாரங்களுடன் உங்கள் முன் சமர்ப்பிப்பதே எனது நோக்கம்.

மே மாதம் பதினோராம் திகதி 1950ல் எடுக்கப்பட்ட இரண்டு பிரபல்யமான பறக்கும் தட்டின் படத்தையே நீண்ட நாட்களாக இப்பறக்கும் தட்டுக்களினுடைய ஆராய்ச்சிக்கு பயன்படுத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து ஒருவர் கூறும் ஆதாரத்தைப் பாருங்கள்.

இத்தாலி நாட்டிலே வெர்ஸ் எனும் இடத்திலே புருனோ பெக்சினி என்பவர் தோட்டத்தில் வேலை செய்துவிட்டு திரும்பி வீடு சென்றபோது திடீரென வட்டவடிவான பொருள் நின்றதைக்கண்டு திகைப்படைந்தார். அதிலிருந்து ஒருவர் இறங்கி வந்து அதைத்திருத்தும் வேலையில் ஈடுபட்டார். அம்மனிதர் கட்டையாகவும் வெள்ளை நிற உடையையும் வெள்ளைத் தலைக்கவசத்தையும் அணிந்திருந்ததாகவும் மேலும் மூன்று பேர் அவர்களுடன் நின்றிருந்ததையும் கண்டார்.

அவர்களைக்கண்ட புருனோ பெக்சினி பயந்து ஓடினார் அப்போது அம்மனிதர்கள் புருனோ ஓடிய திசையை நோக்கி ஒருவகை ஒளியைப்பாய்ச்சியதனால் அவர் மயங்கி வீழ்ந்தார். பின் அவர் எழுந்து பார்த்த போது அப்பொருள் அங்கிருக்கவில்லை.

இதைக்கூட அவரின் கற்பனை எனக்கூற முடியாது. இத்தகவலை Ezio bemardini excerpt from 1987 no-04 தெரிவிக்கின்றது.

சாதாரண மக்கள் மட்டுமல்ல இராணுவ வீரர்களே இப்பறக்கும் தட்டுக்களைக் கண்டதாக கூறியிருப்பதானது. இவை பொய் எனக்கூறுபவர்களுக்கு ஒரு சவாலாக அமையும் எனநான் நினைக்கின்றேன்.

நான் முதன் முதலில் இப்பறக்கும் தட்டுகள் பற்றிப் படித்திருந்த போது அவை பொய் எனவே கூறிக்கேலிசெய்தேன். பின் இதுபற்றி இணையத்தளம் ஒன்றில் காணப்பட்ட செய்தியை அடுத்து இவை உண்மையாகவே உண்டா? என்ற வினாவுடன் தேடல்களை ஆரம்பித்து தேடிய போது பல அதிர்ச்சியூட்டும் உண்மைத்தகவல்கள் கிடைத்தன.

அத்தகவலை நீங்களும் அறிந்து கொள்ளும் முகமாக இத்தகவல்களைத் தொடராக எழுதவேண்டும் என்ற ஆவல் எனக்குள் உந்த இத்தொடரை எழுத ஆரம்பித்தேன். அது எனக்கு மகிழ்ச்சியே.

1951களில் கொரிய யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அங்கும் இங்கும் தட்டுப் போன்ற பொருள் செம்மஞ்சள் நிறத்தில் தென்பட்டு பின் நீலம் பச்சை நிறங்களில் மாறி பலதடவைகள் பறந்ததைக்கண்டு கொரிய இராணுவ வீரர்கள் அதன் மீது ரொக்கட் தாக்குதல் மேற்கொண்டனர் அப்போது குண்டடிபட்டது போல் 45மூயில் சட்டெனக்கீழிறங்கி பின் மேலெழுந்து மாயமாய் மறைந்தது. எனத்தெரிவித்தனர்.

# விண்வெளி விநோதம்

எழுதுவது: அ. மயூரன்

அதேபோல்தான் தன்சானியாவில் கிளிமஞ்சதாரோ மலையருகில் கிழக்காபிரிக்க பயணிகள் விமானம் ஒன்று பயணிகளுடன் பறந்து கொண்டிருந்த போது அப்பறக்கும் தட்டுக்களைக் கண்டதாகவும் இதனை ஞாபகார்த்தப் படுத்த 1964ம் ஆண்டு ஆவணப்படமாக்கி முதன்முதலில் படமாக்கி வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பூமியில் வாழ்கின்ற மனிதன் என்ன செய்கின்றான். என்ன நினைக்கின்றான். என்ன செய்யப்போகின்றான் என்றெல்லாம் கவலைப்படாமல் இப்படி வேற்றுக்கிரக மனிதன் அவ்வப்போது பூமியின் பல பாகங்களில் தென்பட்டுக்கொண்டே இருக்கிறான். இதைத்தடுக்கும் சக்தி இன்னமும் நமக்கு இல்லை என்பதே உண்மை. இது நமது அறிவியலில் உள்ள பஞ்சத்தையே காட்டுகின்றது என்றே சொல்லலாம்.

விண்வெளியில் பயணம் செய்த விண்வெளி வீரர்கள் முதல் சாதாரண கிராமப் புறங்களில் வாழும் பாமர விவசாயிகள் வரை பறக்கும்தட்டுக்களைப் பார்த்திருக்கின்றார்கள். அத்துடன் வேற்றுக்கிரக மனிதனின் ஆராய்ச்சிக்கு உட்பட்டு பூமியில் வாழும் மனிதர்களை கண்டு பிடித்து நம் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சிகள்செய்து. அதன்மூலம் தாங்கள் கற்றுக்கொண்ட உண்மைகளைப் புத்தகங்களாக அவ்வப்போது வெளியிட்டுக்கொணடே இருக்கின்றனர்.

இவ்வாறு மக்கள் கண்டதை, நூலாசிரியர்கள் நூல்களாக வெளியிட்டதை, வெறும் வறட்டுக் கற்பனைப் பொய் என நாம் சொல்வதும் பறக்கும் தட்டு என்று ஒன்று உண்மையில் இல்லை என விதண்டாவாதம் செய்வதும் நமது அறியாமையின் கண்மூடித்தனமான மனோபாவத்தையே காட்டுகின்றது.

வேற்றுக்கிரக வாசிகள், பறக்கும்தட்டுக்கள், என்று எதுவுமே இல்லை எனக்கூறுபவர்களிடம் நான் கேட்கும் வினா ஒன்றே. இல்லாத ஒன்றைப்பற்றி ஆராய்வதற்கு ஏன் அமெரிக்க மற்றும் ரஷ்ய அரசாங்கங்கள் பல கோடிக்கணக்கான டொலர்களைச் செலவழிப்பதோடு ஏராளமான மனித வலுக்களையும் பொருட்களையும் பயன்படுத்துகின்றன? இதனுடைய அவசியம் என்ன? என்பதே!

*- தொடரும்*

# போதைப் பொருளை ஒழிப்போம்

**மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

மனிதன் தானாகவே விரும்பி உபயோகித்து தன் ஆயுளைக் குறைப்பதற்கு போதைப் பொருள்களை விடத் திறமையாகச் செயற்படக்கூடிய வேறொன்றைக் கண்டு கொள்வது கடினம். வீரியம் குறைந்த சில போதைப் பொருள்களே ஆபத்தனவையாகும்போது வீரியம் கூடிய பொருட்கள் என்ன வெல்வாம் செய்யுமோ? எடுத்துக்காட்டாக கனபிஸ் என்னும் கஞ்சாவைப் பார்ப்போம். இது பி தர போதைப் பொருளாக இருந்தது. இதனால் பாதிப்பு குறைவு என்று 2004ல் இதைச் சீ தரத்திற்கு குறைத்து விட்டார்கள். வைத்திய நிபுணர்கள் அறிக்கைகளைப் பார்த்தால் இது ஒரு ஆபத்தான பொருளாகவே உள்ளது. மனநிலை பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களில் பலர் கனபிஸ் புகைப்பவர்களாய் உள்ளனராம்.. மனநிலையை மட்டும் பாதிப்பதோடு நின்றுவிடாது காலப்போக்கில் சுவாசப் பையையும் பாதிக்குமாம்.

இன்று பலவகைப் போதைப் பொருள்களின் பெயர்கள் அடிப்பட்டாலும் காலம் காலமாக செடிகளிலும் மரங்களிலும் இருந்து பெறப்பட்ட நான்கு வகைப் போதை மருந்துகளே இவை எல்லாவற்றினதும் மூலாதாரம். அபின், கஞ்சா, கொக்கேயின் ஆகிய மூன்று வகையுடனும் மாயத் தோற்றம் அல்லது இல்பொருள் தோற்றம் ஏற்படுத்த வல்ல ஒருவகைக் காளானும் கள்ளிச் செடியும் இவற்றுள் அடங்கும். எல்லாமே வைத்தியத் துறையால் உபயோகிக்கப்படும் பொருள்கள். 20 மில்லிக் கிராம் வரைதான் அவை மருந்து. அவற்றையே ஐயாயிரம் மில்லிக் கிராம் அளவிற்கு கூட்டி உபயோகித்தால் அவை என்னவாகவும் மாறலாம்.

அபின் செடியின் இலைகளை அவித்து ஆப்கானிஸ்தானில் சிறு பிள்ளைகளின் வயிறுக் கோளாறுகளுக்கு கை மருந்தாக கொடுக்கிறார்கள். இச்செடியின் காயிலிருந்து பெறப்படும் தாவரப்பாலில் இருந்துதான் அபின் பெறப்படுகிறது. அபினிலிருந்துதான் போதைப் பொருள்களிலேயே வீரியம் கூடிய மோபினும் அதன் மறுவடிவான ஹேரோயினும் பெறப்படுகிறது.

கொக்கேயின் ஒருவகை கொக்கோ இலையிலிருந்து பெறப்படும் ஒரு அல்கலயிட் தூள். பொலிவியா ஈகுவடொர் ஆகிய நாடுகளில் காலம்காலமாக செவ்விந்தியர் வேலைப் பழு, பசி, தாகம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த சுண்ணாம்புடன் கலந்து வெற்றிலைபோல் சப்பியிருக்கிறார்கள்.

கனபிஸ் என்னும் கஞ்சா, வலிப்பு நிவாரணியாக, தொய்வு மருந்தாக, பசி ஊட்டியாக பல்விதத்திலும் வைத்திய தேவைக்கு பயன்பட்டது. முதல் பந்தியில் குறிப்பிட்டது போல் இதுவும் ஆபத்தானது. இதை உண்பதால் ஏற்படும் பாதிப்பு புகைப்பதால் ஏற்படும் பாதிப்பைவிடக் குறைவு.

நான்காவதான மாயத் தோற்றம் ஏற்படுத்தும் காளானும் கள்ளியும் பல காலமாகவே உபயோகத்தில் உள்ளவை. சமய சம்பிரதாயங்களிலும் சம்பந்தப்படுபவை. இப்போ இவற்றிலிருந்து மாயத்தோற்றம் ஏற்படுத்தும் இரசாயனப் போதை மருந்துகள் தயாரிக்கிறார்கள். கஞ்சாவிலிருந்தும் ரிஎச்சி என்னும் வீரியம் கூடிய மாயத் தோற்றம் ஏற்படுத்தும் பொருள் தயாரிக்கப் படுகிறது. கடும் களைப்பு, புலன்களின் குறைபாடு, மூளையின் செயல் குன்று நிலை ஆகியஞ்ற்றால் ஏற்படும் இந்தக் கலுசினேசன் என்னும் மாயத் தோற்றத்தை காசு கொடுத்து, உடல் நலனையும் கெடுத்துப் பெறுகிறார்கள்.

பல துறைகளிலும் தங்கள் ஆற்றலைப் பெருக்க வேண்டிய இளைஞர், யுவதிகள் இது விடயத்தில் மிகவும் அக்கறையுடன் செயற்பட வேண்டும். ஒரு குறிக்கோளை ஏற்படுத்தி தம் வாழ்வை ஆரம்பிக்காதவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையானாலும் அதுபற்றிக் கவலைப்பட மாட்டார்கள். காரணம் அவர்களுக்கு என்று ஒரு குறிக்கோள் உருவாகவில்லைதானே. ஆகையால் சமுதாயத்தைப் பற்றியே கவலைப்பட மாட்டார்கள். போதை மருந்து வாங்க பணம் பெற எதையும் செய்வார்கள். எத்தனையோ போதைக்கு அடிமையான இளம் பெண்கள் மருந்துக்கு பணம் இல்லாத சூழல் ஏற்பட்டதும் போதை மருந்து கடத்தல், விபசாரம் என்று எதையும் செய்யத் துணிந்து விடுகிறார்கள். அப்படி அடிமையானவர்கள் தங்களை ஒரு தனிச் சமூகமாக கருதி எவ்விதக் கட்டுப்பாடும் அற்று வாழ முற்படுகிறார்கள். எயிட்ஸ் நோய் அபாயம்பற்றிக்கூட அவர்களுக்கு அக்கறை இல்லை.

எமது சமுதாய சூழலில் ஒரு வலுவான கலாச்சாரம் உள்ளதால் எமது இளைஞர்களும் யுவதிகளும் இன்னும் பெரிதாக விடுபட்டுச் செல்லவில்லை. ஆனால் புலம் பெயர்ந்து வாழ்வதால் சூழல் மாறிக்கொண்டே போகிறது. கூடிய விழிப்புணர்வு தேவை. போதை மருந்திற்கு எதிரான எமது சிந்தனையும் செயற்பாடும் சமூக மேம்பாட்டுடன் பின்னிப் பிணைய வேண்டும்.

Ness & Co. Immigration Conveyance Licensing Family Disputes & Others.

அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

Quick and prompt exchange and completion of buying or selling your home.

Further representation to avoid detention when signing on at Home Office.

New Premises License for your Off License, Take-away and Fish & Chips Joints and Fried Chicken Shops.

உங்கள் அகதி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு நீண்டகாலம் வேலை செய்திருப்பீர்களாயின் விசா எடுப்பதற்கு appeals and representation on all Tribunal Hearing சம்பந்தமான சேவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

Direct Line: 020 8665 2226

Mr.Thavanesan (Ness)
to discuss in tamil or English

07956 913 164 / 020 8640 5050

38 London Road
Tooting, London, SW17 9HP

# BUYING or SELLING BUSINESS?

**Vision**

அனைவருக்கும் எமது
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

We specialise in selling businesses.

- **We have a professional team of experienced staff.**
- **We can give you a free valuation.**
- **We provide effective marketing of your business.**
- **We treat the sale of your business with confidentiality.**
- **We only bring genuine buyers to you.**
- **We have cash buyers waiting.**

...With **Vision** as your partner,
**Your only job is to continue business as usual.**

## To SELL YOUR BUSINESS IN confidence

CALL **02087727991-2**
Fax **02087727993**

## LIST OF BUSINESSES FOR SALE

01 OFF LICENCE & CONVENIANCE STORE FOR SALE: LOCATION TOOTING. TAKINGS £7000P/A. RENT IS £7500 P/A RATES ARE £1188 18 YEARS LEASE IS AVAILABLE ASKING PRICE £45.999

02 OFF LICENCE CONVENIANCE STORES & NEWS AGENT FOR SALE LOCATION: CLAPHAM PARK ROAD TAKINGS £33.000 (SHOP SALE £11.000 LOTTERY £2.000 BUS PASSES £ 7.500 PAY POINT 15.000 WESTERN UNION £100 P/W) RENT IS £10500P/A RATES ARE £2.500 P/A ANOTHER 18 YEARS LEASE IS AVAILABLE ASKING PRICE £189.000

03 CONVENIANCE STORE & FRUIT & VEG LOCATION BATTERSEA TAKINGS £3000P/W RENT IS 8666 P/A RATES ARE £4000 P/A ANOTHER 3 YEARS LEASE IS LEFT IS RENEWABLE TO ANOTHER 15 YEARS ASKING PRICE £29.000

04 OFF LICENCE & CONVENIANCE STORE WITH THREE BEDROOM FLAT FOR SALE LOCATION MORDEN TAKINGS £ 6.900 RENT IS £22.000 RATES ARE £7.500 ANOTHER 18 YEARS LEASE IS AVAILABLE ASKING PRICE £55.000

05 FISH AND CHIPS SHOP FOR SALE LOCATION WALLINGTON TAKING £3000 P/W RENT IS £9.000 P/A RATES ARE £1300 P/A ASKING PRICE £89.000

06 OFF LICENCE & NEWS AGENT FOR SALE LOCATION GREENFORD TAKINGS £ 6.500 P/W (including lottery) RENT IS £10.000 P/A RATES ARE £2100 P/A ANOTHER 17 YEARS LEASE AVAILABLE ASKING PRICE £35.000

07 FREEHOLDS FOR SALE IN BRIGHTON LOCATED IN VERY BUSY MAIN ROAD IN LANCING WITH THREE BEDROOM HOUSE TAKING £4.000 P/W INCLUDING LOTTERY ASKING PRICE £275.000

08 DRY CLEANERS FOR SALE IN GARRAT LANE WITH THREE BEDROOM HOUSE TAKINGS £1.500 P/W 9 YEARS LEASE IS AVAILABLE RENT IS £ 9.000P/A RATES ARE £2472 P/A AVAILABLE NOW ASKING PRICE £85.000

**Vision** BUSINESS TRANSFER & TRAVEL AGENT

# விவசாயத்துக்கு வீறுதரும் மாரி

ஐப்பசிப் பிறப்பு. அதையொட்டி எழும் தாயக நினைவுகள். அந்த அதிகாலைக் குளிர். ஆலய மணி ஓசைகள். இவற்றிற்கும் மேலாக பெரும்போக நெல் விதைப்பு. வயல்சார்ந்த நிலப்பரப்பு எங்கும் எழும்புகின்ற கலகலப்பு.

ஒட்டி உலர்ந்து பாளம் வெடித்து புல்மூடிக்கிடக்கும் பூமிப்பரப்புக்கு மழை நீரை உள் வாங்கிய மகிழ்வு. செடி கொடி தாவரங்களின் செழிப்பு.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

எங்கெங்கோ இருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் தாண்டி எமது தாயக பூமியின் சீதோசண நிலை நாடி வரும் கூளக்கடா சிறகை போன்ற பறவை இனங்களின் வருகை.

மண்புழு மண்புடையன் போன்ற பாம்புகள், செக்கச்சிவந்த கம்பளப்பூச்சி, சரக்குப்பூச்சி, மட்டத் தேள், புலிநகச்சிலந்தி, கொடுக்கன், பூரான், சக்கரப் பாண்டியன் எனப் படை எடுக்கும் ஆயிரக்கணக்கான யந்துக்களின் அட்டகாசங்கள். எல்லாமே மாரிபிறந்தால் வீரியம் பெறும் ஊர்வனதானே.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக என் வாழ்வியல் பருவம் கரைந்த வன்னிப்புற கிளிநொச்சி நிலப்பரப்பு. வயலும் வயல் சார்ந்ததுமான நிலம். கிளிநொச்சி மாவட்டத்தின் அறுநூற்றி முப்பத்துநாலு சதுர மைல் நிலப்பரப்பிலும் மூன்றில் ஒரு பாகம் வயல். இவற்றிற்கு நீர் தரக்குளங்கள். இரணமடு திருவையாறு கனகாம்பிகை, கல்மடு, அக்கராயன், கோணாவில் கல்மடு, கரிகாலை நாகபடுவான், புதுமுறிப்பு என ஒன்பது பெருங்குளங்கள். வயல் நாடி ஓடும் பெருவாய்க்கால்கள் எல்லாமே சிலிர்த்து சிரிக்கின்ற மாதமிது.

**சிறகை என்ற பறவைக் கூட்டம். ஆயிரக் கணக்காக சேற்று மணம் தேடி ஆகாயத் தில் ஆயிரக்கணக்காக் கூடி வட்டமிடும். அவை அனைத்தும் வயலில் விழுந்தால் முழு விதை நெல்லும் நாசம்.**

விதைப்புக் காலமான புரட்டாதி ஐப்பசி மாதங்களில் வயற்பிரதேசங்கள் ஆரவாரம் பெறும். புரட்டாதி மழை கண்டதும் உழவு வேலைகள் ஆரம்பம் ஆகும். ஈரம் உலர்வதற்கு முன்னாக இரவு பகலாக எங்கும் உழவு இயந்திரங்களின் இரைச்சல் இரவிரவாக ஓடும் வாகனங்களின் வெளிச்சம்.

உழவு மறு உழவு முடிய புழுதி விதைப்பு இடம் பெறும். உழுத நிலத்தில் நெல்லை விதைத்து உழுது மூடும் முறை. இந்த வேளைகளில் விதைத்த நெல்லைப் பொறுக்கும் பறவைக்கூட்டங்களின் கொண்டாட்டம்.

மழை பெய்யத் தாமதமாகி அது தொடர் மழையானால் புழுதி விதைப்புப் பருவம் போய்விடும். ஐப்பசி ஆகிவிடும். இந்த வேளையில் தொடர்வது பலகையடிப்பு விதைப்பு. சேற்றடி உழவு முறைக்கு மாடுகள் அல்லது சக்கரங்கள் புதையாமல் வீல் பூட்டிய உழவு யந்திரம் மட்டும் பயன்படும். வரம்பை அணையாகக் கொண்டு தண்ணீர் உள்ளஒவ்வொரு பாத்திக்குள்ளும் சேற்றுளவு உழுது மண் பண்படுத்தப்படும்.

உழுது கலக்கிய வயலை மட்டப்படுத்துவது பலகையடிப்பு. சீரான பலகையில் ஆள் ஏறி நின்று அழுத்த மாடுகள் பலகையை இழுத்து வயலை மட்டப்படுத்தும். நீரில் ஊறவிட்ட நெல் மூடைகள் மூன்று நாட்களுக்கு மூடி அடுக்கி சூடேற்றி முளை நெல் ஆக்கப்படும். இந்த முளை நெல்லு பண்படுத்திய சேற்று நிலத்தில் வீசி விதைக்கப்படும். நிலத்தில் விழுந்த முளை நெல்லை கலக்கிய சேறு நிலத்தில் மூடும். விதைகளை மூடி தேங்கி நிற்கும் நீரை வடிகால் மூலம் வெளியேற்றுவதும் ஒரு முக்கிய வேலை. இரவானால் விதைத்த வயலுக்குக் காவல். வரம்பு தோறும் கழிவு டீசலில் எரியும் விளக்குகள். தட்டி எழுப்பும் சேமக்கலச் சத்தம். வெடியோசைகள்.

**மண்புழு மண்புடையன் போன்ற பாம்புகள், செக்கச் சிவந்த கம்பளப்பூச்சி, சரக்குப்பூச்சி, மட்டத் தேள், புலிநகச்சிலந்தி, கொடுக்கன், பூரான், சக்கரப் பாண்டியன் எனப் படை எடுக்கும் ஆயிரக்கணக்கான யந்துக்களின் அட்டகாசங்கள்.**

இந்த வெளிச்சமும் ஓசைகளும் வயலில் விழும் பறை வைக் கூட்டத்தைக் கலைக்கத்தான். சிறகை என்ற பறவைக் கூட்டம். ஆயிரக்கணக்காக சேற்று மணம் தேடி ஆகாயத்தில் ஆயிரக்கணக்காக் கூடி வட்டமிடும். அவை அனைத்தும் வயலில் விழுந்தால் முழு விதை நெல்லும் நாசம். தன் பெரு அலகால் முளை நெல்லை முழுதாக உறிஞ்சி விடும். இவற்றைக் கலைக்கத்தான் கடுமையான காவல்.

சிறகைகளை வேட்டையாட வயல் புறங்களில் வந்தமரும் நரிக்கூட்டங்களின் ஊளையும் ஒருபுறம். நீரை வடிக்கமுடியாதபடி தொடர் மழை வந்தாலும் முளை நெல் அழுகி விடும். மீண்டும் பலகையடிப்பு. விதைப்பு. விவசாயிகள் கடக்கின்ற போராட்டங்கள்தான் எத்தனை எத்தனை?

இத்தகைய போராட்டங்களுடன் நெல்லை முளைக்க வைத்துவிட்டால் விவசாயிக்கு ஆனைப் புழுகம் தான். மழை தொடர்ந்தால் நாற்று நடுகையும் ஒரு மாற்று முறை. முளைத்த நாற்றுக்கு களை நாசினி விசிறி களைகளைக் கட்டுப்படுத்தி யூறியாப் பசளையில் முளை வீரியம் பெறவைத்து அறுவடை கட்டிக்காப்பது பெரும் கடமையாகிறது.

இந்த விதைப்புக் காலங்களில் கூலிக்காரருக்கும வேலை வருமானம் கொண்டாட்டம். களைப்பு அலுப்பு என்று மாலையானால் கள்ளுக் கொட்டில்கள், சாராயத் தவறணைகள் கலகலப்பு அடையும்.

தன் வயலில் தேங்கும நீரை அடுத்தவன் வயலுக்கு கடத்துவதும் வரம்பு எல்லைக்கு அடிபடுவதுமாக மண்வெட்டிச் சண்டைகளும் இந்த நாளில் இருக்கும்.

இவை எல்லாமே இரசனைகள் தான். இன்றும் இங்கிருந்தும் ஏக்கத்துடன் நினைப்பில் இனிப்பவை தான். அது ஒரு பொற்காலம்.

# இல்லந்தோறும் இனிய வாழ்வு

## நோய்த் தொற்றலைக் கட்டுப்படுத்தல்

**Dr. பாலேந்திரன்**
*(ஒரு பேப்பருக்காக)*

புலம் பெயர் நாடுகளில் வாழும் நம்மக்கள் சிறந்த மருத்துவ வசதிகளை இலகுவில் பெறக்கூடிய வாய்ப்புகளை பெற்றுள்ளனர். எனினும் முதுமை, தீராத நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்படும்போது நோயாளிகளை அவரவர் வீட்டிலேயே வைத்துப் பராமரிக்க வேண்டியுள்ளது. இவ்வாறு உள்ள பலர் வீட்டிலிருக்கும்போது பலவகை நோய்க்கிருமிகளால் பாதிக்கப்படாது எவ்வாறு தம்மை காத்துக்கொள்ளலாம் என ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.இன்றைய காலகட்டத்தில் மருந்துகளுக்கு கட்டுப்படாத பல நோய்க்கிருமிகள் உருவாகியுள்ளன. இவற்றினால் தாக்கப்படும்போது சில மணித்தியாலங்களில் அல்லது சிலநாட்களில் மரணம் ஏற்படலாம். மருத்துவமனைகளில் காணப்படும் இவ்வாறான கிருமிகள் இதற்கு உதாரணமாகும். இவ்வாறான நிலைமைகளில் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் முதியவர்கள் அல்லது சிறுவர்களாகும்.

நம்மவர்களில் பலர் உணவு நிலையங்களை நடாத்துகின்றனர். சிலர் வீட்டிலேயே உணவுப்பொருட்களை தயாரித்து விநியோகிக்கின்றனர். பலர் மேற்கூறிய வியாபாரங்களில் தொழில்புரிகின்றனர். இவ்வாறான தொழில்களில் ஈடுபட்ட அனைவரும் நோய்தொற்றலை தடுக்க வேண்டிய பணிகளில் சிறப்பாக தொழிற்பட வேண்டும் என சட்டரீதியாக நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். மேலும் சிலர் தமது வீட்டிலேயே முதியோர் பராமரிப்பை தொழிலாகச் செய்கின்றனர். இன்னமும் சிலர் இவ்வாறான நிலையங்களில் தொழில்புரிகின்றனர். இது தவிர பலர் மருத்துவர்களாகவும், தாதிகளாகவும், உதவியாளர்களாகவும் தொழில்புரிகின்றனர். இவர்கள் அனைவருமே எந்நேரமும் நோய்தொற்றுக்கு ஆளாகமுடியும்.

இவ்வாறான நோய்தொற்றலுக்கு அடிப்படைக் காரணிகள் மூன்றாகும்.

1. வைரஸ் 2. பற்றீரியா கிருமிகள் 3.பங்கசு நுண்கிருமிகள்

இவை தொற்றும் முறைகளாவன:-

1. சுவாசம் மூலம் 2. உண்ணும் உணவு, நீர் மூலம் 3.குருதிமாற்றம் சத்திரசிகிச்சை மூலம் 4. உடலுறவின் மூலம் 5. தோலில் ஏற்படும் காயம் / வெடிப்பு மூலம்

இனி நோய் தொற்றுக்களை கட்டுப்படுத்தும் முறைகளை நோக்குவோம்.

சிறந்தமுறையில் கைகளைக் கழுவுதல்

சுற்று சூழலை சுத்தமாக வைத்திருத்தல்

உபகரணங்களை முழுமையாகவும் சிறப்பாகவும் தொற்றுநீக்கல்.

கையுறை, Apron, Mask, cap போன்ற Personal Protective equipments பயன்படுத்தல்.

கழிவுப்பொருட்களை ஒருங்குசேர்த்து பாதுகாப்பாய் அகற்றுதல்.

குருதி, மற்றும் சலம், மலம் போன்றவற்றை துப்புரவு செய்யும்போது பாதுகாப்பாக தொழில்படல்.

மருந்து செலுத்தும் ஊசிவகை, குருதிபரிசோதனைக்காவி ஊசிவகைகளை பாதுகாப்பாக கையாள்வதும், பாவனையின் பின்னர் சிறந்த முறையில் சேகரித்து பின் அகற்றுதல்.

தேவைப்படும் போது பாதிக்கப்பட்ட நோயாளியை சிறந்தமுறையில் தனிமைப் படுத்துதல்.

அடுத்ததாக ஒரு இடத்தில் நோய்தொற்று ஏற்பட்டிருந்தால் மேலும் சில நடவடிக்கைகள் மூலம் நோய்பரவலைத் தடுக்கலாம். அவையாவன

உணவு தயாரித்தல், சேமித்தல், விநியோகித்தல் போன்றவற்றை பாதுகாப்பாக செய்தல். சம்பந்தப்பட்ட அனைவரும் மிகவும் சுத்தமாக இருப்பதும் பாதுகாப்பாக தொழில்படுவதும் அவசியம்.

விருந்தாளிகள், உறவினர் போன்றோர் தனிமைப்படுத்தப்பட்ட நோயாளியை சந்திப்பதை தவிர்தல்.

நோயாளியை பாராமரிக்கும் போது அணிய புறம்பான உடையை Uniform பயன்படுத்தல். நோயாளியின் அழுக்கு உடைகளை புறம்பாக சேமித்து சுத்தப்படுத்தல்.

Clinical Waste எனப்படும் சலம், மலம், குருதி, வாந்தி போன்றவற்றை பாதுகாப்பாக சேமித்து உரியவகையில் அகற்றுதல்.

நோய் தொற்றை தவிர்க்க மேற்கூறிய குறிப்புகள் நன்கு உதவும்.



# SRI HANUMAN ASTROLOGY CENTRE

## ஸ்ரீ அனுமான் ஜோதிட நிலையம்

**(HEREDITARY: 44 YEARS IN SATISFIED SERVICE TO MANY PEOPLE IN VARIOUS PARTS OF THE WORLD, NOW IN LONDON)**




இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல சோதிட நட்சத்திரம் Pandit Sri Dharma Rajah Shastry அவர்கள் கைரேகை, சாமுத்திரா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம், வருங்காலம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் சென்ற காலம், நிகழ்காலம்,வருங்காலம் ஆகியவற்றை மிகத் துல்லியமாக கணித்து வழங்குவார்.

**REPUTED ASTROLOGER/PALMIST from INDIA**
**Pandit/Jyotish: Sri. DHARMA RAJAH SHASTRY.**

Through Astrology, Palmistry, Numerology, Date of Birth, Horoscope and also Numerology, You can know about Past, Present, Future and right prediction in / Education, Job(Career) & Promotions / Business and Money / Love -Marriage-Children & Family Matters / Husband-Wife Relationship / Health & Peace of Mind / Vaashtu Choice of Lucky Stones (Rings can be made) / Visa & Immigration / Lottery & Luck-Money / Lakshmi pooja / Removal of Witch-Craft and Enemity / all types of Evil-Black-Magic / protection in House, Job personal problems etc

**NOTE: ALL MATTERS ARE KEPT CONFIDENTLY!!**

**குழந்தைகளுக்கு பாலகிரக இயந்திரம் இலவசமாக தரப்படும்.**

**ஒருமுறை சந்தியுங்கள்.**
**உங்கள் வாழ்க்கையின் வழியை மாற்றுங்கள்!**

பெயர் வசியம், தொழில் வசியம், கையெழுத்து வசியம், காதல் வசியம், கணவன் மனைவி பிரச்சினை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசியம், உத்தியோகத்து தடை நீங்க குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்திய கோளாறு, பில்லி சூனியம், மந்திரம் ஏவல், செய்வினை, ஜனவசியம், செய்வினையால் பாதிப்படைந்தவருக்கு பரிகாரம் வழங்கப்படும். அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். சகல விதமான வசியம் செய்து தரப்படும். தாயத்துக்கள் சக்கர ஸ்தாபனங்கள் வழங்கப்படும்.

Contact Address: **AUJLA OPTICIANS** (Site Door)
**16, High Street, Southall, Middx, UB1 3DA**
Opp: Habib Bank A G ZURICH

**07931 141 677 / 07943 474 945**

*Timings: 10.00a.m - 08.00p.m ( All days of the week)*
*Service in: TAMIL, HINDI, ENGLISH & Other Languages*

**Pandit Sri Dharma Rajah Shastry**

"Kindly Visit Once and adjust the path of your Precious Future Life"!

# புதிய அமைவிடத்தில் கிளை பரப்பும் உங்கள் பிரியா....

## அனைவருக்கும் எமது
## தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## 209 High Street North, Eastham (Opposite to Underground Station)

### Tel: 020 8471 5552

★ Outdoor Catering ★ Party Orders ★ Function Hall ★

BIRIYANI & CURRYS



Rice flavoured with saffron cooked with a mix of vegetables in a delicate blend of herbs and spices.

VEG KORMA



Mixed vegetables cooked with coconut

DOSAI



Crepes made from a fermented batter of rice and urid(lentil)dhal served with Sambar (a thick stew of lentils with vegetables and seasoned with exotic spices) and two

FISH FRY



Fish Fried with Spices and Masala



RESTAURANT



Authentic Srilankan & South Indian cuisine prepared by famous Experienced Chefs from India

BANQUET HALL



Banquet Hall for small functions and Conferences

BAR



Offering you Choice of Sprits, Beers and Wine

PATIO



Enjoy our Outdoor Patio Dining.

★ Outdoor Catering ★ Party Orders ★ Function Hall ★

## SRI LANKAN & SOUTH INDIAN RESTAURANT

priya *Restaurant*

(A Member of Tilko Group)

Call **020 8520 5552**

256, Hoe Street, Waltham stow, London E17 3AX (Close to Underground Station)

Dining at **PRIYA** means,

**"MAKING OUR SWEET MEMORIES EVER FRESH"**

*- Happy Customers*

# நச்சென்று பதிந்த நவராத்திரி நாட்கள்

**கானா பிரபா**
*மடத்துவாசல் பிள்ளையாரடியில்*

சிவனுக்கொரு ராத்திரியாம் சிவராத்திரி..... சக்திக்கொரு ராத்திரியாம் நவராத்திரி' இருள் வந்த நேரத்தில், நிசப்தமான பொழுதில் எங்கள் அயலட்டை வீடுகளில் சின்னனுகள் கத்திக் கத்திப் பாடமாக்கும் சத்தம் கேட்பது தான் நவராத்திரி வருவதற்கான முன்னோட்டம்.

ஒவ்வொரு ஆண்டு நவராத்திரிக்கும் முன் சொன்ன அடிகள் மாறாது பேச்சுப் போட்டி மனப்பாடம் இருக்கும். அந்த சின்னப்பிள்ளைப் பருவத்தில் சுவாமிப் படத்துக்குச் சகல கலாவல்லி மாலை பாடினால் அவல் சுண்டல், கௌபி கிடைக்கும் என்பது தான் நவரத்திரி பற்றித் தெரிந்த ஒரே இலக்கணம் எமக்கு.

துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி என்ற மூன்று தெய்வங்களுக்கான பண்டிகையென்றாலும் 'சரஸ்வதி பூசை' என்ற பொதுப் பெயரிலேயே இதனை அழைத்தது எம்மவர்கள் கல்விக்குக் கொடுத்த அதீத முக்கியத்துவத்தாலோ என்று இப்போது எண்ணத் தோன்றுகின்றது.

ஒரு விஜயதசமி நாளில் மடத்துவாசல் பிள் ளையார் கோவிலில் சோமாஸ்கந்தக் குருக்க ளிடம் என் அப்பாவும் அம்மாவும் அருச்சனை செய்து தம்பி வாத்தியார் என் கை விரலைப் பற்றிப் பரப்பியிருந்த நெற்குவியலைத் துழாவி ஆனா எழுத அடியெடுத்துக்கொடுத்தது சின்ன தாக இன்னும் என் ஞாபகத்திரையில். (குழப்படி செய்யாம ஆனா எழுதினா, கோவால் மாமா கடையில ஸ்ரார் ரொபி வாங்கித் தருவேன் - இது என் அம்மா). பின்னர் தம்பி வாத்தியார் தந்த அந்த ஆனா ஆவன்னா ஏட்டுச் சுவடி எமது சுவாமி அறையில் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிறது. அச்சு பதியாமல் ஆணியால் எழுதியதுபோல் அந்த எழுத்துக்கள் இருக்கின்றன.

பாடப்புத்தகங்களும் அப்பியாசக்கொப்பி களும் முகப்பில் சந்தனக் குறி தடவி ஒன்பதாம் நாள் வீட்டு பூசையில் சாமியறையில் தவமிருக்கும்.

பள்ளிக்கூடங்கள் தொடங்கி ஊர்க் குறிச்சி வைரவர் கோயில் வரைக்கும் சரஸ்வதி பூசைக் காலத்துக்குத் தனி முக்கியத்துவம் கொடுக்கப்படும். எங்கள் அயல் வைரவர் கோயி லில் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு சுற்றுப் பக்க வீடுகளுக்கும், வசதி குறைந்த குடும்பங் களை ஒன்றாக இணைத்து ஒருபூசையுமாக ஒதுக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு நாளும் அவல், சுண்டல் கௌபி என்று விதவிதமான பண்டங்கள், சில குடும்பங்கள் தங்கள் பவிசை (வெளிநாட்டுக் காசு) நைவேத்தியத்தில் காட்டுவார்கள். அவர்களில் படையலில் மோதகத்துக்குள் கற்கண்டும் கடிபடும்.

கார்த்திகேசு அண்ணற்றை பெடிச்சி யளும், அங்கால சிவலிங்க மாமா, திருச்செல்வ ண்ணையின்ர பெடிச்சியளும் தான் வைரவர் கோயிலின் ஆஸ்தான சகலகலா வல்லி மாலைப்பாட்டுக்காறர். கரும்பே, கலாபமயிலே என்ற வரிகள் வரும் போது முகத்தில் முறுவல் பூக்க 'சகலகலா வல்லியே' என்று முந்திக் கொண்டே எல்லோரும் ஒரு சேரப் பாடி வரிகளை முடிப்போம். அவல் தின்னவேண்டும் என்ற அவா வேறு.

**சில குடும்பங்கள் தங்கள் பவிசை (வெளிநாட்டுக் காசு) நைவேத்தியத்தில் காட்டுவார்கள். அவர்களில் படையலில் மோதகத்துக்குள் கற்கண்டும் கடிபடும்.**

விஜயதசமி நாளான்று நாலு நாலரை மணிக் கெல்லாம் நீண்டதொரு வாழை மரம் பிள்ளை யார் கோயிலடிப் பெடியளால் நட்டு நிமிர்ந்தி ருக்கும். சுவாமி வெளி வீதி வலம் வந்து உட்புக முன் சோமஸ்கந்தக் குருக்கள் கையில் நீண்ட தொரு வாள் போன்ற கத்தி கைமாறும். ஒரே போடாக வெட்டு ஒன்றுதுண்டுரண்டாக வெட்டப் படும் வாழைக் குத்தியின் நட்ட பாகத்தில் தன்கையில் இருக்கும் குங்குமத்தால் தடவி விடுவார். (மகிடாசுரனின் ரத்தமாம்).

சரஸ்வதி பூசைக்காலத்தில் ரியூட்டறிகள் பாடும் கொண்டாட்டம் தான். ஆண்டுக்கொரு முறை தாங்கள் கொண்டாடும் ஆண்டுக் களியா ட்ட விழாவாகவே 'வாணி விழா' என்று பெயரிட்டு ஒரு நாள் விழாவாகக் கொண்டாடுவார்கள்.

இணுவில் கந்தசுவாமிகோயில் முன் றோட்டிலஇருந்த வாணி கல்வி நிலையம் என்ற ரியூட்டறி நிர்வாகி பாலா ஒவ்வொரு வாணி விழாவிற்கும் அருணா கோஷ்டி மெல்லிசைக் குழுவைக் கொண்டு வருவார்.

'எட உங்கற்றா பாலசுப்பிறமணியம் போலப் பாடுறான்' என்று அவர்களை வாய்பிளக்கப் பார்த்த காலம் அது.

என்னதான் சொல்லுங்கோ, அருட்செல்வம் மாஸ்டரின் ரியூட்டரியில் கொண்டாடும் வாணி விழா சோக்கானது எண்டு தான் சொல்ல வேணும். ஒவ்வொரு வாணி விழாவும் ஏற்படுத்திப் போன ஞாபகப் பதிவுகள் மிக அதிகம். சரஸ்வதி பூசைக்காலத்துக்கு ஒரு மாதம் முன்பே அருட்செல்வம் மாஸ்டர் ஆறாம் ஆண்டு முதல் பதினொராம் ஆண்டு மாணவர் களுக்கு கணிதம்,, விஞ்ஞானம் பாடங்களில் பரீட்சை வைத்து முதன்மைப் புள்ளி பெறும் மாணவருக்கு வாணி விழாவில் பரிசு கொடுப்பார்.

ஆறாம் ஆண்டு படித்த காலம் அது. வாணி விழாவும் வந்தது. 'விஞ்ஞானப் பாடம் அதிக புள்ளிகள் சுமித்திரா' என்று அறிவிப்பு அருட்செல்வம் மாஸ்டரின் மைக்கிலி ருந்து வருகின்றது. திரண்டிருந்த மாணவத்த லைகளை விலக்கி அவள் போனபோது தான் அவள் அணிந்த ஆடை கண்ணை உறுத்தியது. கைமுட்ட நீட்டு சட்டையும், லோங்க்ஸ் போன்ற ஆடையும் கழுத்தில் சால்வை போன்ற வஸ்தி ரத்தோடு அவள் கடந்த போது பக்கத்திலிருந்த சிவபாலனை இடித்து 'என்னடா உடுப்பிது' என்று அப்பாவி கோவிந்தனாகக் கேட்டதும், பிறகு அதுதான் எங்கள் நாட்டுக்குப் புதிதாய் இறக்குமதியான நாகரீகமான பஞ்சாபி, சுரித் தார் வகையறாக்கள் என்பதும் தெரிந்தது.

அடுத்த ஆண்டு வாணி விழாவில் கணக்கிலோ விஞ்ஞானத்திலோ அதிக புள்ளி பெற்று சுமித்திராவின் கடைக்கண் தரிசனம் தெரிய வேண்டும் என்று மாய்ஞ்சு மாய்ஞ்சு படித்ததும் (இதற்கு(ம்) போட்டியாகக் குமரனும் முகுந்தனும் வேறு) ஆனால் அவள் வாணி விழா வருமுன்பே வேறு காரணங்களுக்காக நிரு டியூசன் மாறியதும் என் விடலைப் பருவத்தின் ஆட்டோகிராப் பக்கங்கள்.

பெரிய வகுப்புப் பெடியள் 'போடியார் மாப்பிள்ளை' நாடகத்தின் பிரதியை எடுத்துக் காட்சிகளைக் கத்தரித்து நாடகம் போட்டதும், பாலா மாஸ்டரிடம் இந்து நாகரீகம் படித்த ஒரு கறுத்த அக்கா ' எங்கிருந்தோ அழைக்கும் என் ஜீவன்' பாடலை அழுதழுது பாடியதும் இன்னும் நினைப்பிருக்கு.

**கார்த்திகேசு அண்ணற்றை பெடிச்சி யளும், அங்கால சிவலிங்க மாமா, திருச்செல்வண்ணையின்ர பெடிச்சியளும் தான் வைரவர் கோயிலின் ஆஸ்தான சகலகலா வல்லி மாலைப் பாட்டுக்காறர்.**

பெண்கள் வேலைக்குப் போகவேண்டுமா இல்லையா என்ற பட்டிமன்றம் ஆரம்பித்துச் சூடு பிடித்த தறுவாயில் அதிகம் உணர்ச்சி வசப்பட்டு ' அந்த உந்த கதையில்லை பெண்கள் வேலைக்குப் போகக் கூடாது எண்டு தான் நான் சொல்லுவன் ' என்று எதிர்த்தரப்பு வாதி குஞ்சன் தன் வாதத்திறமை(?)யைக் காட்டியதும் ஒரு வாணிவிழாவில் தான்.

A/L படிக்கும் போது சகபாடி குபேரனின் குரலை முதலீடாக வைத்து இசைக்கச்சேரி வைத்தும் அரவிந்தன் 'அதோ மேக ஊர்வலம்' பாடி நான் அறிவிப்புச் செய்ததும் எமது அருட்செல்வம் மாஸ்டர் வீட்டுக் கடைசி வாணி விழா.

பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரை ஒவ் வொரு வகுப்பு வாரியாகப் பிரித்து பூசை நாள் ஒதுக்கப்பட்டு இறுதியில் பெரிய வகுப்பு மாணவர்களும், ஆசிரியர்களும் பங்கு போட்டு விஜயதசமி நாளைக் கொண்டாடுவார்கள்.

மாணவர்கள் வேஷ்டியும் மாணவிகள் அரைச் சாறி (Half Saree) கட்டுவதும் இந்த நாட்களில் தான். ரவிச்சந்திரனுடன் எமது வகுப்புப் பூசைக்காக ஈச்சம் பத்தை தேடியலைந்து பூசைமாடத்தைச் சோடித்தது ஒரு காலம்.

எனது க.பொ.த உயர்தரவகுப்புக் காலம் அது. எமது பாடசாலையின் மூன்றாம் மாடி சரஸ்வதி பூசைக்கான இடமாக ஒதுக்கப் பட்டிருந்தது. அந்த மாடிக்குப் போகும் இரண்டாம் மாடிப் படியோரமாக எமது வகுப்பு இருந்தது.

**அந்த உந்த கதையில்லை பெண்கள் வேலைக்குப் போகக் கூடாது எண்டு தான் நான் சொல்லுவன்' என்று உணர்ச்சி வசப் பட்டுப் பெசியதும் பசுமையான நிகழ்வு**

காலையில் இரண்டு பாட ஆசிரியர்கள் லீவு. எம்மைத் தட்டிக் கேட்க ஆளில்லை. நானும் மஞ்சவனப்பதி கோயிலடி ராசனும், வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ் மதியாபரணத்தின்ர பெடியன் விக்கியும் ஒரு வாங்கினைப் ஓரமாகப் போட்டு வாற போற பொம்பிளைப் பிள்ளைகளை விடுப்புப் பார்த்துக் கொண்டிருந்தோம். (வயசுக்கோளாறு).

வழக்கம் போல ராசனின் வாய் சும்மா இருக்காமல் ஒருத்தியைப் பார்த்துக் கிண்டல் அடித்ததும் அவள் பழிப்புக் காட்டிக்கொண்டே விறுவிறுவென்று மாடிப் படியில் ஏறவும், முதல் நாள் மழை வெள்ளம் தேங்கிய படிக்கட்டில் வழுக்கி அவள் விழவும், வெள்ளை சட்டை காக்கிச் சட்டையாகத் தெப்பமானதும், விழுந்தடித்துக்கொண்டே வாங்கினை உள்ளே போட்டு எதுவும் தெரியாதது மாதிரி இருந்ததும் கூட மறக்கமுடியுமா? (இது குறித்துப் புலனாய்ந்த மகேந்திரன் மாஸ்டரிடம் நாம் போஸ் வாங்கியது மானப் பிரச்சனை கருதித் தணிக்கை செய்யப்படுகின்றது).

அதே ஆண்டு எங்கள் வகுப்பு லோகேந் திரன் ஆட்கள் நாடகம் போட்டார்கள். (சமூக நாடகமாம்) லோகேந்திரன் போட்ட பெண் வேடத்திற்கு எதிராக இதுவரை மானநஷ்ட வழக்கு எதுவும் வரவில்லை.

அந்த நேரம் சினிமாப் பாட்டுக்கள் பொது மேடைகளில் ஒதுக்கப்பட்ட காலம் அது. விஜயதசமி மேடையில் 'தென்னக்கீற்றில் தென்றல் வந்து மோதும்' என்ற எழுச்சிப் பாடலை ராஜசேகரும் இந்து மகளிர் கல்லூரி யில் இருந்துஇறக்குமதிசெய்த பெண்ணுமாகப் புன்முறுவலோடு பாடவும் முன் வரிசையில் உட்கார்ந்திருந்த கோகுலகிருஷ்ணன் உணர் ச்சி வசப்பட்டுப் பாடல் முடியும் போது மேடை யில் ஏறி ராஜசேகருக்கு மாலை போட்டதும் (செட்டப்போ தெரியேல்லை)

இப்படியாக ஆழப் பதிந்து விட்ட அந்த நாள் ஞாபகங்கள் மீண்டும் அந்த இனிய நாட்கள் வந்து சேராதா என்ற ஏக்கத்தையும் கொண்டு வந்து சேர்த்து விடுகிறது.

"இது உங்களுடையது தானா?
ஸ்பெல்லிங் மிஸ்டேக் இருக்கா?"

உங்கள் விபரங்களை நீங்களே சரி பார்த்துக் கொள்ளவும்

www.orudirectory.com

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ***ஒரு பேப்பர்*** நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orupaper.com



## மணமகள் தேவை

1) A graduate from India, working over there, as the team leader in a private enterprise, 29 years, 5' 7", looking for a bride, a permanent resident, in Europe. Ref. 1150

2) UK citizen, living in Canada, well educated and with long service achievements in high positions, 46 years, 5' 11" tall, a divorcee, looking for a suitable bride. Ref: 1149

3) பிரான்ஸில் வசிக்கும், 31 வயது, 5'11", மணமகனுக்கு, நிரந்தர வதிவிட வுரிமையுள்ள மணமகளை தேடுகின்றனர். Ref:1148

4) An Accountant in Germany since child hood, in the UK since 2004, 28 years, 5'8", looking for a suitable bride Ref:1147

5) Msc qualalified accountant on working visa, 29 years 5'7", a divorce, looking for a professional bride Ref:1146

6) மட்டக்களப்பை சேர்ந்தவரும், 3 வருடங்களாக பிரான்சில் வசிக்கும், 28 வயது, 5'3", மணமகனுக்கு, பிரஜா வுரிமையுள்ள மணமகளை தேடுகின்றனர். Ref:1145

7) டென்மார்க் பிரஜை, 35 வயது, 5'6", பட்டதாரி மணமகனுக்கு படித்த டென்மார்க்கில் வசிக்க விரும்பும் தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1144

8) பிரித்தானிய பிரஜாவுரிமையுள்ள, விவாகரத்துப் பெற்ற, 34 வயது, 5'6", பட்டதாரி மணமகனுக்கு, தகுந்த மண மகளை தேடுகின்றனர். Ref:1143

9) In UK since 2000, on student visa, UK graduate, 29 years, 5'10", looking for a suitable bride with PR Ref:1142

10) In UK since 1998, 35 years, 6'2", O/L educated, in business, looking for a suitable bride.Ref:1141

11) Network Engineer, 7yrs. in the U.K, 29 years, 5'11", seeks a suitable bride.Ref: 998

12) IT பட்டதாரி, 30 வயது, 5'11", Student visa இல் உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1140

13) லண்டனில் 6 வருடங்களாக வசிக்கும், A/L படித்த, 37 வயது, 5'11", மண மகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1139

14) லண்டனில் 6 வருடங்களாக வசிக்கும், O/L படித்த, 29 வயது, 5'7", மண மகனுக்கு, தகுந்தமணமகளை தேடுகின றனர். Ref:1138

15) அவுஸ்திரேலியா பிரஜாவுரிமை யுள்ள, computer engineer, 27 years, 5'8", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1137

16) கனடா பிரஜாவுரிமை, 28 வயது, 5'6", Engineer மணமகனுக்கு, தகுந்த மணமகளைத் தேடுகின் றனர். Ref: 1136

17) பிரான்ஸில் வசிக்கும், 29 வயது, 5'11", M Sc பட்டதாரி மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1135

18) பிரான்ஸில் வசிக்கும், 34 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1134

19) லண்டனில் 8 வருடங்களாக வசிக்கும், 42 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1133

20) லண்டனில் 6 வருடங்களாக வசிக்கும், 34 வயது, 5'7", A/L படித்த, மண மகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1132

21) லண்டனில்வசிக்கும், 30 வயது, 5'9", மணமகனுக்கு, பிரஜாவுரிமையுள்ள மண மகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1131

22) In the UK since 1998, an honers Graduate, 35 years, 5'6", seeking a bride with a permanant residence from EU, Aus or Canada. Ref: 1130

23) பிரான்ஸில் வசிக்கும், 38 வயது, 5'4", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1129

24) இலங்கையில் வசிக்கும், 33 வயது, 5'9", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1128

25) இந்தியாவில் வசிக்கும், 27 வயது, 5'5", Electronic Technician, மணமகனுக்கு தகுந்த மணமகளை EU, Canadaவில் தேடுகின்றனர். Ref:1127

26) லண்டனில் 7 வருடங்களாக வசிக்கும், 32 வயது, 5'9", பட்டதாரி மணமகனுக்கு, தகுந்த மணமகளை EU வில் தேடுகின்றனர். Ref:1126

27) ஜோர்ஜியாவில் படித்த Doctorம், தற்சமயம் UK ல் student visa வில் இருக்கும், 32 வயது, 5'5", மணமகனுக்கு, தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1125

28) சுவிஸில் 10 வருடமாக வசிக்கும், 36 வயது, 5'6", A/L படித்த, மண மகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1124

29) கொழும்பில் வியாபாரம் செய்யும், 32 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1123

30) யாழ்ப்பாணத்தில் ஆசிரியராக பணிபுரியும், 28 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1122

31) UK ல் வசிக்கும், 31வயது, 5'6", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1121

32) UK ல் நிரந்தரவதிவுடமை உள்ள, 29வயது, 5'9", மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1120

33) லண்டனில் வசிக்கும்,39 வயது, 5'7", மணமகனுக்கு, தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1119

34) IT graduate, 28 years, 5'11", on permanent stay, looking for a suitable bride. Ref: 1118

35) *Top professional* 29 years, '6 ' tall,in the U.K since childhood, seeking a suitable bride. Ref: 1117

36) லண்டனில் வசிக்கும், 33 வயது, 5'6", A/L படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref:1116

37) பிரான்ஸ் பிரஜாவுரிமை, 32 வயது, 5'11", படித்த, மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref: 1115

## மணமகன் தேவை

1) A graduate from Jaffna-Uni., doing Special there, 27 Years, 5' 4", looking for a suitable groom. Ref. 1488

2) யாழ் பல்கலைப் பட்டதாரி, 26 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணகனை தேடுகின்றனர். Ref:1487

3) A graduate from Sri Jeyewar'pura-Uni, working as an assistant accountant in Colombo, 26 years, 5' 4", looking for a suitable groom in EU or Australia. Ref. 1486

4) லண்டனில் வசிக்கும், O/L படித்த, 29 வயது, 5'8", தாரமிழந்த மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1485

5) இந்தியாவில் வசிக்கும் பட்டதாரி, 22 வயது, 5' உயரம், மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டன், கனடா வில் தேடுகின்றனர். Ref :1484

6) Uk born, 25 years, 5'5", a grauate in accountancy, looking for a professional groom. Ref :1483

7) லண்டன் வதிவிடவுரிமையுள்ள, பட்டதாரி, 29 வயது, 5'3", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1482

8) யாழ்ப்பாணத்தில் பணி புரியும், பட்டதாரி,33 வயது, 5'உயரம், மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1481

9) வவுனியாவில் ஆசிரியை, 21 வயது, 5'3", A/L படித்த, மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1480

10) In the UK since 1985, A British citizen, 25 years, 5'2" a grauate and well employed looking for a suitable groom. Ref: 1479

11) கொழும்பில் வசிக்கும், விவாகரத்துப் பெற்ற 32 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணமகனை EU / canadaவில் தேடுகின்றனர். Ref:1478

12) Qualified Doctor, working in Colombo, 28 years, 5'5", looking for a professional with PR in the UK. Ref:1477

13) கொழும்பில் வேலை செய்யும், 38 வயது, 5'1", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1476

14) யாழ்ப்பாணத்தில் வசிக்கும் கல்வியற் கல்லூரி ஆசிரியை, 23 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் தேடுகின்றனர். Ref:1475

15) கொழும்பில் வசிக்கும், O/L படித்த, 29 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த கொழும்பில் வேலை பார்க்கும் மணமகனை தேடுகின்றனர். Ref:1474

16) வவுனியாவில் அதிபராக கடமை யாற்றும், 43 வயது 5'5", மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1473

17) Born in Britain, a Graduate, 26 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1472

18) Born in Britain, Professional Graduate, 33 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1471

19) UK Citizen, 24 years, 5'6", a Professional & a divorcee, seeking a suitable groom. Ref:1470

20) சென்னையில் வசிக்கும் பட்டதாரி, 28 வயது, 5'1", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1469

21) யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகராக இருக்கும், 34 வயது 4'8", பட்டதாரி மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1468

22) யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகராக இருக்கும், 37 வயது 4'5", பட்டதாரி மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1467

23) யாழ்ப்பாணத்தில் வசிக்கும், 43 வயது 5'2", மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1466

24) German citizen, 30 years, 5'3", educated & well employed,a divorsee looking for a suitable groom. Ref:1465

25) தாயகத்தில் பட்டதாரியாக வேலை செய்யும், 29 வயது, 5'3", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1464

26) கொழும்பில் கணக்காளராக பணி புரியம், 26 வயது, 5'5", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1463

27) கொழும்பில் வசிக்கும், 24 வயது, 5'5", படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref:1462

28) மலேசியாவைச் சேர்ந்தவரும்,40 வயது, 5'5", படித்த, கணவனை இழந்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை கனடா, ஐரோப்பிய நாடுகளில் தேடுகின்றனர். Ref:1461

29) கொழும்பில் வங்கியில் முகாமை யாளராக வேலை செய்யும், 41 வயது, 5'1", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1460

30) பிரான்ஸ் பிரஜாவுரிமை, 33 வயது, 5'4", படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை பிரான்ஸில் தேடுகின்றனர். Ref:1458

31) கொழும்பில் வசிக்கும், 47 வயது, 5'6", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1456

32) Educated bride, working in Colombo, 24 years, 5'2", seeks a suitable groom in the U.K. Ref:1453

33) கொழும்பில் வேலை செய்யும், பட்டதாரி மணமகள், 32 வயது, 4'10", தகுந்த மணமகனை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1452

34) Professional bride, 34 years, 5'8", a U.K citizen, looking for a suitable groom. Ref:1451

35) Working in Colombo, 36 years, 5'1", A/L quarlified, seeks a suitable groom in the E.U or Canada . Ref:1450

36) In the U.K, on student visa, doing Ph.D, 34 years, 5'1", looking for a qualified groom in Europe with PR Ref:1449

37) லண்டனில் வசிக்கும், விவாகரத்துப் பெற்ற, 34 வயது, 5'6", மணமகளுக்கு, தகுந்த மணமகனை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1448

38) Teacher in Jaffna, 34 years, 5'2", looking for a suitable groom. Ref:1447

39) கனடாவில் வசிக்கும், 30 வயது, 5'2", விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1446

40) கனடா பிரஜாவுரிமையுள்ள, 46 வயது, 5'5",Hotel Management படித்த மணமகளுக்கு, தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1445

41) Govt. servant in Jaffna, 29 years, 5'3", a graduate, seeks a groom in Sri Lanka or abroad. Ref:1444

42) Jaffna born, in the U.K on student visa, 35years, 5'4", A/L qualified seeks a suitable groom. Ref:1443

43) மட்டக்களப்பில் பிறந்து A/L படித்து ஆசிரியையாக கடமை புரியும் 26 வயது 5'1" தகுந்த மணமகனை வெளிநாடு களில் தேடுகின்றனர். Ref:1442

44) கனடாவில் வசிக்கும் பட்டதாரியும் Accountants and Advisors company யில் வேலை பார்க்கும் 26 வயது 5'5" மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1441

45) யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'2" கொழும்பில் வேலை செய்யும் மணமகளுக்கு தகந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1440

46) வவுனியாவை பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'3" மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref: 1439

47) Uni. student, 24 years, 5'4", a British citizen, in the UK since her teenage seeks a suitable groom. Ref:1438

48) Professional 27 years, 5'5",Ten years in the UK, looking for a Professional groom.Ref:1437

49) பிரான்ஸில் வசிக்கும், 35 years, 5'7", A/L படித்த,மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1436

50) பிரான்ஸில் வசிக்கும், 33 years, 5'5", A/L படித்த,மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1435

51) கொழும்பில் தொழில் புரியும், 36 வயது, 5', படித்த,மணமகளுக்கு தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref:1434

52) கொழும்பில் தொழில் புரியும் பட்டதாரி, 38 வயது, 5'4", தகுந்த மண மணமகனை Canadaவில்/ இலங்கை யில் தேடுகின்றார். Ref: 1433

53) பல்கலைக்கழக மாணவன், 21 வயது, 5'4", மணமகளுக்கு தகுந்த மண மகனை வெளிநாடுகளில் தேடுகின்றார். Ref:1432

54) இந்தியாவில் Docterஆக பணிபுரியும், 38 வயது, 5'3", மணமகளுக்கு தகுந்த மணமகனை India/ Sri Lankaவில் தேடுகின்றார். Ref:1430

52) Professional bride, a Canadian citizen 31 years,5'3',with traditional values seeking a suitable groom Ref: 1427

53) இந்திய மருத்துவ கல்லூரியில் பட்டம் பெற்ற 29 வயது, 5'8', கொழும்பில் வசிக்கும், மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றார். Ref:1426

54) Professional bride, born in France, 24 years, 5'4', seeking a suitable groom. Ref:1425

# கவிதை

## வேதனைச் சாபம்!

உலக அரசுகளே!
ஓர்நிமிடம் மௌனமாய்த் தலைகுனிந்து
உங்களுக்காக வெட்கியுங்கள்
உங்களைப் போன்ற ஓர் அரசின்
அங்கீகாரம் வழங்குபவர்கள் நீங்கள்.
உங்களிடமே மனச்சாட்சி இல்லை.
எப்படிக் கிடைக்கும் மன்னிப்பு?
பால்மணம் மாறாத பச்சிளம் சிசுக்களையே
படுபாதக முறையில் கொன்றொழிக்கும்
நீசஅரசின் கரத்தை பலப்படுத்தும்
உங்களுக்கு கிடைக்குமா உங்களிடமே மன்னிப்பு
போர்தர்மமே புரியாத பொய்மை அரசு
தோல்விகளைச் சீரணிக்க முடியாது
இழிவு வேலைகளில் முடிவுக்காக
வீரமுடன் போரிட்டு
தம்மையும் முடித்துக் கொண்ட—எங்கள்
வீரக் குழந்தைகளின் உடல்களுக்கு
நீசர்கள் இழைத்த அவமானங்களை
நினைக்கையிலே —எங்கள்
நெஞ்சமெல்லாம் வெந்து கொதிக்கிறது.
காலம் காலமாய் இழைத்த கொடுமைகளின்
அதிஉச்ச குரூரம் இதனை எண்ணுகையில்—
எங்கள் உள்ளங்கள் தணலாய்க் கனல்கிறது.
எங்கள் பிள்ளைகளின் உடலங்களை
போதும் அரசுகளே உங்கள் இரட்டை நாடகம்
உலகநீதியை தங்கள் காலடிகளில் போட்டு
ஒட்டுமொத்தமாக நசுக்க முயலும்
இனவாத அரசுடன் கைகுலுக்கும்
உங்களிடமிருந்தா நீதி கிடைக்கும்?
வேகும் உள்ளங்களால் நாங்கள் இடும்
வேதனைச் சாபம் இது.
மனுதர்மங்களை மதிக்காத
மாக்களின் கொடும் ஆட்சிகள்
விரைவில் தகர்க்கப்படும்.
பூமிப்பந்தில் நிச்சயம்
உண்மையும் உயரிய நீதியும்
வெற்றியுடன் நிமிர்ந்து சிரிக்கும்

*- மந்தாகினி*

## நட்பென்றொரு சிநேகம்!

அதே வானம், நிலவு,நட்சத்திரம்
வாழ்வும் அவ்வாறே
இயல்பாக மாற்றங்களின்றி
மௌனமாகப் பயணிக்கும்
உறவுகள் வரும் போகும்
உரையாடும் கலகலக்கும்
எட்டி நின்றே தூற்றிப்
புறம் சொல்லி அகலும்
மகிழ்வின் தருணங்களில் சிரித்ததுண்டு
முரண்பாடுகளின் முடிவில்
சினந்ததுண்டு
உணர்வுகளின் ஆர்ப்பரிப்பில்
சிலிர்த்ததுண்டு
ஆனாலும்,
ஒரு கையசைவு
பார்த்தனுக்கு வாய்த்ததொரு சாரதியாக
ராமனுக்கு அமைந்ததொரு குகனாக
அதியமான் களித்ததொரு அவ்வையாக
வள்ளுவன் சொன்ன நட்பாக
எதுவோ நானறியேன்.
இருந்தும் நல்லதொரு சினேகம்
லயமாக அழகாக இனிதாக எனதாக...

*- கனிகை*

## அம்மா

இல்லத்தில் அம்மா ராணிதான் !
ஆயினும்
எல்லோருக்கும் அவள் அடிமை !
வீட்டில் அத்தனை பேரும் ராஜா !
நித்தமும் பின்தூங்கி முன்னெழுவாள்
அன்னை !
பித்துப் பிடிக்காத பேதை !
எந்தப் பிள்ளைக்கும் அவள்
சொந்தத் தாய் !
பால் கொடுப்பாள் பாப்பாவுக்கு !
முதுகு தேய்ப்பாள் அப்பாவுக்கு !
இனிதாய் உணவு சமைப்பாள் !
என் வாயில் ஊட்டுவாள் !
வேலையில் மூழ்கி வேர்வையில் குளிப்பாள் !
எப்போதாவது அடி வாங்குவாள் அப்பாவிடம் !
தப்பாது மிதி வாங்குவாள் தமயனிடம் !
கையை முறிப்பான் கடைசித் தம்பி !
கலங்கும் கண்ணீரைத் துடைப்பது
கனலும் காற்றும் !
பளுவைக் குறைப்பது அவளது
நோயும் நொடியும் !
ஆயுளை நீடிக்க வைப்பது தாயுள்ளம் !
உயிருள்ள போது ஒருவராலும் வணங்கப் படாது,
செத்த பிறகு தெய்வ மாகிறாள் !

*சி. ஜெயபாரதன்*

## தவிப்பு

நிறுத்துங்க
நிறுத்தத்தை தவறவிட்டவளின்
இயலாமைக் குரல்
அடுத்த நிறுத்தம் வரை
காத்திரு!
அலட்சியத்துடன் நடத்துனர்
திடீரெனத் தாக்கும் காற்றில்
அலைவுற்றுத் திரியும்
ஒற்றைத் திரிபோல
கிடந்து தவிக்கிறது மனம்
மூதாட்டி இறங்கும்வரை

*- செந்தமிழ்*

## நம்பிக்கை?

கஷ்டப்பட்டுப் படித்திருக்கிறேன்
கண்டிப்பாய் பாஸாகிவிடுவேன்..
அப்புறம் எதற்கு முச்சந்தி விநாயகனுக்குத்
தோப்புக்கரணமும், குட்டும்?!
ஜமாலும், ஜேம்சும்
ஜம்மென்று பாஸாவதில்லையா என்ன?
மனசுக்குள் முணுமுணுத்தபடி
விநாயகர் சன்னதி திருநீறெடுத்தேன்.

*- அருண் வைத்தியநாதன்*

## யாரோடு பேச்சு

சமா(ர்)தானம்
ஏன் இவர்களுக்குத்
தெரியவில்லை
சமர் தானம்
செய்யப்படுவது தான்
சமாதானம் என்று!
சடைத்த பனைகளின்
தலைகோதிச் சிக்கெடுத்து
விரல் இரத்தம் கசியப்
புன்னகைத்த
காற்றைப் போல
நாங்களும்...!
சிக்கெடுக்கும் முயற்சியில்
வெளியாரும்...!
சிங்காரக்
கொண்டைக்காரி,
தலை அவிழ்த்து,
உதறி ஈரோடு, பேன்
விரட்டு மட்டும்
விடிவில்லை!
காரோடு
கண்ணாடி மாளிகை
கண்ணசைப்பில்
காரியமாற்ற
குண்டர்களின்
தோழமை!
வேரோடு அறுப்பதாய்ப்
பேச்சு!
வெற்றுத் தோட்டா
எமக்கா கூற்று?
யாரோடு நமக்கென்ன
பேச்சு?
போராடித்
தமிழ்க்
கொடியை ஏற்று!

*-கவிரூபன்*

## சூல்

தாயாக — உன்
அடிவயிறு வாங்கிய
அடையாளக் கோடுகள் .

*- சின்னபாரதி*

## சிட்டுக்கள்

ஒடிந்துவிடும் உறவுக் கிளைகளுடன்
சேர்ந்து விழுந்து அடிபடும் வாழ்வு
பற்றுதல்களின் பாரம் தாங்காது.
முன்பறியத் தெரியாது
தோற்றுக்கொண்டிருக்கும்,
நம்பிக்கை முட்களில்
விழுந்து விழுந்து
கிழிபடும் நினைவுகளோ
'வனத்திற்குப் போ'வென
விரட்டியடித்தாலும்
கூண்டிற்கே திரும்பி வந்து
குந்திக்கொள்ளும் பறவைகள்!

*- பிரபு*

"வாயப்பாத்துக் கொண்டு நிக்காதையுங்கோ
வாருங்கோ வந்து சேருங்கோ"

புதிதாக யாரும் இணையலாம்

www.orudirectory.com

# அறுவைப் பக்கம்

## வம்பில் மாட்ட வைத்த 'வாசிப்புப்' பழக்கம்



எதையும் ஆராய்ந்து அறியறதுங்கறது எனக்குச் சின்ன வயசில இருந்தே வந்திருச்சு. எங்க ஊரில் ஞாயிற்றுக்கிழமைகளிலை மட்டும் பழைய புத்தக கடை போடுவாங்க. பல நாவல்கள் பாதி விலைக்கு கெடைக்குங்கறதால நான் இந்த கடைக்கு ரெகுலரான கஸ்டமர்.

அப்படி ஒரு ஞாயித்துக்கிழமை கடையில நாவல்களை மேய்ஞ்சுகிட்டு இருக்கும் போதுதான் அந்த புத்தகத்தைப் பார்த்தேன்.

'லவ் லைஃப் அனுபவக்கதைகள்'. என்னடா இது நாவலாசிரியர் பேரே இல்லை என்ன நாவல் இது என்ற என் வழக்கமான ஆர்வ மேலீட்டால் பிரித்துப் பார்த்தேன்.

'அலோ !அந்த புத்தகத்தை வாங்கறதுன்னா மட்டும் பிரிச்சு பாருங்க !' கண்டிப்பான குரல் கடைக்காரரிடம் வந்தது. 'என்னடா அப்படி இந்த புத்தகத்திலே விசேசம்' ன்னு ' சரி வாங்கிக்கறேன் !'

'அப்படீன்னா 10 ரூபாய் கொடு !'

'என்னாங்க இது பழைய புத்தகம் பாதிவிலை தானே !'

'அதெல்லாம் கெடையாது ஃபுல் ரேட்டுதான்!'

நான் ஆனந்தைப் பார்க்க ஆளுக்கு பாதி போட்டு வாங்கிக்கலாம்னு முடிவாச்சு! வெற்றிகரமாக வாங்கிக் கொண்டு வந்தோம். எதோ பலருடைய வாழ்க்கை அனுபவ வரலாறுன்னு நெனச்சா ஏமாந்து போய்டுவீங்க !

புத்தகத்தைக் கொண்டு வந்து வாசித்து முடிச்சாச்சு. இனி அந்த புத்தகத்தை எப்படி டிஸ்போஸ் செய்வது? நானும் ஆனந்த்தும் பல ஐடியாக்களை டிஸ்கஸ் செய்யும் பொழுதுதான் சினிமாவில் பார்த்த ஞாபகம் எனக்கு வந்தது..

புத்தகத்தை எரித்துவிட்டு சாம்பலை டாய்லெட்டில் போட்டு தண்ணீரை ஊற்றிவிடுவது என! அட சூப்பரான ஐடியாவா இருக்கே ! ஒரு தடையம் கூட சிக்காது. ஜொள்ளு பாண்டி கலக்கரடா நீ ! எனக்கு நானே தட்டிக்கொடுத்துக் கொண்டேன். சரி யார் வீட்டு டாய்லெட்?

'எங்க வீட்டுல எப்பவும் எங்கம்மா இருப்பாங்கடா. உங்க வீட்டுலதான் ரெண்டுபேருமே வேலைக்குப் போறதுனால நீதான் லாயக்கு !நீயே பண்ணிடுடா' ஆனந்த் கூறினான். சரி பொதுவாழ்க்கைலே இதெல்லாம் சகஜம்பா ! நானும் ஒத்துக்கொண்டேன். நான் தைரியசாலி என அடிக்கடி பீற்றிக்கொள்வதைக் காப்பாற்ற வேண்டுமே !

எங்கள் வீட்டில் ஒரு காரைச்சட்டி (தோட்ட மண்ணெடுக்க வச்சிருப்பாங்களே ) இருக்கும். ஒரு பொன்னாளில் வீட்டில் யாருமில்லாத பொழுது காரைச்சட்டியில் புத்தகத்தை கொழுத்தி போட்டேன். சாம்பலானதும் நீர் ஊற்றி அணைத்துவிட்டு டாய்லெடில் கொட்டி நீரை ஊற்றிவிட்டேன். இப்படியாக என் முதல் டிஸ்போசல் விளையாட்டு ஆரம்பித்தது. பின்வந்த நாட்களில் பல சாம்பல்கள் டாய்லெட்டில் கலந்தது.

இப்பபடியாக சென்றுகொண்டிருந்தபோதுதான் ஒரு ஞாயிற்றுக்கிழமை கடைக்காரர் கேட்டார்

'தம்பி ஒரு வெளிநாட்டுப் புத்தகம் வந்திருக்கு வேணுமா? ஆனந்த்தை ஆவலுடன் பார்த்தேன். தலையசைத்தான்.

'உங்களுக்காக பாதிவெலைக்கு தர்றேன் !' கடைக்கார் தன் பாசத்தை தனது ரெகுலர் கஸ்டமரிடம் நிரூபிக்க பிரயத்தணப்பட்டுக் கொண்டிருந்தார்.

அத்தனை காலமாக மண்வாசனையான புத்தகங்களையே பார்த்துக் கொண்டிருந்த எங்களுக்கு அந்த புத்தகத்தைப் பார்க்கும் ஆவல் பீறிட்டு கிளம்பியது ஆளுக்கு பாதி காசு போடு வாங்கிக் கொண்டோம். டேய் 'இன்னிக்கு நான் படிக்கறேன். நாளைக்கு நீ படி !' ஆர்வம் கொப்பளிக்க ஆனந்த் கேட்டான்.

சரிடா. ஆனா பார்த்து பத்திரமா கொடு என்ன? அவ்வளவுதான் அமுதம் கிடைத்ததைப் போல் துள்ளிக் குதித்தான்.

அடுத்த நாள் புத்தகம் என்னிடம் வந்தது. வெறிநாட்டுப் புத்தகம்னா அந்த ரேஞ்ச் மெயிண்டைன் பண்ணியிருந்தார்கள். சரி தப்பித்தவறி இந்த புத்தகம் வீட்டில மாட்டுனா அவ்ளோதான். எங்கப்பாரு இந்தவருச தீபாவளிய என் முதுகுலயே கொண்டாடிவாரு! நான் காலி. !

முதல்ல இதை டிஸ்போஸ் பண்ணிடனும். மணியைப் பார்த்தேன். அம்மா வரும் நேரம் ! புத்தகம் வேறு பெரியதாக இருந்தது. எரிஞ்சு முடிக்கவே ரொம்ப நேரம் ஆகும் போலத் தெரிஞ்சது.

சரி இனிமே இதை எரிக்கறதுங்கறது ஆவறதில்லை! பேசாம கிழிச்சு டாய்லெட்டில் போட்டுவிட்டால் என்ன? புத்தகத்தை கிழிக்க ஆரம்பித்தேன். பேப்பர்கள் எல்லாம் பக்கா குவாலிட்டியாக இருந்த்ததால் கிழித்து முடிப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. கொண்டுபோய் டாய்லெட்டில் போட்டேன். தண்ணீர் ஊற்றினேன். வேலை முடிந்தது என்ற தான் நினைத்தேன். ஆனால்...

அன்று இரவு அப்பாதான் சொன்னார். 'என்னமோ டாய்லெட்டில் அடைச்சுகிட்டு இருக்குது. தண்ணியே போக கஷ்டப்படுது !'

அவ்வளவுதான் ! எனக்கு எல்லாமே அடைத்துக் கொண்டது. அய்யகோ என்ன செய்யறது.

'இல்லமா நல்லா தண்ணி ஊத்தினா சரியாகிடும்'. டாய்லெட்டிற்கு ஓடினேன்.

'சே இதுக்குதான் வீட்டிலே ஒரு பையன் இருக்கனுங்கறது. நீங்க சரியா தண்ணி ஊத்தியிருக்க மாட்டீங்க. தம்பி சரி பண்ணிடுவான் பாருங்க !' அம்மா பெருமிதமாய் என்னைப் பற்றி கூறிக்கொண்டிருப்பது கேட்டது. அய்யோ தாயே !என்னை ரொம்ப நல்லவேன்னு சொல்றீங்களே !' வாளிவாளியாய் தண்ணியை ஊற்றினாலும் எல்லாமே ஊசித்துவாரத்தில் போகுமளவு வேகத்துடனேதான் சென்றது. என்னுடைய பற்பல முயற்சிகள் விழலுக்கு இரைத்த நீரைப்போல டாய்லெட்டில் இரைந்தது.

'சரி விடு ! ஆளைக் கூப்பிட்டு என்ன அடைச்சுகிட்டு இருக்குன்னு பார்த்திர வேண்டியதுதான் !' அப்பா கூறியது காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போலானது.

'ஐயகோ என்ன இது பாண்டிக்கு வந்த சோதனை ! இதுக்குக் காரணம் நாந்தான்னு தெரிஞ்சா என் இமேஜ் என்ன ஆவறது ?' அப்பா புதிதாக வாங்கிய பெல்ட் வேறு என்னைப்பார்த்து கண் சிமிட்டியது.

அப்பா எங்கிருந்தோ டாய்லெட் சுத்தம் செய்பவரை அழைத்து வந்திருந்தார். போச்சு எல்லாம் போச்சு !அவன் டேங்கை தொறக்க என் வண்டவாளமும் சேர்ந்து நாறப் போகிறதே.

அப்பொழுதுதான் என் தாயார் சொன்னார் 'நீங்க ரெண்டு பேரும் ஏன் நிக்கறீங்க. ஒரே நாத்தமா இருக்கும். அவரே சரி பண்ணிடுவார் நீங்க உள்ள போங்க !' '

அப்பா ஒருவழியாக உள்ளே போனார். எனக்கு அப்போதுதான் உயிரே வந்தது. 'இல்லமா நான் இருந்து பார்த்திட்டு வர்றேன்'

'என்னமோ போ என்னத்த பார்க்கிறயோ!' திட்டிக் கொண்டே அம்மா சென்றுவிட்டார்.

ஏதோ ஒரு குழாயைக் கிண்ட அடைப்புக்குக் காரணமான வஸ்து வந்தது வேறெதுவுமில்லை என் வெளிநாட்டுப் புத்தகம் தான். சுத்தம் செய்பவர் அதையும் என்னையும் பார்த்தார்.

பேசாமல் அவர் பாக்கெட்டில் பணத்தைச் சொருகினேன். சைகையிலேயே அப்பாவிடம் கூற வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டேன்.

எல்லாம் சரி செய்துவிட்டு வந்தவரிடம் அப்பா கேட்டார் "என்னப்பா அடைச்சுகிட்டு இருந்தது ?"

'குழாய் உடைஞ்சி உள்ள விழுந்திருச்சு அதான் !'

மானம் காத்த மகராசா !! நன்றிப்பெருக்குடன் அவரைப் பார்த்தேன். அதன்பின் ஞாயித்துக்கிழமை கடைகளையே மறந்து விட்டேன் என்று பொய் சொல்ல மாட்டேன்.

-ஜொள்ளுப்பாண்டி

## இது எப்படியிருக்கு?

என் அன்புள்ள அப்பா,

மிகுந்த மன வருத்தத்துடன், இதை எழுதுகிறேன். நான் வீட்டை விட்டுப் போகிறேன். இப்படி சொல்லாமல் கொள்ளாமல், என் புதிய காதலன் கமலேசுடன் நான் ஓடிப் போவதற்குக் காரணம், உங்களுடனும், அம்மாவுடனும் ஓர் அனாவசிய சண்டையைத் தவிர்க்கவே.

கமலேஷ் என் மேல் மிகுந்த ஆசை வைத்துள்ளார். எனக்கும் அவர் மேல் கொள்ளை ஆசை ! கமலேஷ் உடலெங்கும் துளையிட்டு ஆபரணங்கள் அணிந்தும், பச்சை குத்தியும், மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர் போல் உடை அணிந்தும் காணப்பட்டாலும் நீங்கள் சந்தித்தால், நிச்சயம் அவரை விரும்புவீர்கள் !!!

இன்னொரு விஷயமும் சொல்ல வேண்டும், நான் கர்ப்பமாக இருக்கிறேன். கமலேஷ், நான் குழந்தை பெற்றுக் கொள்வதையும், நாங்கள் சேர்ந்து சந்தோஷமாய் வாழ்வதையும் மிகவும் எதிர்பார்க்கிறார். கமலேசிற்கும் எனக்கும் அதிக வயது வித்தியாசம் (45) இருந்தாலும், அவர் ஏழையாக இருந்தாலும், எனக்குக் கவலையில்லை. தூய காதலுக்கு நடுவில் இவையெல்லாம் துச்சம் என்பது என் எண்ணம்.

கமலேசிற்குகு என்னைத் தவிர இன்னும் சில பெண்களுடன் தொடர்பு இருந்தாலும், அது குறித்து எனக்குக் கவலையில்லை. அவருக்குத் தெரிந்த விதத்தில், அவர் என்னிடம் விசுவாசமாக இருப்பார் என்ற நம்பிக்கை எனக்குள்ளது ! நான் நிறைய குழந்தைகள் அவருக்கு பெற்றுத் தர வேண்டும் என்பது அவர் ஆசை, என் கனவும் அதுவே.

மரிஜுவானா எவ்வளவு அற்புதமான விஷயம் என்பதை எனக்கு கற்றுத் தந்தவர் கமலேஷ் தான். கஞ்சா வழங்கும் பேருவகையை எனக்கு அறிமுகம் செய்தவரும் அவரே ! நாங்கள் தினமும் பிரார்த்தனை செய்வோம்,

எய்ட்ஸை குணப்படுத்த மருந்து சீக்கிரம் கண்டு பிடிக்கப்பட வேண்டும் என்று, அது நடந்தால், கமலேஷின் உடல் நலமும் கொஞ்சம் கொஞ்சமாக தேறும் அல்லவா ???

என்னைப் பற்றி கவலைப்பட்டு உங்கள் உடல்நலத்தை கெடுத்துக் கொள்ள வேண்டாம். எனக்கு இப்போது 15 வயது, நல்லது கெட்டதும், என்னை கவனித்துக் கொள்ளவும், எனக்குத் தெரியும்! ஒரு நாள் நாங்கள் உங்களை சந்திக்க திரும்பி வருவோம், உங்கள் பேரக் குழந்தைகளைப் பார்க்க உங்களுக்கு மட்டும் ஆசை இருக்காதா என்ன ?

அன்பு மகள், அனிதா

கடிதத்தில் முடிவில், 'மறுபக்கம் பார்க்கவும்' என்று எழுதியிருந்ததைப் பார்த்த தந்தையார், இன்னும் என்ன குண்டை தலையில் போடப் போகிறாளோ என்ற அதிர்ச்சியில், கைகள் நடுங்க, கடிதத்தைத் திருப்பி வாசித்தார்.

பின் குறிப்பு: நான் மேலே எழுதிய எதுவும் உண்மையில்லை ! நான் பக்கத்து வீட்டில் இருக்கிறேன். என் மேசையின் மீதிருக்கும் என் ரிப்போர்ட் கார்ட் மதிப்பெண்களை விடவும், வாழ்க்கையில் பல மோசமான விஷயங்கள் உள்ளன என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்பினேன். கார்டில் கையெழுத்திட்டு விட்டு, நான் நம் வீட்டுக்கு வர எது பாதுகாப்பான சமயம் என்பதை தொலைபேசவும் ! ஐ லவ் யூ, அப்பா :)

- பாலா



*பாத்தியே! நாங்கள் எவ்வளவு ஒற்றுமையா இருக்கிறம். இந்த மனிசருக்குத்தான் ஒற்றுமையா இருக்கத் தெரியேல்லை.*

# சினித்துளி

## நான் அம்மாவாக மாட்டேன்



அபியும் நானும் படத்தில் த்ரிஷாவுக்கு அம்மாவாக நடிக்க அழைத்தார்கள் குஷ்புவை. முதலில் ஒப்புக் கொண்டவர் பிறகு என்னாச்சோ? அச்சச்சோ...நான் மாட்டேன் என்று சொல்லி விட்டார்.

ஏன் அம்மாவா நடிக்க பிடிக்கலையா குஷ்புவிற்கு என்றுகேட்டால், அதுதான் இல்லை என்கிறார்கள் கோலிவுட்டில். த்ரிஷாவுக்கு அம்மா வேடம் கட்ட குஷ்பு தயாராக இல்லாததற்கு பல காரணங்கள். அதில் ஒரு காரணம், இளம் நடிகைகள் எல்லாருமே குஷ்புவை எங்காவது விழாக்களில் பார்த்தால் வலிய போய் பேசி, கொஞ்ச நேரத்தில் வாயாட ஆரம்பித்துவிடுவார்களாம். ஆனால், எங்கு பார்த்தாலும் ஒரு புன்னகையோடு ஒதுங்கி கொள்வாராம் த்ரிஷா. அதுமட்டுமல்ல... அருகருகே அமர்ந்திருந்தாலும், தன் செல்போனில் மூழ்கிப்போய்விடுவாராம் த்ரிசா.

*ஓஹோ அப்ப இது கௌரவப் பிரச்சினையோ?*

## இப்படிச் செய்யலாமா?



சினிமாவிற்காகப் பல சேவைகளைச் செய்து வருபவர் முதலமைச்சர் கருணாநிதி.ஆனால், அவர் தலைமையில் நடந்த தமிழக அரசின் விருதுகள் வழங்கும் விழாவிற்கு பல நடிகர்கள் வராமல் போனதுதான் பலரின் கண்களை உறுத்திக் கொண்டிருக்கிறது.

சத்யராஜ், சிம்பு, தனுஷ், சிபிராஜ் போன்றவர்களுக்கு முறையாக அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டும் அவர்கள் வரவில்லை. அறிவிக்கப்பட்ட விருதுகளை கூட வாங்க வரவில்லை ராஜ்கிரணும், மீராஜாஸ்மினும். அவர்கள் சார்பில் வேறு யாராவது பெற்றுக் கொள்ள வந்தார்களா என்றால் அதுவும் இல்லை. நடிகைகள் பற்றி கேட்கவே வேண்டாம். த்ரிஷா, சினேகா, நயன்தாரா, ஸ்ரேயா என்று யாருமே அந்தப்பக்கம் எட்டிப்பார்க்கவில்லை.

*என்ன இருந்தாலும் அரசியலிலையும் அபாரமா நடிக்கிறவரை இப்படி அவமானப்படுத்தியிருக்கக் கூடாது.*

## கனவு நனவானது.



புலம் பெயர்ந்த தமிழர்களின் வலியை சொல்லும் படமாக உருவாகி வருகிறது ராமேஸ்வரம். தான் உருவாக்கி வரும் இந்த காதல் படத்தில் இந்தியாவுக்கு வலிக்காதபடி ஈழப்பிரச்சனையையும் தொட்டுக் கொண்டிருக்கிறார் இயக்குனர் செல்வம். ஜீவாதான் இப்படத்தின் நாயகன்.

'எல்லாரையும் ஏத்திப்போக கப்பல் வருமா..?' என்ற பாடலை எழுதியிருக்கிறார் கபிலன். இந்த வரிகளுக்கு இசையமைத்த நிரு ஈழத்திலிருந்து ஏழு வயதில் புலம் பெயர்ந்த தமிழராக லண்டனுக்கு சென்றவர். தான் படித்த பள்ளியையும், ஊரையும் நினைத்து எழுதப்பட்டிருக்கும் இந்த பாடலை கேட்டு தானே கரைந்து போய் இசையமைத்திருக்கிறார்.

இந்த கதைக்கு இவரை விட்டா இத்தனை ஜீவனோட வேற யாராலும் இசையமைச்சிருக்க முடியாது என்கிறார் இயக்குனர் செல்வம்.

## சிறுதுளி!

மலைக்கோட்டைப் பட வெற்றிக்குப் பிறகு தனது தொகையை விசாலமாக்கிக் கொண்டிருக்கிறார் விஷால் - இப்போது மூன்று கோடியாம்.

❖ ❖ ❖

வெகுநாட்களுக்குப் பின்பு மம்மூட்டி தமிழ்த் திரையில் தலை காட்டுகிறார் அவருக்கு மிகவும் பிடித்தமான சி.பி.ஐ ரோலில். படம் அறுவடை.

❖ ❖ ❖

'என் கேரக்டரைப் பற்றி நன்கு தெரிந்து அது வித்தியாசமானது என்று தெரிந்தால்தான் கால்ஷீட் பற்றிப் பேசுவேன். ஆனால் நான் கால்ஷீட் கொடுப்பதற்கு லொள்ளு செய்கிறேன் என்று கதை கட்டி விட்டார்கள்' எனக் கண்ணீர் வடிக்கிறார் சதா..

❖ ❖ ❖

கீர்த்தி சாவ்லா வீட்டில் ஜல் ஜல் சலங்கை சப்தம். தினம் நான்கு மணி நேரம் பரத நாட்டியப் பயிற்சி எடுத்துக் கொள்கிறாராம். கலைஞரின் உளியின் ஓசை படத்தில் சாமுண்டி என்ற பாத்திரத்தில் நடிக்கிறாரம்.

❖ ❖ ❖

காதல் படத்தில் அப்பாவிதோழியாக சந்தியாவுடன் அலைந்த சரண்யா இப்போது புனிதா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு விளையாட்டு, திருவாசகம் படங்களில் ஹீரோயினாக நடிக்கிறார்.

❖ ❖ ❖

ஒரு பாடலுக்கு மட்டும் நடனமாடும் வாய்ப்புக்களுக்கு நோ என்று சொல்லிவிடுகிறார் மும்தாஜ். நான் அரசி படத்தில் ஒரு அதிரடி ஆக்ஷன் பாத்திரத்தில் நடித்து வரும் அவர் அந்தப் படம் வெளிவரும் வரை இந்த ஒரு ஆட்ட விளையாட்டுக்கு வரப்போவதில்லை என்று உறுதியாக இருக்கிறாராம்

❖ ❖ ❖

முரளியின் 100 வது படமான சரணம் புதுமையான கதையம்சம் கொண்டதாம், எப்போதும் காதல் நாயகனாவே வந்து கடைசி வரை தன் காதலைச் சொல்லாமலேயே கழுத்தறுக்கும் பாத்திரங்களிலிருந்து இது மாறுபட்ட பாத்திரமாம்.

❖ ❖ ❖

நடிகை காஜல் அகர்வாலுக்கு புடவை கட்டும் காட்சி என்றாலே அலர்ஜி. 'குட்டைப் பாவாடை, கிழிசல் உடைன்னு ஏதாயிருந்தாலும் பரவாயில்லை, காத்தாட நடிக்கிறேன் என்று சொல்கிறாராம்.

❖ ❖ ❖



## விளாசுகிறார் விக்ரம்

கமலுக்குப் பிறகு நடிப்பு என்பதற்கு புதிய பொழிப்புரை எழுதிவருபவர் விக்ரம். இவர் கேமரா முன் வெறும் நடிப்பை மட்டும் வெளிப்படுத்தத் தெரிந்த சாதாரண நடிகர்களின் பட்டியலில் சேர்த்திட முடியாதவர். 'போராடி வெற்றி பெற்று இன்று புகழேணியில் உயரே நிற்கிறார். அவருடனான உரையாடலில் இருந்து...

*அப்படியென்ன 'பீமா'வில் பிரமாதம்?*

நிஜமாவே என்னை இம்ப்ரஸ் செஞ்ச கதை 'பீமா'. ஒரு மனுஷன் ரவுடியிசத்தை விரும்பலாமா... வேண்டாமா... விரும்புற ஒருத்தனை பற்றிய கதை தான் பீமா. ரவுடியிசம் தப்புதானே... அதன் விளைவையும் சொல்லுது கதை. நிழல் உலகத்துல - அண்டர் வேர்ல்டுல நடக்கிறமாதிரியான கதை.

*ஆக இதுவும் ஒரு அடிதடி - தாதா சம்பந்தப்பட்ட கதை தானா?*

அப்படிச் சுலபமா ஒரு வட்டத்துக்குள் அடக்கிட முடியாது இதை. ரொம்ப சாதாரணமா தப்புக்கணக்குப் போட்டுடாதீங்க. 'பீமா'வுக்குள் பல சுவாரஸ்யங்கள் கொட்டிக்கிடக்கு.

*நடிப்பு தவிர வேறு எதில் ஈடுபடுவதில் தனியார்வம் உண்டு?*

நான் நடிப்புக்காக கேரக்டர் வாட்ச் பண்றது உண்டு. ஏன் கேரக்டர் ஸ்டடின்னு கூட சொல்லலாம். அதில் ஒரு தனியான சந்தோஷம். ஒவ்வொரு கேரக்டரும் எப்படி எப்படி இருக்கும், என்னமாதிரி பர்ஃபாம் பண்ணணும்னு உற்றுப் பார்த்தாலே அது ஒரு மகா சுவாரஸ்யமா இருக்கும்.

இதுவே ஒரு கடல் மாதிரியான விஷயம். டெக்னிக்கல் விஷயங்களில் சினிமாவில் ஆர்வம் காட்டுவேன். டைரக்ஷன், கேமரா... இதுபற்றி பார்க்க கேட்க தெரிஞ்சுக்க எனக்கு ஆர்வம் உண்டு.

*ஒரு நடிகருக்கு சமூகப் பொறுப்பு எந்த அளவுக்கு அவசியம்?*

ஒரு சாதாரண மனிதனை விட ஒரு நடிகனை எல்லாருக்கும் பிடிக்குது. அவன் மீது மக்களுக்கு ஈர்ப்பு இருக்குது. நம்மை ரோல்மாடலா நினைக்கிறாங்க. அதனால அவங்க விருப்பம் - நம்பிக்கைக்கு எதிரா இருக்க முடியாது. பொறுப்புள்ளவனா சமூகப் பொறுப்பு சமுதாய அமைதி விரும்புகிறவனா இருந்தாக வேண்டும்.

*நடிப்பு - நடிகர், அடுத்த இலக்கு?*

நடிப்புங்கிறதோட அடியாழம் எது வரைக்கும் போகும்? அதன் அகலம் என்ன...! விடை தெரியாத கேள்வி இது. நாளுக்கு நாள் மனிதனும் அவன் நடை உடைகளும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் விதமும் மாறிக்கிட்டே போகுது. நடிப்பும் அப்படித்தான்

நடிப்பதே தெரியாமல் யதார்த்தமா.. அதையும் தாண்டி போய்க்கிட்டே இருக்கு. நடிப்புல அடைய வேண்டியதே நிறைய இருக்கே.

- வெட்டுனியா

“இதுக்கும் ஆரும் போய் காசு வாங்குவானா?”
(கேட்டாலும் தரவா போறியள்?)

இது முற்றிலும் இலவசமான சேவை

www.orudirectory.com

# சினிமா

## ஜீவா - இன்னொரு கமல்



**சலனன்**
*( ஒரு பேப்பருக்காக )*

இளம் தமிழ்த்திரை நடிகர்களில் பலரது கவனத்தை கவர்ந்திருப்பவர் ஜீவா. பூவே உனக்காக, சூரியவம்சம் போன்ற வெற்றிப் படங்களின் தயாரிப்பாளரான Super Good பிலிம்ஸ் சௌத்திரியின் மகன்தான் ஜீவா.

ஜீவா நடித்த முதலாவது திரைப்படம் ராம். இத்திரைப்படம் 'பருத்திவீரன்' அமீர் இயக்கிய இரண்டாவது திரைப்படம். இத்திரைப்படத்தில் நடித்ததன் மூலம் ஆசியாவிலேயே சிறந்த நடிகருக்கான விருதினை ஜீவா பெற்றிருந்தார். ராம் திரைப்படத்தின் மூலம் ஆசியத் திரைப்பட விழாவில் சிறந்த இசையமைப்பாளருக்கான விருதினை யுவன் சங்கர் ராஜா பெற்றிருந்தார்.

ஏற்கனவே ஆசியத்திரைப்பட விழாவில் 'வீரபாண்டியகட்டப்பொம்மன்' திரைப்படத்திற்காக சிவாஜி கனேசன் சிறந்த நடிகருக்காகவும், ஜி ராமநாதன் சிறந்த இசையமைப்பாளருக்காகவும் விருதினைப் பெற்றிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் சிவாஜி கணேசனுக்குப் பிறகு இந்த விருதினைப் பெறுபவர் கமல்காசனோ, விக்ரமோ அல்லர், ஜீவா.

பொதுவில் தமிழ்ச்சினிமாவில் நடிப்பிற்கு 'பஞ்சப்பாட்டு' தான் பாட வேண்டும். என்றாலும் சிவாஜிகணேசன், கமல்காசன், விபரம் ஆகியோர் எல்லாவகைப் பரிமாணங்களையும் வெளிப்படுத்தக்கூடிய நடிகர்கள். எம்.ஆர். ராதா, பாலையா, நாகேஷ், சாவித்திரி, லட்சுமி, ரஜனிகாந்த் ஆகியோர் சிறந்த நடிகர்களாக இருந்தாலும் முழுப் பரிமாணத்தையும் வெளிப்படுத்துவார்களோ என்பது கேள்விக் குறிதான்.

இந்தவகையில் சிவாஜிகணேசன், கமல்காசன், விக்ரம் வரிசையில் ஜீவாவும் வந்து சேர்கிறார். ராம் திரைப்படத்தை தொடர்ந்து 'டிஷ்யும்' திரைப்படம் ஜீவாவின் நடிப்பாற்றலை வெளிப்படுத்தியிருக்கிறது. ஒரு 'ஸ்டண்ட் மாஸ்டர்' இற்குரிய உடல் மொழியை ஜீவா அதில் அற்புதாமாகக் கொணர்ந்தார்.

தனுஷ், சிம்பு பரத்,ஆர்யா விசால் என்று மிக இளமையான நட்சத்திரங்கள் கால் பதித்த சினிமாக்களத்தில் ஜீவா வித்தியாசமாக மிளிர்கிறார். இவர்களுள் விசால் வேறொரு கோணத்தை யோசிக்கிறார். ரஜனிகாந்த், விஜய் போட்ட பாதையில் பயணம் செய்யவே விசால் விரும்புகிறார்.

ஜீவா அப்படியில்லாமல் நடிப்புக்குத் தீனி தேடி அலைகிறார். சேரிப்புறத்து விளிம்பு நிலை மகனாக 'ஈ' திரைப்படத்தில் ஜீவாவின் பாத்திர வார்ப்பு அச்சொட்டாகப் பொருந்தியது. நக்சலைட்டுகளுக்கு உதவுபவராக ஜீவா சிறப்பாகவே நடித்தார்.

அதன்பிறகு 'பொறி' போன்ற படங்களில் நடித்தாலும் 'கற்றது தமிழ்' திரைப்படத்தில் ஜீவாவின் நடிப்பு தேர்ந்த கலைஞனைக் காட்டியது. ஜீவாவின் நடிப்புக்கு 'கற்றது தமிழ்' ஒரு திருப்புமுனையான படம் என்றே சொல்லலாம்.

**இந்தியாவில் சிவாஜி கணேசனுக்குப் பிறகு இந்த விருதினைப் பெறுபவர் கமல்காசனோ, விக்ரமோ அல்லர், ஜீவா.**

அதையடுத்து வர இருக்கிறது 'ராமேஸ்வரம்' திரைப்படம். இதில் ஈழ அகதியாக, யாழ்ப்பாண மைந்தனாக ஜீவா தோன்றுகிறார். ஈழ மண்ணின் வலியைச சொல்லும் இத்திரைப்படத்தில் ஜீவா அசாத்தியமாக நடிப்புத் திறனை வெளிப்படுத்தியிருந்தார் எனச் சொல்லப்படுகின்றது. மற்றவர்கள் நடிக்கப் பயப்படும் இப்பாத்திரத்தில் ஜீவா நடிக்கத் துணிந்திருப்பதே பெரும் பாராட்டுக்குரியது.

எப்போதும் பரிசோதனைக் களத்தில் துணிந்து நிற்போர் வெற்றி பெறுபவர்கள். சினிமாவை வியாபாரமாக மட்டும் பார்க்காமல் கலையாக எண்ணுவோர் காலத்தில் நின்று நிலைப்பார்கள்.

எம்.ஜி.ஆர் நடிகராக அறியப்பட்டதிலும் பார்க்க முதலமைச்சராகவே மக்கள் அறிந்தனர். ஆனால் சிவாஜி கணேசன் நடிகர்களுக்கு அகராதியாக விளங்குகிறார். இது கமல்காசன் விக்ரம் ஆகியோருக்கும் பொருந்தும். ஜீவாவுக்கும் பொருந்துமா?















### எம்மவர் முயற்சியில்

## இளம்புயல்

இளம்புயல் திரைப்படம் புலம் பெயர்ந்து தற்போது டென்மார்க்கில் வாழும் ஈழத் தமிழ் மக்களும், தமிழகத்தில் சாதனை படைத்துவரும் பிரபல தமிழ் கலைஞர்களும் இணைந்து தயாரிக்கும் ஒரு புதிய முயற்சியாகும்.

இந்தத் திரைப்படத்தில் கே.எஸ்.வஸந்த் கதாநாயகனாகவும் இசையமைப்பாளராகவும் பணியாற்றியிருக்கறார்.

தமிழ், மலையாள திரைப்படங்களில் கதாநாயகியாக நடித்து வரும் பூர்ணிதா இப்படத்தின் கதாநாயகியாக நடிக்கிறாா

இவர்களுடன் சுஜிபாலா, ஸ்ரீமன், கருணாஸ், ரவிசங்கர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்

பிரபல பின்னணிப் பாடகர்களான கார்த்திக், சிறீநிவாஸ், மாணிக்கவிநாயகம், எஸ்.பி.பி.ராமு, அனந்து, ரெய்கானா, மாலதி, சயந்தவி, ரோசினி ஆகிய பிரபல திரையிசைக் கலைஞர்கள் இளம்புயலில் பாடி மனங்களை கொள்ளை கொண்டுள்ளனர்.

எதிர்கால உலகத்தை ஆட்சி செய்யப் போவது இணையமே. ஒன்றே உலகம் என்ற கணணியின் கொள்கையை இன்று உலகில் அறிமுகம் செய்து நிற்பது இணையமே. அந்த இணையத்தில் சாதனை படைத்து உலகத்தின் சிகரங்களை தொட முயன்ற ஒரு குடும்பத்தில் நடைபெறும் படுகொலையும், அதைத் துப்பறிய நடைபெறும் மயிர்க்கூச்செறியும் சம்பவங்களுமே திரைக்கதையாகும்.

இயக்குநர் கி.செ.துரையின் இயக்கத்தில் வெளிவந்துள்ள இளம்புயல்கள் எத்தகைய திரைப்படத்துறையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்


precise design & print
you imagine we implement

creative artwork from **concept to design**

**seven** | zero
graphic designers
**020 7043 4319**

45B crusoe road | mitcham | Surrey CR4 3LJ



அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் | அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும் அனைத்து அச்சு வேலைகளுக்கும்....


வல்வெட்டித்துறை நலன்புரிச் சங்கம் (பிரித்தானியா)
வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம் (கனடா)
இணைந்து நடாத்தும்
வல்வை வரலாற்று நாள்
Valvai Historical Day
வல்வையின் ஒளிப்பட மற்றும் நூல்களின் கண்காட்சியும்,
புறநானூறு, பட்டினப்பாலை, யாழ்ப்பாணச் சரித்திரம்
போன்றவற்றில் இடம்பெற்ற சம்பவங்களுடன் 200 படங்கள்,
168 பக்கங்களையும் உள்ளடக்கிய
"வல்வெட்டித்துறை வரலாற்றுச் சுவடுகள்"
நூல் வெளியீடும் இடம்பெற உள்ளது.
NOV 18 SUNDAY 6:00 PM
SIVAYOGAM
180-186 Upper Tooting Road
Tooting, London, SW17 7EJ
உறவுகளே! நண்பர்களே!
பிரிந்த எம் மண்ணை நினைவில் நிறுத்திட ஒன்று கூடுவோம்.
வல்வெட்டித்துறை நலன்புரிச் சங்கம் (பிரித்தானியா)
தலைவர்: N.இரத்தினசிகாமணி 07946265289
செயலாளர்: S. வசிகரன் 07961426012
வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம்
ந. நகுலசிகாமணி & உமா
Valvai Historical Document Conservation Centre, Canada
www.vvthistory.com Tel: 416 438 7650


இலக்கியா
ELAKKIA
Authentic Sri Lankan Snacks & Savouries
Tease your taste bud with our exotics fiery & crunchy snacks....!
Crackling... Pakoda
Curly... Murukku
Nibbly... Mixture
Porus... Payatham-Uroooondai
to Fill Your Snack Tin..! to Please Your Guest..! to Get You Party Swing..!
For the full List call us on.....! 020 8799 7180
Ruby's Food Products Ltd


15 years
Fancy a feast without the fuss?
Sri Lankan & South Indian catering at its best
From sumptuous buffets to elegant silver service...
From lavish wedding receptions to family celebrations, arangetrams to garden dinner parties we can bring our experienced team to cater to the high standards you expect.
We create themes for any event...
adapting menus and presentations accordingly, tailoring each package to suit your unique needs.
Order Hotline: 020 8799 7180
RUBY'S
Acclaimed Sri Lankan Caterers to
Marriott Hilton
Unit 4, Walmgate Road
Perivale, Middx UB6 7LH
Tel. 020 8799 7180
Fax. 020 8799 7181


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தீபாவளி, நத்தார், பொங்கல்
நல்வாழ்த்துக்கள்
50%-60%
விசேட விலைக்கழிவில்
பட்டுப் புடவைகள்
பஞ்சாபி வகைகள்
சுரிதார்கள்
சிறுவர் ஆடைகள்
வைரத்தாலிக் கொடி, அத்துடன் பழைய தங்கத்தில் புதிய டிசைன் நகைகளை செய்து கொள்ள நாடுங்கள் இத்துடன் வாத்திய கருவிகளும் விற்பனைக்கு உண்டு.
Anthoorium
JEWELLERY & TEXTILES
FINEST QUALITY 22CT GOLD DIAMOND JEWELLERY & TEXTILES
சாறி பிளவ்ஸ் தைத்துக் கொடுக்கப்படும்.
102b Burlington Road, New malden, surrey, KT3 4NT,
Tel: 0208 942 8001
Fax: 0208 942 8007
web: www.anthoorium.co.uk
email. sales@anthoorium.co.uk